# மெய்யியல் நோக்கு

1994 — 95 கல்வி ஆண்டு * ஒக். 1994 — பெப். 1995

விழி : 1 பார்வை : 1

" உண்மை அறிவை அடைய "

# Dedication

*We dedicate this journal to all who laboured and sacrificed their lives so that all humans could live with human dignity in the human society.*

## சமர்ப்பணம்

மனித சமுதாயத்தில் மனிதர் ஒவ்வொருவரும் மனித மாண்புடன் வாழ்வதற்காக உழைத்து உயிர்கொடுத்த ஒவ்வொருவருக்கும் இதைச் சமர்ப்பிக்கின்றோம்.

# மெய்யியல் நோக்கு

(அரையாண்டுச் சஞ்சிகை)



ஆசிரிய குழாம்:

| | |
|---|---|
| N. மரியசேவியர் | Ph. D. |
| A. சபாரட்ணம் | B. A. (Hons) |
| A. J. V. சந்திரகாந்தன் | Ph. D. |
| S. எட்வின் | Ph. D |
| V. யுகபாலசிங்கம் | M. A. |
| L. பொன்னையா | L. Ph. |
| M. ராஜரட்ணம் | B. A. |
| F. டானியல் | M. A. |
| M. பொனவெஞ்சர் | M. Ph. |
| D. A. யோசவ் | Ph. D. |

ஆசிரியர்: *D. A.* யோசவ்

துணை ஆசிரியர்கள்:

| | |
|---|---|
| S. J. சனிஸ்ரன் | Dip. Ph, |
| G. L. ஞானதேவா | B. A. (Hons) |



விநியோகம்:

*S. A.* றொசான்

*S. A.* அருட்செல்வன்

வெளியீடு, விநியோகம்:

மெய்யியல் துறை,
சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

விலை:

ஆண்டுச் சந்தா ரூபா 40/-
தனிப் பிரதி ரூபா 25/-

# Philosophical Journal

(Bi - annual)



**Fditorial Board:**

| | |
|---|---|
| *N. M. Saverimuttu* | *Ph. D.* |
| *A. Sabaratnam* | *B. A. (Hons)* |
| *A. J. V. Chandrakanthan* | *Ph. D.* |
| *S. Edwin* | *Ph. D.* |
| *V. Ugabalasingam* | *M. A.* |
| *L. Ponniah* | *L. Ph.* |
| *M. Rajaratnam* | *B. A.* |
| *F. Daniel* | *M. A.* |
| *M. Bonaventure* | *M. Ph.* |
| *D. A. Joseph* | *Ph. D.* |

**Editor:** *D. A. Joseph*

**Sub Editors:**

| | |
|---|---|
| *S. J. Sunnystan* | *Dip. in Phil.* |
| *G. L. Gnanadeva* | *B. A. (Hons)* |



**Distributors:**

*S. A. Roshan*

*S. A. Arudselvan*

**Publishers, Distributors:**

*Faculty of Philosophy,*
*Xaverian Seminary,*
*Columbuthurai,*
*Jaffna.*

**Subscription:**

*Annual Rs. 40/-*
*Single Rs. 25/-*

# பொருளடக்கம் — Contents


- அதிபரின் ஆசிச் செய்தி 04
  Message of the Rector 04
- ஆசிரியரின் அறிமுகம் 05
  Editor's Introduction 07
- மெய்யியலும் அதன் நடைமுறைப் பயன்பாடுகளும் 09
  S. ஸ்ரீபன்
  (Philosophy and its Practical Values) 15
- 'மனிதன்' என்றும் ஆழம் அறியமுடியாத ஒரு புதிரே 17
  D. A. ஜோசப், Ph. D.
  (Man is a Mystery) 21
- தத்துவம் என்றும் மானிடத்திற்கு ஒரு பசுமை ஒளியே 23
  V. யுகபாலசிங்கம், M. A. (Phil)
  (Philosophy as a Green Light for all Human Beings) 28
- படைப்பா? கூர்ப்பா? மனிதனின் தோற்றம் - ஓர் அறிமுகம் 29
  A. ஆனந்தக்குமார்
  (Creation or Evolution) 33
- வாழ்வின் அர்த்தம் தேடும் மனிதன் 34
  இதயதாஸ்
  (Man's Search for Meaning of Life) 38
- பிளேற்றோவினதும் மறுமலர்ச்சிக் காலத்தினதும் அரசியல் மெய்யியல் தத்துவங்கள் 39
  P. F. இராஜசிங்கம்
  (A Comparison of Plato's Republic with the Political Philosophy of Renaissance) 44
- சமயம் பற்றிய இருத்தலியலாளரின் அணுகுமுறை 46
  S. செபநேசரத்தினம்
  (Atheistic Existentialism) 54
- முழு மனித விடுதலை 55
  அ. அகஸ்ரின்
  (Integral Human Liberation with Particular Reference to the Tamils' Freedom Struggle in Sri Lanka. 63

# அதிபரின் ஆசிச்செய்தி

புனித பிரான்சிஸ்கு சவேரியார் கல்லூரி மாணவர்களும், விரிவுரையாளர்களும், ஏனைய மெய்யியல் சிந்தனையாளர்களும் ஒன்றிணைந்து இவ்வரையாண்டு மெய்யியல் வெளியீட்டை அளிப்பதில் பெருமையும், பெருமகிழ்ச்சியும் கொள்ளுகின்றேன்.

இவ்வெளியீடு குருத்துவக் கல்லூரியின் வளர்ச்சியில் இன்னோர் புதிய படியாகும். இக்கூட்டு முயற்சி மெய்யியல் மாணவர்களுக்கு மாத்திரமல்ல, தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட அனைவருக்கும், தனித்துவத்தை இனங்காணும் எமது தமிழினத்தின் உறுதிப்படுத்துதலுக்கும் உதவியாக இருக்கும்.

மேற்கத்திய மெய்யியலில் உறைந்து ஊறி வந்த கிறிஸ்தவ சமுதாயம், அண்மைக் காலங்களில் திறந்த மனப்பான்மையுடனும், பண்பாடுகளுடன் உறவாடும் நோக்குடனும் கீழைத்தேய மெய்யியல் வளர்ச்சியை ஊக்குவித்திருக்கிறது. மெய்யியல் மாணவர் இரண்டு மெய்யியலையும் பயனுடன் கற்பதில் ஆர்வம் காட்டுவது அவசியம்.

கிறிஸ்தவம் ஏனைய விசுவாசிகளுடன் தேடும் உறவும் உரையாடலும் ஆழப்படுத்தப்படவும், மதங்கள் உண்மையை அறிய எடுக்கும் முயற்சிகள் பயன் பெறவும் இச்சிறிய வெளியீடு பயன்படுவதாக.

இவ்வெளியீடு சிறந்து வளர வாழ்த்துவதோடு, அண்மைக்காலத்தில் இத்துறையினுள் அதிக எண்ணிக்கையில் புக முன்வந்தவர்களுக்கு உதவியாக அமையும் எனவும் நம்புகிறேன்.

எஸ். ஜே. இம்மானுவேல்
Ph. D.

# *Message of the Rector*

*I am happy to greet the first issue of the philosophical bi-annual from St. Francis Xavier's Seminary, Jaffna. Its appearance is a sign of the growth of the seminary. This is mainly a joint effort of the students and staff of the seminary along with the contributions of other thinkers of philosophy.*

*We Christians have been encouraged recently to study, in addition to Western Philosophy, Eastern Philosophy too. The Church has in recent times opened itself for a mutual enrichment with other Cultures and Philosophies. The dialogue the Church seeks with the people of other faiths will be deepened and enriched by the services of this bi-annual.*

*I wish this periodical all success and hope that it will prove to be valuable to the appreciably large numbers launching in recent times into the field of Philosophy.*

S. J. Emmanuel
*Ph. D*

# ஆசிரியரின் அறிமுகம்

மெய்யியல் (தத்துவவியல்) என்ற உளப் பயிற்சியை பலர் அதிகமாகக் கருத்தில் கொள்வதில்லை. ஆனால் மனிதன் சிந்திக்கத் தொடங்கியபோதே மெய்யியலும் ஆரம்பித்துவிட்டது. பாரம்பரிய கல்விக் களஞ்சியங்களில் மெய்யியல் உயர்மதிப்பைப்பெற்றதொன்றாகும்.

மெய்யியல் 'விஞ்ஞானங்களின் அரசி' என ஸ்கொலாஸ்ரிச (மத்தியகால) தத்துவம் அழைப்பது பொருத்தமானதே. ஏனெனில் அது அண்டத்தில் (பௌதீகத்தில்) உள்ள ஒவ்வொரு விஞ்ஞான கற்கை நெறிக்குட்பட்டவற்றின் அண்மிய காரணங்களையும் அவற்றின் இறுதிக் காரணியையும் அகிலத்தில் உள்ள அனைத்தின் கூட்டு மொத்தமான இறுதிக் காரணியையும் தேடிக் காண முயல்கின்றது.

பல பல்கலைக்கழகங்களிலுள்ள கல்வித்துறைகளில் இது ஒன்றென்றாலும் பலர் இதனை அதிகமாக நாடுவதில்லை; காரணம், பொருண்மிய நோக்கில் வேலைவாய்ப்பு ஆகியவற்றைக் கொடுக்கச்கூடிய வாய்ப்புக்கள் குறைவாயும், இந்நெறியில் சில முக்கிய பகுதிகள் புரிந்துகொள்வதற்குக் கடினமாகவும் இருப்பதே. ஆயினும் மெய்யியலை எல்வித பின்னழுத்தங்களும் இன்றி நோக்கினால் அதன் கருத்துத் தெளிவாகும். மெய்யியல் என்ற அதன் பெயரிலேயே அதன் கருத்தில் ஒரு பகுதி புலப்படும். உண்மையை அறிதல் மனிதனின் இயற்கையான நாட்டமே. அதன்படி மனிதன் முழு உண்மையைக் கண்டறியும்வரை தேடுபவனாகவே இருப்பான். எக்கலையிலும் அவன் உண்மையை நாடித் திருப்தியடைவதே அவனின் ஆழ்ந்த விருப்பாகும்.

மனிதனின் செயல்களையும் அதன் நோக்கத்தையும் நெறிப்படுத்தும் ஒரு வழிகாட்டி இக் கல்வி. இதன் அடிப்படையில் ஒவ்வொரு பண்பாட்டிற்கும் உரிய முறையில் மெய்யியல் உருவாகியிருக்கின்றது. எங்கெங்கு புதிய பண்பாடு தோன்றுகின்றதோ, அங்கெல்லாம் மெய்பியல் தன் இயற்கை அடிப்படையில் புதிய பண்பாட்டிற்கு ஏற்றவகையில் உருவாகும்.

தமிழினம் மனித மாண்புடன் வாழ, பல இன்னல் இடையூறுகள் மத்தியில் சிக்கி அவற்றிலிருந்து விடுபட முயற்சிக்கும் இவ்வேளையில், அதற்குரிய தனித்துவ மெய்யியல் உருவாக வேண்டும். உருவாகும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் நம்பிக்கையூட்டுவதாகவும் தென்படுகின்றன.

பிறமொழிகளில், குறிப்பாக ஆங்கிலத்தில் அனேகம் மெய்யியல் நூல்கள் இருக்கின்றன. தமிழில் எம்மத்தியில் அவை குறைவே. தமிழில் மெய்யியல் சிந்தனை பற்றி நோக்க, விளங்க இச் சஞ்சிகையின் வெளியீடு சிறிய படிக்கல்லாகும்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல்துறை விரிவுரையாளர்களும் மாணவர்களும், மெய்யியலில் ஆர்வம் மிக்க மேலும் பல சிந்தனையாளர்களும் எடுக்கும் இம்முயற்சி, மெய்யியல் பயிலும் மாணவர்களுக்கும் அதை அறிய ஆர்வம் கொள்பவர்களுக்கும் பயனுடையதாகும் என்பதில் ஐயமில்லை.

இச் சிந்தனைச் சிற்பம் உருவாகப் பலரின் கைவண்ணங்கள் ஒன்றிணைந்தன. அவர்கள் இங்கு நினைவு கூரப்படாவிடின் அச்சிற்பத்தில் இருக்கும் வண்ணங்களின் கவர்ச்சியை உணர்ந்து கொள்ள முடியாது.

இச்சஞ்சிகையில் உள்ளடக்கவேண்டிய ஆக்கங்களைத் தெரிவுசெய்யவும், நெறிப்படுத்தவும் உருவாக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் சண்முக வித்தியாலயம் கரம்பொன் அதிபரும், வரலாறு, சைவசித்தாந்தத் துறைகளில் அறிஞருமான அ. சபாரெட்டிணம் B. A. (Hons), நில அளவையாளரும் 'புதிய உலகம்' வெளியீட்டாளருமான திரு. அ. சந்தியாப்பிள்ளை, வட்டுக்கோட்டை உயர்கல்வி நிறுவனத்திலும், சுண்டிக்குளி பரியோவான் கல்லூரியிலும் விரிவுரையாளரான திரு V. யுகபாலசிங்கம் B. A. (Hons), Dip. in Ed., M. A (Phil.), ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஆசிரியர் எம்.ஜே. ராஜரட்டினம் B.A., யாழ் பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ச. நாதன், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை திருமதி எம். சவிரிமுத்து B. A. ஆகியோரை நன்றியுடன் நினைவுகூருகிறோம். இவர்களில் முதல் மூவரின் சேவையும் பிரத்தியேக பாராட்டுக்குரியது.

அட்டைப் படத்தில் கலையாற்றலைக் காட்டியுள்ள அருட்செல்வன் A. ஆனந்தக்குமார், திருமதி பப்சி மரியதாசன் ஆகியோருக்கும் பெறுமதி மிக்க குறிப்புக்களைத் தந்துதவிய அருட்தியாக்கோன் D. M. ரவிச்சந்திரனுக்கும் எமது நன்றிகள்.

இச் சஞ்சிகையை வாசகர்களுக்கு கையடக்கமான விலையில் கிடைப்பதற்கு நிதியுதவி வழங்கிய ஜேர்மனிய மிஸ்ஸியோ நிறுவனத்தாருக்கு எமது நன்றிகள்.

யாழ். குருநகர் அன்னை அச்சகத்தின் பொறுப்பாளர் செ. அழகராசா அவர்களதும் அவர் சகாக்களினதும் கைதேர்ந்த அனுபவம் இச்சஞ்சிகையில் தெரிகிறது அவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

ஆண்டுக்கு இரு இதழ்களாக இது தொடர்ந்தும் வெளிவரவுள்ளது. எனவே உங்கள் ஆக்கங்கள், கருத்துக்கள், விமர்சனங்கள் இது பயன்மிக்கதாக வளர உதவும்.

ஜோ. அ. ஜோசப்

# EDITOR'S INTRODUCTION

Philosophy is one of man's age old treasures. In fact, the beginning of human activity itself is the expression of philosophy.

It is fitting that Medieval Scholasticism called Philosophy the 'Queen of Sciences'. For, besides inquiring into the proximate causes of realities, it dives deeper into their ultimate or last reason.

Philosophy is one of the disciplines taught in almost all the univer sities of the world. But due to misconception and lacklustre of practical advantages and due to the difficulty of comprehension, many desist from pursuing this field.

If one were to look at it free from all bias. one would be able to see its depth and its paramount importance, realizing that it pervades every sphere of man's activity like an underground - stream. Everyman in his true self seeks truth in everything and until be finds it, his mind will not be satisfied. The ultimate satisfying truth is the object of search in philosophy. Since everyone is a seeker after this, every person is basically a philosopher. Philosophy is a guide to man's life.

Every culture has its own form of philosophy. While the Tamils here struggle through unprecedented and untold experiences in the 2 millenia of their history, it is evident that their culture has produced the 'choicest flower' and will have genius to produce a suitable philosophy reflecting the culture that is evolving now.

There is a lot of philosophical literature in other languages, particularly in English, but very little in Tamil in our region. This Tamil Philosophical Journal 'Meiyiyal Nokku' will, we hope, serve as a stepping-stone for further progress. This journal, being the outcome of the joint effort of the staff and the students of the Faculty of Philosopy in St. Francis Xavier's Major Seminary and of other philosophical thinkers, will satisfy the need for Tamil philosophical literature to some extent. It will no doubt, arouse interest in the uninitiated, and encourage the young enthusiasts of philosophy.

This venture is the fruition of several hands and minds; and if they are not remembered, the value of the work cannot be adequately appreciated.

The following have helped in evaluating the articles and providing constructive analysis and other valuable help. The first three need to be mentioned very specially for their dedicated and unstinted support.

Mr. A. Sabaratnam B. A. (Hons,), former teacher of St. Antony's College Kayts, Principal of Sunmuga Vidyalayam Karampon, Kayts, historian and very knowledgeable is Hindu and Saiva Siddhanta Philosophies;

Mr. A. Santhiapillai, Surveyer, and Publisher of 'Puthiya Ulaham; Mr. V. Ugabalasingham B. A. (Hons), Dip. in Ed., M. A. (Phil). Lecturer at the Academy of the Jaffna College and St. John's College Chundikuli, Mr. M. J. Rajaratnam B. A., teacher at St. Antony's College Kayts, Dr. S. Nathan, Senior Lecturer of Political Science in the Department of Economics at the University of Jaffna; and Mrs Margaret Saverimuthu B.A., English trained teacher.

Revd. Deacon D. M. Ravichandran helped with his valuable suggestions. The artistic hands of Bro. Anantha kumar and Mrs. D. Popsy Mariathasan B.Com. and Trained Art Teacher adorn the cover of the journal.

We are grateful to the Missio, Germany, for the subsidy given by them which made it possible to price-mark this to be within the reach of everyone.

In fine, but not the least, our sincere thanks are due to the team at the Annai Press, Gurunagar, for presenting our efforts to the readers in an appreciable form.

Your creative thoughts in the form of articles, opinions and constructive criticisms will enhance the growth of this biannual journal.

**D. A. Joseph**

# மெய்யியலும் அதன் நடைமுறைப் பயன்பாடுகளும்

S. ஸ்ரீபன்

மெய்யியல் மனிதனுக்கு புதிய தொன்றல்ல. அது மனிதனுடன் கூடவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு துறை. மெய்யியல் அவனுடன் பயணம் செய்கின்றது. அது மனிதர்களுக்கு மத்தியில் தோன்றி, மனித வாழ்க்கை யுடன் பின்னிப்பிணைந்துள்ளது. ஆனால் மெய்யியல் மனிதர் மத்தியில் வாழ்ந் தாலும், மனிதன் அதனை இனங் காணத் தவறுகின்றான். மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான நீர், வளி, ஒளி, தினமும் மனிதனுக்குக் கிடைக் கின்றது, அவன் அதுபற்றிச் சிந்திப்ப தில்லை. அவ்வாறே மெய்யியலும் மனித வளர்ச்சிக்கு முக்கியமானது மெய் யியல் ஆராய்கின்ற அனைத்துப் பிரச் சினைகளும் ஒவ்வொரு மனிதனும் தன் னைத் தானே கேட்கும் கேள்விகளில் இருந்து எழுகின்றன. நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? மனித வாழ்வின் நோக்கம் என்ன? இவ்வாறான கேள்வி களுக்குப் பதில் கொடுக்க முற்படுகின்ற ஒரு துறைதான் மெய்யியலாகும். எனவேதான் மெய்யியல் மனிதனுடைய அறிவுப் பசியைப் போக்கி, அவன் தன் னையும், தான் வாழ்கின்ற சூழலையும் அதற்கு அப்பாற்பட்டவைகளையும் புரிந்துகொள்ள, தெரிந்துகொள்ள உதவி புரிகின்ற துறையாக விளக்குகின்றது.

## மெய்யியல் பதங்கள்

மெய்யியல் என்றால் மெய்+இயல். மெய் என்பது உண்மை, ஞானம், அறிவு எனப் பொருள்படும். இயல் என்றால் தத்துவம் அல்லது கோட்பாடு என்று அழைக்கப்படும். எனவே மெய்யியல் என்றால் உண்மை, ஞானம் அல்லது அறிவு பற்றிய தத்துவமாகும். கிரேக் கத்தில் மெய்யியலை ஞானத்தின் காதல் என்றழைப்பர். ஒரு மெய்யியலாளர் ஞானத்தின் காதலர் அல்லது நண்பர் என அழைக்கப்படுகிறார். மெய்யியல் கி மு 650—600 ஆண்டளவில் கிரேக் கத்திலே தேலீஸ் (Thales) என்ற மெய் யியலாளனுடன் ஆரம்பிக்கப்பட்டது என்று நாம் படிக்கின்றோம்.

இந்த ஆரம்ப கிரேக்க மெய்யிய லாளன் தேலீசை, கிரேக்க மெய்யிய லின் தொட்டில் என அழைக்கின்றார் கள். ஆனாலும் மெய்யியல் தேலீசின் காலத்தில் மட்டும் தோன்றியதொன் றல்ல மாறாக ஆரம்ப கால ஆதிமனித னோடு மெய்யியல் காணப்படுகிறதை நாங்கள் நன்கு அறிவோம். அதனால் தான் மெய்யியல் அனைத்தையுமே உள் ளடக்கிய ஒரு முழுமை நிறைந்த துறை யாகக் காட்சியளிக்கின்றது.

## வரைவிலக்கணம்

இங்கு நாங்கள் வரைவிலக்கணம் எனக் குறிப்பிடும்போது அது ஒரு குறிக் கப்பட்ட வரைவிலக்கணத்தையன்றி, மாறாக பல மெய்யியலாளர்களினால் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணத்தையே குறிக்கின்றது. அல்லது மெய்யியல் பற் றிய நோக்கம், கருத்து என்ன என் பதைச் சுட்டிநிற்கின்றது. ஏனெனில் நாங்கள் மெய்யியலை ஒரு வரையறுத்த துறைக்குள் அடக்க முடியாது. மெய் யியல் ஒரு பரந்த துறையாகும்.

மேலைத்தேச ஆதிக் கிரேக்கர் ஹோமர் கூறுகிறார்: ஒரு தச்சன் எவ்

வாறு ஒரு மரத்தை அழகான தளபாடமாக மாற்றுகின்றானோ, அவ்வாறே மெய்யியலும் ஒரு மனிதனை ஒரு சிந்தனையுள்ள பிராணியாக மாற்றுகின்றது. எங்கெல்லாம் மெய்யியல் இருக்கின்றதோ அங்கெல்லாம் அறிவை அடைகின்ற ஆர்வமும், முயற்சியும், ஞானத்தைத் தேடுதலும் காணப்படும்.

புகழ்பெற்ற கிரேக்க தத்துவ ஞானி பிளேட்டோ (Plato) கூறுகிறார்: மெய்யியலின் நோக்கம் இயற்கையைக் கண்டுபிடிப்பதும், அதன் உண்மைப் பொருளைக் கண்டடைதலும் ஆகும் (absolute truth).

மெய்யியலாளர் ஹெறோடொட்டஸ் (Herodotus) கூறுகிறார்: மெய்யியல் ஒரு பொருளைக் கண்டுபிடிப்பதற்கான ஆர்வம் மட்டுமே. மெய்யியல் ஒரு பொருளைக் அறிவதற்கான ஆர்வத்தை மனிதனுக்கு அளிக்கின்றது.

ஆங்கில அகராதி கூறுகிறது: மெய்யியல் ஒரு அறிவுத்துறை. இது இயற்கை பற்றிய உண்மைகளையும், அது கொண்டுள்ள காரணகாரியத் தொடர்புகளையும் தெளிவாக எமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

## மெய்யியலின் பொருள்

மனிதன் தன்னைப்பற்றிய பூரண அறிவை அடைவதற்கான ஒரு வழிகாட்டியாக மெய்யியல் திகழ்கின்றது. மெய்யியல் ஒரு சிந்தனைத்துறை, இது மனிதனுடைய அறிவு சார்ந்த உள் உணர்வுகளைத் தட்டியெழுப்பி, அவனுடைய உள்ளத்திலே எழுகின்ற கேள்விக்கணைகளுக்குப் பொருளைக் கண்டடைய, அவன் தனது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றி வாழ வழி சமைத்துக் கொடுக்கின்றது.

மனிதனுடைய வாழ்க்கை, பிரச்சினைகளால் கட்டுப்பட்டது. அந்தப் பிரச்சினைகளைப்பற்றி பேசி ஆய்வுசெய்வதுதான் மெய்யியலின் நோக்கமாகும், பிரச்சினையின்றி மெய்யியல் இல்லை. மெய்யியல் இன்றிப் பிரச்சினை இல்லை. ஏனெனில் மெய்யியலின் நோக்கமே மனிதன் மத்தியில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதும், அதனைத் தீர்ப்பதற்கான வழிகளைக் கூறி நிற்பதுமே. அவ்வாறே இயற்கையிலும், மனித வாழ்க்கையிலும் எழுகின்ற அடிப்படைத் தேவைகளுக்கும், அவை சார்பாக எழுகின்ற பிரச்சினையில் நின்று மீள வழி காட்டுகின்ற ஒரு துறையாக மெய்யியல் காணப்படுகின்றது.

கடந்தகாலம் பற்றிய மெய்யியல் அறிவு ஒரு உண்மையான மெய்யியல் அல்ல. ஏனெனில் பிரான்ஸ் நாட்டுத் தத்துவஞானி கபிரியேல் மாஷல் கூறுகிறார்: Philosophy is a new, it is rather a never-ending inquiry that must always start a new, அதாவது மெய்யியல் ஒரு முடிந்த முடிவல்ல, அது எப்போதுமே ஒரு புதிய சிந்தனையை நோக்கிய விசாரணையாகவே செயற்படுகிறது. மெய்யியல் எப்போதும் நிகழ்காலத்தைப்பற்றியும், எதிர்கால நிகழ்வுகள்பற்றியுமே ஆராய்ந்து கொண்டிருக்கும். புதிய சிந்தனைகளும், மாற்றங்களும் பிறக்க வழிசெய்யும்.

ஆனாலும் மெய்யியல் பழைய தத்துவங்களையும், கருத்துக்களையும் முழுமையாகத் தூக்கி எறியாமல், அவற்றிற்குப் புதிய வடிவம் கொடுத்து நிகழ்கால நிலையில் வைத்து அவற்றுக்குப் பொருள் கொடுக்க முற்படுகின்றது. மேலும் அவர் கூறுகிறார்: மெய்யியல் ஒரு போதுமே உடனடியான பதிலைத் தந்துவிடாது; மாறாக எமது சிந்தனை உணர்வுகளைத் தட்டிஎழுப்பி, புதிய சிந்தனைச் சிக்கல்களைத் தோற்றுவித்து, நாங்களாகவே எமது சொந்த அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தி, பிரச்

சினைகளுக்குத் தெளிவுகாண உதவிபுரி கின்றது. மெய்யியலின் இன்னோர் முக்கிய நோக்கம் என்னவென்றால், மனித சிந்தனையிலே உடனடியாக எழுகின்ற போலியான, மயக்கமான எண்ணங்களை ஆதாரமற்ற சிந்தனைகளைக் களைந்து எல்லோருக்கும் தெளிவுபடக்கூடிய விதத்திலே, அறிவுசார் கருத்துக்களையும், உண்மைகளையும் தருகின்றது.

## யார் உண்மையான மெய்யியலாளன்

A Philosopher, seeks wisdom of a very special kind, a certainty about the true nature of reality. இயற்கையுடன் தன்னை இணைத்து, அந்த இணைப்பிலே ஒரு யதார்த்த நிலையைக் கண்டுணர்ந்து, அதனூடாக உண்மையை நோக்கிப் பயணம் செய்பவனே ஒரு உண்மையான மெய்யியலாளன் ஆவான்.

ஒரு மெய்யியலாளன் அல்லது தத்துவவியலாளன் எப்போதும் இயற்கையினூடாக ஞானத்தைக் கண்டடைய முற்படுவான். அவன் ஞானத்தைத் தேடுபவன் என்று அழைக்கப்படுகின்றான். யார் மெய்மையைப் பற்றி பேசுகின்றானோ, யார் மெய்யியலின் ஒளியில் வாழ்விற்குப் பொருளைக் காண முற்படுகின்றானோ, யார் இயற்கையின் அமைதியைத் தேடுபவனாகவும், அந்த அமைதியைக் கட்டிக் காப்பவனாகவும் இருக்கின்றானோ அவனே உண்மையான மெய்யியலாளன் எனப்படுவான்.

உண்மையான மெய்யியலாளன் புகழுக்கோ, பதவிக்கோ, வருமானத்துக்கோ வாழ்பவன் அல்லன். மாறாக அமைதியான சிந்தனையுடன், திறந்த உள்ளத்துடன் விமர்சனத்துக்குரிய ஆராய்ச்சியுடன், அறிவுடன்கூடிய அனுபவத்துடன், எது உண்மை என்பதைத் தேடிக்கொண்டிருப்பான். ஓர் மெய்யியலாளன் தன்னுடைய வாழ்க்கையுடன் நின்றுவிடாது, குழுக்களின், சமூகங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வான். அவனுடைய சிந்தனை எப்போதும் பரந்த சமூகம் பற்றியதாகவே காணப்படும். மெய்யியலாளன் எப்போதும் தாழ்மையான, எளிமையான மன நிலையில் காணப்படுவான். அப்போதுதான் அவனுடைய சிந்தனைப் புரட்சியிலே ஏற்படும் மாற்றங்களுக்கும், தாக்கங்களுக்கும் தன்னை இசைவாக்கிக் கொள்ளமுடியும். ஏனெனில் அவனுடைய சிந்தனை சாதாரண நடைமுறை வாழ்வுடன் பல தடவைகளில் முரண்பாடு உடையதாகத் தென்படும். அப்போதெல்லாம் மனந்தளராது அவன் அறிவு, அறநெறியிலிருந்து பிறழாது தன்னை முழுமையாக விட்டுக் கொடுத்து, தொடர்ந்தும் உண்மையை நோக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதாகக் காட்சி தருகின்றானோ, அப்போதுதான் அவன் உண்மையான மெய்யியலாளன் ஆவான்.

## எவ்வாறு ஓர் கோட்பாட்டு ரீதியான விஞ்ஞான நடைமுறை அனுபவங்களோடு ஒத்துப்போக முடியும்?

சில மக்கள் மெய்யியலை ஓர் புதிய நவீன விஞ்ஞானத் துறையாகக் கருதுகின்றனர். பல ஆய்வு கூடங்களையும் ஆய்வுக் கருவிகளையும் கொண்ட துறையாகக் கருதுகின்றனர். மெய்யியலும், விஞ்ஞானமும் மிகவும் நெருங்கிய இறுக்கமான தொடர்பு கொண்டவைதான். அதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆனாலும் மெய்யியல் விஞ்ஞானத்திலும்மேலானது. மெய்யியல் 'விஞ்ஞானங்களின் விஞ்ஞானம்' என்றும் அழைக்கப்படுகின்றது. அதற்குக் காரணம் மெய்யியல் வெறும் ஓர் கோட்பாட்டு ரீதியான விஞ்ஞானம் அன்று. மாறாக மெய்யியல் நடைமுறை அனுபவங்களோடு பின்னிப்

பிணைந்துள்ள ஒன்று. அப்படியென்றால் ஏன் இன்னும்கூட சில பேர் மெய்யியலை ஓர் ஏட்டுக் கல்விமுறை மாத்திரம் தான் என்று கூறுகிறார்கள்? இதற்கும் காரணம் உண்டு. ஏனெனில் சில மெய்யியல் கொள்கைகளும், கருத்துக்களும் சில மெய்யியலாளர்களின் சிந்தனை முறைகளும் வெறும் கற்பனைகள் மட்டுமே. அவற்றை நடைமுறையில் புகுத்திப் பார்ப்பது இலகுவானதொன்றாக இல்லை. பலவேளைகளில் முரண்பாடு உடையதாகக் காணப்படுகிறது.

ஆனால் உண்மையிலே மெய்யியல் அப்படிப்பட்டதொன்றல்ல, விஞ்ஞானம் பல ஆய்வுகூடங்களையும், ஆய்வுக் கருவிகளையும் கொண்ட துறை. ஆனால் மெய்யியல் அப்படியல்ல. மெய்யியலின் ஆய்வுகூடம் மனிதனும் அவனுடைய சமூகமுமே ஆகும். மனிதனுடைய நடத்தைகளும், சிந்தனைகளுமே ஆய்வுப்பொருளாகக் கணிக்கப்படுகின்றன.

மெய்யியல் கொள்கை ரீதியான, கோட்பாட்டுத் தரவுகளை மட்டுமன்றி, நடைமுறை அனுபவங்களையும், அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் பற்றி ஆராய்கின்ற ஓர் பரந்துபட்ட துறையாகக் காணப்படுகிறது. இது அனுபவரீதியல்லாத விஞ்ஞானத்தையும் அனுபவரீதியான விஞ்ஞானத்தையும் இணைக்கும் ஓர் பாலமாகக் காட்சியளிக்கின்றது. உ-ம்: எமது சாதாரண வாழ்வில் ஒன்றை நாம் செய்ய முன்பு, அதைப்பற்றிச் சிந்திப்பது வழக்கமான ஒன்று. அது பற்றி நன்கு சிந்தித்து, ஆலோசித்த பின்புதான் அதைச் செயற்படுத்த முற்படுகின்றோம்.

இங்கு நாம் சிந்திப்பதும், ஆலோசிப்பதும், அதன் பின்னர் நடைமுறையில் செயற்பட ஆரம்பிப்பதும் ஓர் ஒழுங்கு முறையாகும். இந்த ஒழுங்கமைப்பைக் கவனத்திற் கொள்ளாமலே நாம் இயற்கையாவே இந்த ஒழுங்குமுறையில் செயற்பட்டு வருகின்றோம். அதன் மூலம் நாம் பல செயல்களை இலகுவாகவும், தெளிவாகவும் செய்யக்கூடியதாக இருக்கின்றது. எனவேதான் எமது செயற்பாடுகள் அனைத்தும் மெய்யியல சார்ந்ததாகக் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் கூறியது போன்று மெய்யியல் மனிதனுக்கு அந்நியமானதொன்றல்ல. அவன் மெய்யியலை விலைகொடுத்து வாங்குவதுமில்லை. மாறாக மெய்யியல் மனிதனுடன் பிணைக்கப்பட்டதொன்றாகும். மெய்யியல் மனித செயற்பாட்டுக்கு வழிகோலியாக அமைகின்றது.

மனிதனுடைய புதிய கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சி முறைகளும், மனிதன் வாதங்களையும், வினாக்களையும், ஆதாரங்களையும் முன்வைக்கும் முறையும், மெய்யியலின் தொழிற்பாடே என்றால் மிகையாகாது. நாம் ஒரு பொருளின் நோக்கத்தை அல்லது அதன் ஆரம்ப ஊற்றைக் கண்டறிய, அதைக் கண்டுபிடிக்கும் வரை ஓர் காரணத்திலிருந்து இன்னோர் காரணத்திற்குச் சென்று, படிப்படியாக பல காரணங்கள்மூலம் இறுதி நோக்கத்தை அடைந்து கொள்வோம். எனவேதான் மெய்யியல் மனிதனுக்குள்ளேயே காணப்படும் ஓர் துறையாகக் கணிக்கப்படுகின்றது. ஆனால் மனிதனுக்கு அளிக்கப்பட்ட ஓர் நண்பனாக, நல்ல வழிகாட்டியாக திகழ்கின்ற மெய்யியலை, சிலர் தவறவாகப் புரிந்து கொள்கின்றார்கள். மெய்யியலை ஓர் ஏட்டுக் கல்வியாகப் பார்க்கிறார்கள். இந்தத் தவறான சிந்தனைகளை, போக்குகளை மெய்யியலில் நட்புக் கொண்டுள்ள ஒவ்வொருவரும் அகற்ற வேண்டும்.

## மெய்யியலின் நடைமுறைப் போக்கு

சமகால தத்துவ ஞானி கால் யஸ்பரீஸ் கூறுகிறார்: If Philosophy is used rightly and wisely, it will lead man towards the true life and give him more pleasure and satifaction. மெய்யியலை விவேகமாகவும் ஒழுங்கு முறையாகவும் உபயோகித்தல். அது எப்போதுமே உண்மையை நோக்கியதாகவே இருக்கும். இந்த வகையில் மெய்யியல் ஓர் நம்பிக்கையின் ஊழியன் என்று அழைக்கப்படுகின்றது. ஏனெனில் இது மனித அறிவுக்குத் திடத்தையும், தெளிவையும் ஊட்டிப் புதிய நம்பிக்கையில் மனிதனை வழிநடத்துகிறது. இது ஒரு சிந்தனைத் துறையாக இருந்து மனித குலத்திற்கு உயிரூட்டி, அவன் அறிவிலே தெளிவும், செய்கையிலே வெற்றியும் கொள்ள வாய்ப்பளிக்கின்றது. இது மனிதனுடன் பல கேள்விகளைத் தொடுத்து. மனிதனைச் சுயமாகவே சிந்திக்கத்தூண்டி, அவனுடைய அந்த சிந்தனைக்குத் தெளிவைக் கொடுக்கின்றது. ஆதலால்தான் மெய்யியல் ஓர் சிந்தனைத் துறை என்று அழைக்கப்படுகின்றது. அது மனிதனுடைய அறிவு ரீதியான உணர்வுகளைத் தட்டியெழுப்பி, அதில் எழுகின்ற சிந்தனைத் துளிகளுக்குப் புதிய ஒளியை ஊட்டி, அவனைக் குறுகிய வட்டத்தில் இருந்து ஓர் பரந்த முன்னேற்றமுள்ள உயர்ந்த வாழ்வுக்கு இட்டுச் செல்கின்றது. இதுவே மெய்யியலின் நடைமுறைப் போக்காகும்.

மெய்யியல் ஒரு தனி மனிதனின் கடமைகளையும், அவன் சமூகத்தில் கொண்டிருக்கவேண்டிய நடைமுறை ஒழுக்க விதிகளையும் குறித்துக்காட்டி நிற்கின்றது. மெய்யியல் எப்போதுமே தனி மனிதனுடைய வாழ்க்கையுடன் நின்றுவிடாது. குழுக்களின், சமூகங்களின், பிரச்சினைகளுக்கு விடை காணுகின்ற ஓர் துறையாகச் செயற்படுகின்றது. இது மனிதனின் அனைத்துத் துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. கல்வி, பொருளாதாரம், அரசியல், சமயம், ஒழுக்கவியல் ஆகிய துறைகளில் அதிக செல்வாக்குடையதாகக் காணப்படுகின்றது.

மெய்யியலின் முக்கிய நோக்கம் அறிவை வளர்த்தலாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் மெய்யியல் அறிவு இயற்கையாகவே கொடுக்கப்பட்டுள்ளது. அதனால்தான் மனிதனை நாம் அறிவுள்ள பிராணி என அழைக்கின்றோம். நவீன காலத்து தத்துவ ஞானிகள் டேக்காட், ஸ்பினோஷா, பிரான்சிஸ் பேக்கன் போன்றோர் மனிதன் ஓர் அறிவுள்ள பிராணி என்று கூறுகிறார்கள். ஏனெனில் அவனிடத்தில் புதிய வளர்ச்சிப் போக்குகளும் புதிய சிந்தனை சார் கருத்துக்களும் காணப்படுகின்றன. இதனால் மனிதனுடன் பிறந்த மெய்யியலும் அதாவது, இயற்கையாகவே ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள அடிப்படை அறிவு, மனிதனை வளப்படுத்தி, அவனின் சிந்தனைத் துறைக்கு புதியதோர் உற்சாகமும், ஆர்வமும் ஊட்டி, அவனைப் புதிய படைப்பாக மாற்றுகிறது.

புனித தோமையார் அக்குயினாஸ் கூறுகிறார் ; மெய்யியல் பரம்பொருளினால் மனிதனுக்கு வழங்கப்பட்ட உன்னத கொடையாகும். மெய்யியல் பரம்பொருளினால் ஒவ்வொரு மனிதனுக்கும் இலவசமாகக் கொடுக்கப்பட்ட கொடை. இது இலவசமாகக் கொடுக்கப்பட்டாலும் ஓர் உயர்ந்த நோக்கம் கருதியே கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் அமைதியாகவும் நிதானமாகவும் பூரணமாகவும், தான் வாழ்கின்ற சூழலை, அதற்கு அப்பாற்பட்டவைகளை அறிந்து அதனூடாகப் பரம்பொருளைத் தன் வாழ்வில் கண்டு

கொள்ளவும், அதன்மூலம் அவன் ஓர் சமூகத்திலே, தனது வாழ்வின் நோக்கத்தைச் செவ்வன நிறைவேற்றி வாழ, மெய்யியல் அவனுக்கு வழிகளைக் கற்றுக் கொடுக்கின்றது.

ஆகவே மெய்யியல் மனிதனின் உற்ற நண்பனாகவும் வாழ்க்கையின் வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. அதை விட மெய்யியல் பரம்பொருளினால் மனித குலத்திற்கு வழங்கப்பட்ட ஓர் உன்னத கொடை ஆகும். மெய்யியல் மனிதனின் சிந்தனையை, திறமைகளை விருத்தி செய்து, ஓர் ஒழுங்கு முறையான சீரிய ஒழுக்கம் நிறைந்த வாழ்வைக் கண்டுபிடித்து வாழ மனிதனுக்கு உதவி புரிகின்றது.

தத்துவம் விஞ்ஞானிகளின் விஞ்ஞானம் என்றும், மனிதனின் விஞ்ஞானம் என்றும் பார்த்தோம். ஏனெனில் மெய்யியலின் ஆய்வு கூடமும், ஆய்வுப் பொருளும், மனிதனும், அவனின் நடத்தைகளுமே ஆகும், விஞ்ஞானம் பொதுவாக இயற்கை பற்றிய சில மேலோட்டமான தரவுகளையும், கோட்பாடுகளையும் தருகின்றது. ஆனால் மெய்யியல் அதிலும் மேலாகச் சென்று இயற்கைப் பொருள்கள் பற்றியும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருள்களைப் பற்றியும் ஆய்வுசெய்து, அவைகளுடைய அடிப்படை மூலகாரணங்களை, அவை பற்றிய உண்மையான இறுதிக் காரணிகளைக் கண்டுபிடிப்பதை மையமாகக் கொண்டு நீண்ட நோக்கில் செயற்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் முடிவிலே மெய்யியல் ஓர் அனுபவ ரீதியான விஞ்ஞானம் என்று கூறினால் மிகையாகாது. அது முற்றுமுழுதாக மனிதனைப்பற்றிப் பேசுகின்றது. மனிதன் அறிவு ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் தெளிவான கூரிய சிந்தனையுடன் செயற்படவும், தவறான சிந்தனைகளை இனங்கண்டு புதிய முன்னேற்றப்பாதையைக் கண்டு பிடிக்கவும் மெய்யியல் அவனுக்கு உதவி புரிகின்றது. எனவே பிரச்சினைகளின் அடிநாதம் என்னவென்று தேடுவதுதான் மெய்யியலின் நோக்கம்.

மெய்யியல் – வழிகாட்டுகின்றது.
மெய்யியல் – உண்மையைத் தேடுகின்றது
மெய்யியல் – சிந்திக்கத் தூண்டுகின்றது.
மெய்யியல் – சிறந்த மனிதனை உருவாக்குகின்றது.
மெய்யியல் – சிறந்த ஆசானாகத் திகழ்கின்றது.

மனிதப் பண்புகள் மாண்டொழிந்து போன்றனவே என்று மனம் புழுங்குவதை விடுத்து, அவற்றை வீட்டிலும், கல்விக் கூடங்கள் மற்றும் சமய, சமூக ஒன்றுகூடல்களிலும் ஊட்டி, வாழ்ந்து அதன் மூலம் மனிதப் பண்புகளைக் கொண்ட நற்சமூகம் உருவாக வழி கோலலாம்.

(Synopsis)

# Philosophy and its Practical Values

Philosophy is not new to man; It has always walked with hlm. It dwells among men, but man does not know what philosopy is. All the major problems of philosophy are personal, in the sense that they arise out of questions that every person asks himself, such as: 'Who am I?, 'Where do I come from?' and 'What is the purpose of life?'. These questions that arise about nature and life can be answered only by PHILOSOPHY. Therefore to philosophise is to give answers to human problems and to satisfy man's intellectual curiosity and help him understand himself and the mysteries of the world around him.

The word 'philosopy' comes from the Greek word 'PHILO' which means a friend or a lover and 'SOPHIA' which means wisdom. Hence philosophy is the love of wisdom and a philosopher is a lover of wisdom. Philosophy is not a limited teaching, but it is a means of entering the difficult grounds of human self-awarenes, According to Gabriel Marcel, 'Philosophy' is rather a never-ending inquiry that must always start anew. Phiosophy is not to provide man with ready-made conclusions; its real mission is to awaken, to sensitize and appeal rather than teach and give transferable information. A philosoher always searches for wisdom. He regulates his life by the light of philosophy and shows philosophic calmness in trying circumstances.

Philosopy and science are tied to each other, but divided in their source of certainty as Karl Jaspers says, 'Whenever one wants to know truth of some event or the purpose of one's action, one goes from one reason to another until one finds the truth of the facts. This is the expression of what philosophy is inclined to. Our mind. also functions in a philosopical manner. For example, when we begin to do something, we think and then act. Even this thinking and action that follows are done in a very orderly and logical manner. There is an opinion among some, that philosopy is a science, which does not come down to practical action, but remains in the speculation and reasoning level. There are reasons for this. Some philosophers and their theories are still in speculative level. So people with the above opinion conclude that philosophy is a nonpractical science. People without knowing what phlosophy is, may misconceive it through wrong ideas given by others. Philosophy is the thinking that sustains us in life, that illuminates and guides our actions both personal and social. If philosohy is used rightly and wisely it will lead man towards a purposeful life and give more pleasure and satisfaction. The right use of phliosophy is the greatest natural help given by God. God did not give the right of reason in vain to man. Philosophy perfects

one's understanding, gives one a new strength and makes one capable of greater output. Thus philosophy manifests itself through its influence as the foundation of all sciences of Man and of nature and therefore its values are immense.

Some of the aspects we have discussed so far are of vital importance for those who do not know well what actually philosophy is and what it does to humanity. Since Philosopy can be studied regarding every aspect of human life and of the world, it is rightly called 'Queen of sciences'. The study of philosophy can give a person greater insight in to the meaning of life and into the origin of the world.

**S Stephen**

## Reference


1. *Jaspers, Karl* **Philosophy.** *1st ed. Vol. 1. The University of Chicago Press, London 1932.*

2. *Marcel, Gabriel,* **Concrete Apporoach and Therapeutic Activity** *Pontifica University. Gregoriana, Manila, 1976.*

3. *Aquinas,* **Thomas** *St.,* **The Summa Theologica of St. Thomas.** *1st ed. Vol. 1, Benzigies Brothers Inc., New York, 1946.*

4. *Jannro, Richard Paul,* **Philosophy. Something to Believe in**, *1st ed., Glencoc Press, California, 1975.*

5. *Edwards, Paul,* **Encyclopedia of Philosophy,** *Vol. 5, Macmillan Publishing Co., London, 1967*

6. *Knox, T. M.,* **Hegel's Philosophy of Right,** *Oxford University Press, London, 1952.*

# ‘மனிதன்’ என்றும் ஆழம் அறியமுடியாத ஒரு புதிரே!

டொமினிக் A. ஜோசப்

மனிதன் உலகில் தோன்றிய காலத்தில் இருந்து தனக்குத் தானே ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறான். மனிதன் யார்? அவனுடைய இயல்பு என்ன? அவனது இருத்தலின் பொருள் என்ன? போன்ற வினாக்கள் இப்பிரச்சினையின் அடிப்படைக் கேள்வியாக அமைந்திருக்கின்றன.

இவ்விடயம் பற்றி வரலாற்றில் பழமைவாய்ந்த பல்வேறு மதங்களும், வெவ்வேறு காலகட்டங்களில் பிறந்த பல தத்துவ ஞானிகளும் ஆழ்ந்த கருத்துக்களை முன்வைத்துள்ளனர். சமயவாதிகள் மனிதன் ஒரு அற்புதப் படைப்பு, உயர்ந்த படைப்பு, ஒரு பெருங் கொடை போன்ற கருத்துக்களை முன்வைக்கின்றனர். சில தத்துவ ஞானிகள் இதற்கு எதிரான கருத்துக்களையும் முன்வைக்கின்றனர். ஆயினும் இவற்றுள் எதையும் நாங்கள் இறுதி விடையாக முடிந்த முடிவாகக்கொள்ள முடியாது. ஏனெனில் மனிதன் இன்னும் தனக்கு ஒரு பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறான். கபிரியேல் மார்சல் என்ற இருப்பியல்வாதி கூறுவது போல் மனிதன் ஒரு மறைபொருளாகவே இன்னும் இருக்கிறான்.

இவ்வாறு மனிதனை ஒரு மறைபொருள் என்று நோக்குகின்றபோது, இன்றைய உலகில் உள்ள அனைத்தினுள்ளும் அதியுயர் இருப்புத்தன்மை கொண்டவனாக மனிதனே திகழ்கிறான் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவனே அகிலத்தில் உள்ள யாவற்றையும் உணர, விளங்க, விளக்கம் கொடுக்க, துருவி ஆராய வல்லவனாக இருக்கிறான். உயிர் வாழ்வது, தன்னைப் பாதுகாப்பது போன்ற அடிப்படைத் தேவைகளிலிருந்து வளர்ச்சி பெற்று, தனது சூழலை ஆராய்ந்து, இறுதியில் தன்னைத்தானே ஆராயும் நிலைக்கு அவன் உயர்ச்சி கண்டுள்ளான்.

இத்தகைய அவனது சுயதேடலிலிருந்து பல அரிய கருத்துக்கள் வெளிப்பட்டன.

கிரேக்க தத்துவ ஞானிகள், மனிதனை உடல் – ஆன்மா என்ற இரு கூறுகளின் இணைவாகக் கண்டனர். பாரம்பரிய ஐரோப்பிய தத்தவம் இப்பின்னணியையே அடித்தளமாகக் கொண்டிருந்தது, ஆசிய சிந்தனையில், குறிப்பாக, இந்துப் பாரம்பரியத்தில், மனிதன் ஆத்மன் என்றும், உடல் மாயை என்றும் கூறப்பட்டது. மனிதனை இரு கூறாக்கி, ஆன்மா – உடல் என்று பார்ப்பது தவறு. அவனை ஒரே ஆளாகப் பார்க்க வேண்டும் எனக் கருதும் தத்துவ சிந்தனையாளர்களும் தோன்றினர்.

மனிதனின் அதிசய செயற்பாடுகளான அறிவு, அக உணர்வு, புதியன உருவாக்கல் போன்றவை எங்கிருந்து பிறக்கின்றன என்ற தேடலிலேயே உடல் ஆன்மா என்ற வாதத்திற்கு அவர்கள் வந்தனர். உடல் புலன் அனுபவத்தைப் பெறுகிறது என்றும், அதன் இயக்க செயல் வெளிப்பட அதற்கு ஆன்மாவின் செயற்பாடு தேவை என்றும் கூறினர். இதன் உண்மை, மனிதன் இவ்வுலக வாழ்வு முடிந்ததும் அசைவற்ற சடமாக இருக்கும்போது, சந்தேகமின்றித் தெளிவாகின்றது என்று கருதினர். இதன் ஆய்விலே ஆன்மாவை வெளிப்படையாகப் பார்த்து, அனுபவித்து அதன் தன்மையை அறிய முடியாது. மாறாக அதனை அதன் செயற்பாடுகளைக் கொண்டே உய்த்துணர வேண்டும். ஆன்மா தன் இயல்பை உடல்மூலம், தனி நபர் மூலம் வெளிப்படுத்துகிறது எனக் கொண்டனர். மனிதனிடமுள்ள சடத்திற்கும் அப்பாற்பட்ட செயல்களினாலேயே ஆன்மா இருக்கிறது என்ற உண்மை பெறப்படுகிறது. இது உள்ளுணர்வினாலேயே (Intution) விளங்கிக் கொள்ளப்படுகிறது. சடத்தினூடாகச் செயற்படும் ஆன்மாவின் சக்திக்கு எடுத்துக்காட்டாக யோகத்தின் உச்சநிலை, அனுபூதி நிலையைக் குறிப்பிடுகின்றனர். இவர்களின் கூற்றுப்படி இவ்வான்மீகம் மனிதனிடம் அதிசயிக்கத்தக்க மாற்றங்களையும், புதியன செய்யும் ஆற்றலையும், தன்னைவிடப் பல மடங்கான பௌதீக சக்திகளைக் கொண்ட இயற்கையை ஆளும் வல்லமையையும் கொடுக்கின்றது. இவ்வாற்றலினால் மனிதன் அனைத்தையும் விஞ்சி விடுவான், அனைத்துக்கும் விளக்கமளிக்க வல்லவனாக மாறுவான் என்றும் சிலர் கருதுகின்றனர்.

மனிதனின் அடிப்படைச் சக்தியான இந்த ஆன்மாவிலிருந்து ஊற்றெடுக்கும் இன்னுமொரு தன்மை சுதந்திரம். இதன் அடிப்படைத்தன்மை என்னவெனில் தனக்கு விருப்பமானவற்றைத் தெரிந்து உயர்ந்து, உயர்ந்த மகிழ்ச்சியடைவதே. ஆயினும் வாழ்நாளில் எப்படித்தான் அவன் சரியானவற்றையும், திறமானவற்றையும் தெரிவு செய்தாலும் அவன் அவை எவற்றிலும் முழுத் திருப்தி காண்பதில்லை. அவ்வாறாயின் இதன் பொருள் என்ன? திருப்தியடையாத ஒரு தேடல் மனிதனிடம் இறுதிவரை இருக்கிறதென்றால், அது ஏன் அவனில் இருக்கின்றது? மனிதனின் சுதந்திரத்திலிருந்து பிறக்கும் இந்தத் தேடல் திருப்திப்படுத்தப்படாமல் போகலாம் என்று சொன்னால் அதன் இருப்பு அர்த்தம் இன்றிப் போகின்றது.

அநுபூதி அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், இவ்வனுபவ உணர்வு அறிவுக்கு அப்பாற்பட்ட ஒரு மெய்மறந்த அனுபவம் என்றும் அதைச் சொற்களில் விவரிக்க முடியாதென்பதும் அநுபூதிமான்களின் கூற்றாகும்.

இவ்வாறு மனிதனிடம் இருக்கிற சக்தியும், சுதந்திரத் தேடலும் அவனது சடத்தன்மைக்கு அப்பாற்பட்டது. மனிதனின் இவ்வாற்றல் ஆன்மாவை ஊற்

றாகக் கொண்டது என்று கருதும்போது அந்த ஆன்மாவின் ஊற்று என்ன? அதன் கதி என்ன? உடலிலிருந்து பிரிந்த பின் அதன் நிலை என்ன? போன்ற கேள்விகள் எழுகின்றன. இந்த வினாக் களுக்கு விடையாக சமயவாதிகள் கட வுள் கோட்பாட்டை முன்வைக்கின்றனர்.

சமயத்தில் நாட்டம் கொள் ளாத, கடவுள் நம்பிக்கையற்ற மெய்யிய லாளர்கள், மனிதன் பற்றிக் கூறுவதை சிறிது காண்போம் மனிதன் உலகில் தொடர்ச்சியான பரிணாம வளர்ச்சியில் தோன்றினான். இதன் அடிப்படையில் உடல் ஆன்மா இருகூறுக்கொள்கையை இவர்கள் நிராகரிக்கின்றார்கள். இவர் கள் காலத்தின் வளர்ச்சியில் எழுந்த சடத்தின் அதியுயர் செயற்பாடே (இலத் திரனிக் யுகம்) மனிதனின் பிரமிக்கத்தக்க செயற்பாடுகள் என்பர். ஆகவே இவர் கள், உலகிற்கு அப்பாற்பட்ட, ஆவித் தன்மைகொண்ட மூலகாரணம் ஒன்று அனைத்திற்கும் காரணமாயிருக்கிறது என்பதை நிராகரிக்கின்றனர்.

நவீன இருப்பியல்வாதத்தின் தூணாக இலங்கும் ஜேர்மன் நாட்டினராகிய மாட் டின் கைடெகர் கூறுகிறார்: 'மனிதன் தன் உள்பொருளியல் பற்றிய பூரணத் துவத்தை (Ontological Fulf lment) அடையும் முயற்சியில் உயர்ந்துகொண்டு வரும்போது அவன் தவிர்க்கமுடியாத இறப்பைச் சந்திக்கிறான். இதற்கொப் பான கருத்தை ஏனஸ்ட் புளாக் என்பவர் 'மனிதன் தன்னைக் கடந்து செல்லும் கடந்து செல்லல்' (man is trancending Transcendance) என்கிறார். இருப்பியல் வாதிகளுள் முக்கியமாகக் கருதப்படும் நீட்சே என்பார் 'மனிதன் தனது வலுப் பெறும் ஆற்றலுக்கு (Will to Power) சக்திக்கு முயற்சித்துக் கொண்டே இருப் பான். அதன் உயர்நிலை அடையும் போது இறப்பைச் சந்தித்தால் அது அவன் வாழ்க்கையின் திருப்தியடைந்து கொண்டிருக்கும் நிலையே' என்று கூறு கிறார். முதலில் அறிவொணாமை வாதத் திலிருந்து பின்பு தன் மெய்யியல் முதிர்ச் சிக் காலத்தில் கிறிஸ்தவத்தைத் தழுவிய கபிரியேல் மார்சல் என்பார் 'அகிலத்தின் அனைத்தும் தம்மில் நிறைவுகாண முடி யாததினால், அவை நித்திய அத்திவா ரத்தில் (Eternal foundation) தமது ஊற் றைக்கொண்டிருக்கின்றன' என்கின்றார்.

இவ்வாறாக மனிதன் என்னும் மர்மம் பற்றிய சமயவாதிகளதும், பரம் பொருளை மறுக்கும் தத்துவ ஞானி களினதும் கருத்தை ஒரு நோக்கில் பார்க்கும்போது, இவ்வுலகில் மனிதன் எவ்வளவு தூரம் ஆற்றல் கொண்டவ னாக இருந்தாலும் தன்னைப் பற்றியே முழுமையாக அறிய முடியாத இக்கட் டான நிலையில் உள்ளான் என்பது புல னாகின்றது. எவ்வாறு தன்னை முழுமை யாக அறிய முடியாதோ, அதுபோல இன்னுமொருவரையும் முழுமையாக அறிய முடியாத நிலையில் அவன் இருக் கிறான். அறியமுடியாதென்ற இந்த அனுபவம் முதல்முறை சந்திக்கும் ஒரு உறவு நிலையில் மட்டுமல்ல, நண்பர் களின் அந்நியோன்னிய உறவான குடும்ப, காதல், உறவுகளிலும் சரி, பெற்றோர் – பிள்ளை உறவுகளிலும் சரி, காணக் கிடக்கிறது. இது மனிதனின் சக்தி மட் டுப்படுத்தப்பட்டதே என்பதை காட்டு கிறது.

மனிதன் ஒருவன் வேறொருவனையோ அல்லது தன்னையோ முழுமை யாகப் புரிந்துகொள்வது அசாத்தியம் என்பதை ஏற்றுக்கொண்டாலும் அவர் கள் ஓரளவிற்காவது தம்மையும் மற்ற வரையும் புரிந்துகொள்ள வல்லவர் களாய் இருக்கிறார்கள் என்பதையும் அங்கீகரிக்கவேண்டும். இதனாற்தான் மனிதன் வாழக்கூடியதாக ஒரு சமுதா யம் உருவாகியுள்ளது இதற்குக் காரண மாக இருப்பது மனிதனிடம் காணப்படு கின்ற வியத்தகு ஆற்றலே. (சமயவாதி கள் இதனையே ஆன்மா என அழைக்

கின்றனர்) பல விடயங்களில் தெளி வின்மை காணப்பட்டாலும் இச் சக்தியே ஓரளவேனும் தெளிவுடன், நம்பிக்கை யுடன் செயற்பட வழிவகுக்கிறது, கூட் டாக வாழ, செயற்பட, நட்புறவு கொள்ள, அன்பை வெளிப்படுத்த ஒரு வர் ஒருவருக்காகத் தியாகம்செய்ய, நேசத்திறகாக நற்கொடையளிக்கத் தூண்டுகிறது. இந்நம்பிக்கை அறிவுத் தெளிவு இவ்வுலகில் மட்டுப்படுத்தப் பட்டவற்றோடு இவ்வளவு தூரம் ஏற் படுமாயின், இவ்வுலக முடிவின் பின், அது நிறைவற்றதாக. பொருளற்றதாக, மாறாமல் நிறைவு பெறும் முடிவை ;அனு பவிக்கும் என்று எண்ணுவதற்குக் கார ணம் உண்டு. அதை வழங்கவல்ல ஒரு இறுதிக் காரணியின் இருப்பு நிலையில் நம்பிக்கை கொள்ளவும் காரணம் உண்டு.

மனிதன் உயர்ந்தவன், பல விழுமி யங்களைக் கொண்டவன் என்று போற் றப்படுகின்ற அதேவேளையிலே அவன் தனக்குக் கீழேயுள்ள உயிரினங்களின் புல னறிவுச் செயற்பாடுகளுக்குங்கீழே இறங் கிப் போவான் என்பது நினைத்துப் பார்க்க முடியாததொன்று. யதார்த்த நிலையில் மனிதன் தன் சக மனிதனை, கையாளும் பொருட்களைவிடவும், வளர்க்கும் விலங்கினங்களைவிடவும் கேவலமாக நடத்துவதையும், சொல்லா லும், செயலாலும் ஈவிரக்கமின்றிச் சித் திரவதை செய்வதையும் காணுகின் றோம். உயிரைவீணாக ஆயிரமாயிரமாய் கொன்று குவிப்பதையும் காணுகின் றோம். இந்நிலையைக் காணும் போது, அத்தகையோர் மனிதர் அல்லர் எனக் கருதுவதே பொருத்தம் எனத் தோன்றுகின்றது. பண்பு. கலாச்சாரம் என்று பல்லவி பாடும் மனிதன் இவ்வாறு அநாகரிகமாகவும் நடந்து கொள்கிறான் என்பதை வியப்புக்குறியோடுதான் நோக்கவேண்டும்.

இருப்பியல்வாதக் கண்ணோட்டத் திலும் மனிதனைப் பற்றி, பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் அவ னைப் பற்றிய பூரணமான, முழுமை யான விளக்கம் கிட்டவில்லை என்பது தெளிவாகிறது, இவ்வாறு மனிதன் தனக்கும் மற்றவர்களுக்கும் புரியாத புதி ராக இருப்பதனால், மார்சல் மனி தனை 'பிரச்சினையான மனிதன்' (Problematic man) என்று வர்ணிப்பது பொருத்தமானதே. ஏனெனில் மனிதன் இறுதிவரைக்கும், அதாவது இவ்வுலக வாழ்விலும், இறப்பின் பின் இன்னு மொரு வாழ்வு உண்டு என்று நம்பிக்கை வைத்தால் அந்நிலை அவனுக்குக் கைகூடு மாயினும், அதிலும் தனக்கும், மற்ற வர்க்கும், புரியாத புதிராகவே இருப் பானோ என்று எண்ண இடம்உண்டு.

புலன் அனுபவத்திலும் தெளி வின்மை, அறிவு வழியிலும் தெளி வின்மை, அண்டத்தில் அவனுக்குத் தெளிவின்மை, தன்மட்டிலும் தெளி வின்மை, பிறர் மட்டிலும் தெளி வின்மை, இவ்வாழ்வின் பின்பும் என்ன நடக்குமோ என்று தெளிவின்மை. ஆகவே மனிதன் நிச்சயமாக ஆழம் அறியமுடியாத புதிரே. கற்பனை யில் கூட விவரிக்க முடியாத ஆற்றல் திறன் கொண்ட மனிதன், இப் பிரமாண்டமான வையகத்தையே ஆட் டிப் படைக்கும் மனிதன், ஒரு கணப் பொழுதிலே ஆட்டம் அசைவின்றி, வையத்திலுள்ள ஆகச் சிறிய அணுவாக அர்த்தமற்றவன் என்ற நிலைக்கு மறைந்துவிடுவதே அவன் ஒரு மர்மம், பிரச்சினை என்பதின் உச்சக்கட்டமாகும்.

***

# *Man is a Mystery*

Dominic A. Joseph

The moment man appeared in the universe, it was the begining of his problem. He was more enigmatic than any other creature in the universe. Inspite, of the claim that man is the highest reality of the whole of nature, he still remains incomprehensible to a large extent despite the fact of the 20th century's ultra modern development of scientific technology.

Many sages and philosophers spoke of man in the religious or non-religious tone.

The reason why man is a problem to himself is, in the words of the French existentialist philosopher Gabriel Marcel, 'Man is a mystery'.

In the attempt to know who man is, there have appeared various views down the ages. The early Greek philosophers thought of man as consisting of 2 principles: body and soul; some gave great importance to the soul while giving scant attention to the body; others gave due importance to both these principles. Jewish and other Asian thinkers gave importance to the whole person. In the course of the later centuries, the scrutiny was to find the foundation of all man's magnificent capabilities demonstrated in the field of knowledge of the various inventors in the physical world, in the field of spiritual, metaphysical and mystical experiences.

Further, man strives to realize his self in freedom, but inspite of the best inventions and facilities of life, he still remains unsatisfied. The question arises: Why is it so? If this phenomenon of unrealised self is in man, what is its origin?

The fact that man is limited, requires that the source should be, from some other roots. This source the theists believe, is the Supreme and only Reality, the cause of this universe. The non theists, like evolutionists, believe that even man with the highest brain activity is the result of the highest evolution through transformation in its evolutionary process.

The idea that man is an unsolvable mystery is still more evident in relatioships. Man is a social person. Inspite of intimate relationships whether friendship, family life, lover's relationship or parent-child relationship, man remains a mystery.

The biggest of questions is: What is to happen to man at the end of his life here on earth? The dilemma is, if man were to end in nothingness at the end of his life, his fantastic capabilities manifested during life will go meaningless.

To answer this dilemma, the existentialist philosophers voice their ideas in the following statements: Gabriel Marcel states that everything, evidently inclusive of man, has its root in the Eternal Foundation. The other important existentislists like German Martin Heideggr, would say that man has to go on in his

adventure of ontological fulfilment during which time he would meet the inevitable end. i. e. death. Ernst Block would say: man is in his movement to a transcending transcendence. Another famous existentialist thinker F. Nietzche believes man will have to achieve the realization of his power in freedom, in which he would meet his inevitable end i. e. death.

In the overall experience, either in the common view of people or in the existentialist approach of philosophers, man would remain an incomprehensible mystery even if one were to think of, or hope for a life after life.

It is paradoxical to note that man, despite his elevated position, and calling himself a cultured being in the universe, has sunk very low, even lower than the inferior animals in dealing with himself, particularly with his human peers.

Hence it should not be surprising that man is a mystery and remains a problem to himself and to society.

*You say, 'One must philosophise' — Then you must philosophise. You say, 'One should not philosophise' — Then you must philosophise. In any case you must philosophise.*

**Aristotle dilemma**

*'Almost all things have been found out, but some have been forgotten'.*

**Aristotle**

# தத்துவம் என்றும் மானிடத்திற்கு ஒரு பசுமை ஒளியே

உங்களோடு தத்துவம் பற்றி உரையாடுவதே எனது விருப்பம். இக் கட்டுரையின் நோக்கம் தத்துவத்தை அறிமுகம் செய்வதே. உள்ளன்போடு சில உண்மைகளை அறியத்தருவதே. 'மனிதன் இயல்பாகவே ஒரு தத்துவப்பிராணி'. வேதங்கள் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளன. நம்மை நாம் ஆராயும் இயல்பு புதியதொன்றல்ல. மனிதன் எதனையும் ஆராயாது, உண்மை என ஏற்றுக் கொண்டதில்லை. மனித அறிவின் ஆரம்பமே. தன்னை, தன்னைச் சூழ உள்ள உலகை ஆராய்வதோடுதான் ஆரம்பமாகிறது. இவ்வாரம்ப முயற்சியில் 'கீழைத்தேய' 'மேலைத்தேய' என்ற வேறுபாடில்லை. எந்தக் கருத்தையும் மெய்யறிவாக ஏற்றுக்கொள்வதற்கு முன், அதனையிட்டு ஐயங்களைத் தோற்றுவிக்கின்றோம். அடுப்பங்கரை வாழ்வு தொட்டு, அண்டவெளி ஆய்வுரை இதனை அவதானிக்கலாம். அரிசியை உலையில் அப்படியே போட்டுவிடுகின்றோமா? அவதானத்திற்குட்பட்ட அண்டவெளியை மட்டுமா அவதானிக்கின்றோம். ஆன்மாவின் இயல்புதொட்டு ஆண்டவன் இருப்பு வரை ஆராய்கின்றோம். இத்தகைய மனித சுபாவத்தையே தத்துவம் என்கிறோம். தத்துவமனப்பாங்கு என்பது, ஒரு பொருளை எமதுடைமையாக்கும்போது, கருத்தொன்றை அறிவாக ஏற்றுக்கொள்ளும்பொழுது, உண்மையென ஒன்றை நம்புகின்றபோது சரியா? நிட்சயமானதா? எமக்குப் பொருத்தமா? நமக்கு அவசியமானதா? என வினவிக் கொள்வதையே குறிக்கும். அதனால்தான் தத்துவம் மனிதனுக்குப் புதியதொன்றல்ல என்பர். மனித வரலாற்றோடு தொடங்கிய இவ்வணுகுமுறை, அவசியமானதோர் அறிவியலாக வளர்ந்திருப்பதே. மனித நாகரீகத்தின் பரிணாமத்தைக் காட்டுகிறது. மனித வரலாறு தத்துவ வரலாறோடு இணைந்ததொன்று. எல்லா அறிவியல்களுக்கும் ஆதாரம் தத்துவமே. டேகார்ட்ஸ் (Descarts) என்ற நவீன மெய்யியலாளன், தத்துவத்தை ஒரு விருட்சத்தின் ஆணிவேருக்கும், ஏனைய துறைகளை அதன் கிளைகளுக்கும் ஒப்பிட்டான். அறிவின் மிகப் பழமையானதும் மதிப்புமிக்கதுமான பிரிவாகத் தத்துவம் உளது. பிளேட்டோ (Plato) தத்துவத்தை மெய்ஞானம் என்றார். இதற்குள் தவறான கற்பிதங்கள்

V. யுகபாலசிங்கம், M. A. (Phil.)

எதுவுமே இல்லை என அறைந்து கூறினார். பேராசிரியர் இராதா கிருஷ்ணன் (Dr. Radhakrishnan) கூறினார்: 'மனிதன் மாண்புமிக்கவன் என்பதற்குப் பொருத்தமான ஆதாரம் தத்துவமே. மனிதனின் மேதாவிலாசத்திற்கு அதுவே உரைகல்.'

## தத்துவத்தின் இயல்பு

தத்துவம் உண்மையைத் தேடும் அறிவியல். அதனால்தான் இதனை மெய்யியல் என மொழிபெயர்ப்பர். மெய்மை காணும் அறிவியல் உண்மையை, உண்மை வழி நின்று தேடும் அறிவு. அறிவைப் பாதுகாக்கும் அறிவு. அதனால்தான் தத்துவத்தைக் காவல் நாய்க்கு ஒப்பிட்டான் ஒரு ஆதி கிரேக்க தத்துவ ஞானி.

தத்துவம் சுதந்திரமான அறிவு. சுதந்திரமாக அறிவதும், அறியத்தருவதுமான ஓர் அறிவியல். பைதக்கரசு (Pythogaras) என்ற தத்துவ ஞானி, 'ஒலிம்பிக் விளையாட்டைப் பார்வையிட வரும் ஒரு வகையான பார்வையாளர்களோடு, தத்துவத்தை ஒப்பிடுகிறார். ஏனெனில் தத்துவம் சுதந்திரமான அறிவு என்பதை உணர்த்தவே. அறிவை சுதந்திரமாக முன்வைப்பதற்கும் ஒரு துணிவு வேண்டுமன்றோ! தத்துவத்தைக் கற்பதால் ஏற்படும் பயிற்சியே அதனை அளிக்கும்.

தத்துவம் எல்லோராலும் அணுக முடியாதவோர் அறிவியல் என்ற பாங்கு சிலரிடம் உண்டு. அது அணுகமுடியாதவோர் தந்தக் கோபுரமன்று. தூரநின்று நோக்குவோரே அப்படிக் கருதுவர். தத்துவம், உளப்பிறழ்வை ஏற்படுத்தும் அறிவு எனவும் கருவோர் உண்டு. ஒதுங்கிநின்று எட்டிப் பார்க்கும் மனப் பாங்குடையவர்க்கு, அப்படித் தெரிவதில் ஆச்சரியமில்லை. 'தத்துவத்தைக் கற்பதால், மரத்துப் போகாத சிந்தனையுடையவர்களுக்கு இது விளங்கும்' என்ற விகஸ்டைனின் (Wittgenstein) கருத்தோடு, தத்துவத்தை மெய்யாக அறிந்தவர்கள் உடன்படுவர். உபநிடதங்கள் கூறுகின்றன, 'என்றும் பசுமையான' முதிராத அறிவு, தத்துவம்'. சமகால மெய்யியலாளரான ரையல் (Ryle) குறிப்பிட்டார்; 'விஞ்ஞான ரீதியான உளப் பாங்கொன்றை கற்றுத் தரும் அறிவியல்' விஞ்ஞான அறிவு பற்றி நாம் அறிவோம். அத்தகையதோர் உளப்பாங்கினை மெய்யியல் பெற்றுத் தருகிறது. மௌலானா அபுல்கலாம் என்ற கல்விமான், இந்திய அரசில் வரவு, செலவுத் திட்ட உரையாடல் ஒன்றில் பின்வருமாறு கூறினார். 'மனித நாகரிகம் பெற்றுள்ள மிகப் பெருமை வாய்ந்த உடைமைகளுள் ஒன்று மெய்யியல் என்பதை மேன்மை சான்ற உறுப்பினர் யாவரும் அறிவர்'. 'தத்துவம் அசி' என்ற மகாவாக்கியம் தோன்றிய மண்ணில் பிறந்ததனால் அவருக்கு, தத்துவம் மிகப் பெரிய உடைமையாகத் தெரிந்தது.

## தத்துவத்தின் பரப்பு

மனித வரலாற்றின் ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை ஆரோக்கியமான அறிவு வளர்ச்சிக்கு தத்துவத்தின் பங்களிப்பு முக்கியமானது இன்றைய உலகில் நிகழ்ந்துவரும் புதிய பரிணாமங்களுக்கெல்லாம் அடிப்படையாக - அமைந்து நெறிப்படுத்தும் கற்கை நெறியாக தத்துவம் அமைகின்றது. பேராசிரியர் இராதா கிருஷ்ணன் குறிப்பிட்டார்: 'மனித வாழ்க்கை முழுவதுமே. தத்துவத்தின் ஆராய்ச்சிப் பொருள் தான்'. அறிவுக்கும், வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமையும் எல்லாப் பிரச்சினைகளிலும் தத்துவம் கவனம் செலுத்துகின்றது. தத்துவத்தின் குறிக்கோளை 'அனைத்து அறிவையும் ஆராய்ந்து, தொடர்புபடுத்தி, அதனைப் புதிய முறையில் ஒருங்கிணைத்து முதுமை பெற்ற (Comprehensive) அறிவாக உருவாக்குவதே' என கூறலாம். இக்கருத்தையே ரசல் (Russell) தனது 'விஞ்ஞானமும் — சமுதாயமும்' என்ற நூலில் முன்வைக்கின்றார். 'புற உலகு அக உலகு, புறப்பொருள், அகப்பொருள் என்பவற்றிற்கிடையே நிலவும் அடிப்படை உண்மையை அறிவது, அதை வெளிப்படுத்துவது என்ற முயற்சியில் தத்துவம் ஈடுபடுகிறது' பேராசிரியர் இராதா கிருஷ்ணனின் கருத்துப்படி, மெய்யியல் என்பது ஒரு முக்கிய வாழ்க்கைத் துணை. பொருள்களின் உண்மையைத் தேடுவதும், உண்மையின் நோக்கத்தோடு வாழ முயல்வதும், மனித அறிவோடு கூடிய உணர்வின் விதியாகும். இந்நெறியின் வரலாற்றை, மெய்யியற் பிரிவுகளை அவதானிப்பதன் மூலம்

இதனை அறியலாம். வரலாற்றுக்காலம் போன்றே அதன் பரப்பும் விரிந்ததே எல்லா நாகரீகங்களிலும் மெய்யியல் வரலாற்றை அவதானிக்கலாம். முக்கியத்துவம் கொடுக்கும் விடயத்திற்கு ஏற்ப, இவற்றின் முதன்மை அமைகிறது. அக வுலகு பற்றிய ஆய்வில் இந்தியத் தத்துவச் சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகிறது. புற உலகு பற்றிய ஆய்வில் மேலைத்தேயத் தத்துவம் முதன்மை பெறுகிறது எனப் பொதுப்படக் கூறினாலும், அரேபிய மெய்யியல், பாரசீக மெய்யியல், யூதர் மெய்யியல், சீன மெய்யியற் கருத்துக்கள் தமக்கே உரித்தான சில தனித்துவமான கருத்துக்களைக் கொண்டுள்ளன. பிரித்தானிய மெய்யியல், ஐரோப்பிய மெய்யியல், ஜேர்மனிய மெய்யியல் என வகுத்து நோக்குவதற்கேற்ப தத்துவக் கருத்துக்கள் உள்ளன. அனுபவ முதல்வாதம் அறிவு முதல்வாதம், பொருள் முதல் வாதம், கருத்து முதல்வாதம், என்ற வகைகள் தத்துவத்தின் போக்கை இனங்காண உதவுவதுபோல், இருப்பு வாதம், அமைப்புவாதம், நோக்குவாதம், செயல் நிலைவாதம் போன்றன தத்துவ நோக்கை அறிய உதவுகின்றன. எவ்வாறாயினும், இவற்றுக்கூடாக தத்துவத்தின் பொது இலட்சியம், தேவை, பொதுவானதாகவே அமைகிறது. தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப முதன்மைப்படும் கருத்துக்கள் வேறுபடினும், உள்ளார்ந்த ரீதியான ஒருமைப்பாட்டை தத்துவம் கொண்டுள்ளது. எந்தத் தத்துவப் பிரிவும் மனித நேயத்தை மதிக்கின்றது. மனித உறவுகளை இணைக்கின்றது. மனிதார்த்துவத்தை நேசிக்கின்றது.

எம்மை சூழ இன்று எத்தனை எத்தனை புதிய சிந்தனைகள், கருத்துக்கள், காலத்துக்கு ஏற்ற கருத்து மாற்றங்கள். பழையன கழிதலும் புதியன தோன்றலும் இடையீடற்ற நிகழ்வாக எங்கும் நிகழ்கின்றன. அண்டவெளி தொட்டு, சயன அறைவரை புதுமைக் கருத்துப் பூர்த்துக் குலுங்குகின்றன. இவற்றில், நல்லவை நாடி, நலிந்தமை அகற்றும் அரும்பணி மெய்யியலுக்குரியதே.

'எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு'

என்ற தத்துவ ஞானி வள்ளுவன் வாக்கு இதனையே சுட்டுகின்றது. அவர் கூறும் அறிவறிவு அறம், பொருள், இன்பம் மூன்றிற்கும் உரியது. முப்பாலுக்கும் மெய்யறிவு அவசியம் என்பதை இலக்கிய நயத்தோடு வள்ளுவம் கூறும் பாங்கு, தமிழர் கண்ட மெய்யியல் அறிவின் புதிய பரிணாமம். இன்று சிந்தனை யுலகு, சமூக உலகு, இயற்கை உலகு ஆகிய வாழ்க்கைப் பிரிவுகளில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பல. இதனை நிதானத்தோடு எதிர்கொண்டு எதிர் நீச்சல்போடவேண்டிய அவசியம் அதிகரித்து வருகின்றது. பண்டைய மதிப்புக்கள் வலுவிழந்து, புதிய மதிப்புக்கள் அரங்கேறுகின்றன. வர்த்தக மனப்பாங்கு, புதிய சமூக கலாச்சாரத்தை உருவாக்குகின்றது. பணமும், செல்வாக்கும், அறிவை சொந்த நலனுக்கு எடுபிடியாக்குகின்றது. ஆத்மீகமற்ற அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி சமூக ஒழுக்கத்தையே புதைகுழியில் அமிழ்த்துகிறது. வாய்மை, நேர்மை, சத்தியம், தூய்மை போன்ற மனித நேயங்கள், அனுபவத்திற்குப் பொருந்தாத எடுகோள்களாகின்றன. போலிக்கு வேலி போட்டுத் தாலி கட்டும் சடங்குகள் மலிகின்றன. இதை இனங்காட்டி மனித வாழ்வை வழிப்படுத்துவது மெய்யியலின் பணிகளில் ஒன்றாகிறது. இது தத்துவத்திற்குரிய பணியன்று என்ற கருத்து ஒரு சாராரிடம் காணப்படுகின்றது. அக்கருத்தோடு இக்கட்டுரை உடன்படவில்லை. தத்துவ வரலாற்றை நடு

நிலை நின்று அவதானித்தால், அதன் மகத்தான தொண்டுகளில் இதுவும் ஒன்று என்பது என் தாழ்மையான கருத்து.

'நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்
திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி'

என்ற பாரதியின் குரலில் மெய்யறிவு இல்லை எனலாமா? பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட நினைத்த பாரதியின் கருத்துக்கள் மெய்யறிவை அறிந்ததன் வெளிப்பாடே.

## நவீன சமூகமும் தத்துவமும்

இன்று நவீன விஞ்ஞான அறிவின் துரித வளர்ச்சி குறிக்கோளற்ற திறன் வளர்ச்சியாகவே உளது. இயந்திர மனிதன் செல்லக் குழந்தையாக மட்டுமன்றி வாழ்க்கைத் துணைவனாகவும் விளங்கப் போகின்றான். மனித மூளைக்குப் பதில் கணனி மூளையைப் பொருத்தும் நாகரிகம் உருவாகப் போகின்றது. உயிரியல் இரசாயனம் புதியஉயிரினங்களை உலாவ விடப்போகின்றது. இப்படி வளர்ந்து வரும் அறிவியல் ஒருபுறம், மறுபுறம் உண்மையான உழைப்பு, ஆற்றல், அறிவு உயர்ந்த பண்புகள் தாரமிழந்த கைம்பெண்ணாக மாறுகின்றன. அறியாமைகள் அரங்கேற, அறிவு குடைபிடிக்கின்றது. பொய்மை அகம் நுழைய வாய்மை தரகு வேலை பார்க்கின்றது. பொய்களும் புழுகுகளும் தேர் ஏறி உலாவி வருகின்றன. இவற்றைத் தத்துவம் அறிவுபூர்வமாக உணர்கின்றது. உலகுக்கு எடுத்துக்காட்டி, உண்மையை ஒளியேற்ற முயற்சிக்கின்றது. தத்துவத்தைப் பயிலாதோர் இதை அறியமாட்டார்களா? என்ற வினா எழலாம். அறிவார்கள், அறிந்து குரல் கொடுத்தவர்கள் அனைவரும் தத்துவ ஞானிகள் அன்று. ஆனால் தத்துவப் பயிற்சி இவற்றை, மற்றவர்களிலும் பார்க்க விரைவாக, எளிதாகக் கண்டுகொள்ள உதவுகின்றது.

மனிதன் தவறிழைத்தல் சாத்தியம். அவனது புலன்களே அவனை ஏமாற்றி விடுகின்றன. நீண்டகாலம் உண்மை என ஏற்றுக் கொண்டதால் ஊகங்களையும் அபிப்பிராயங்களையும் அறியாமைகளையும், அறிவு என ஏற்றுக்கொண்டு வாழ்ந்துள்ளான். வாழ்ந்தும் வருகின்றான். அவனது சிந்தனை, புலக்காட்சி. அனுபவம் எப்போதும் அவனுக்குச் சரியானதை அறிய உதவியதில்லை. அவற்றை வழிப்படுத்தி மெய்யறிவை அறிய வேண்டும் என்ற ஆர்வம் எல்லோரிடத்திலும் காணப்படவில்லை. அப்படி எல்லோரிடத்திலும் இருக்கும், இருக்கவேண்டும் என்று வாதிடவில்லை. ஆனால் இப்படி இருப்பது பிரயோசனமற்ற ஒன்றல்ல. உரியவனை, அறியாமை இடர்படுத்தாதிருக்கலாம். அதற்காக அதனை அறியாதிருப்பது மேல் என்று கூறமுடியாது. சில வேளை அறிந்தபின் முன்பிருந்ததிலும் பார்க்க மேலான சுகத்தை இப்போது அனுபவிக்கலாம். இதனையே தத்துவம் ஆற்றுகின்றது. தத்துவம் அறியாமை ஊகங்களை, அறிவுக்குப் பொருந்தாததைச் சுட்டிக்காட்டுவதன்மூலம் வாழ்க்கையில் நம்பிக்கையை, பற்றை, முயற்சியைத் தடுப்பதாகச் சிலர் வாதிடுவர். 'மனிதன் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டி வந்த மாளிகையை, அமைதியான வாழ்க்கையைச் சீர்குலைத்துவிட்டது, பதிலாக வாழ்க்கையில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி மனிதனை, துணிவற்றவனாக மாற்றுகிறது' எனச் சிலர் கூறுவர். 'தத்துவம் என்பதே கண் இல்லாதவன் இருட்டறையில், இல்லாத புதையலைத் தேடிய கதை போன்றதே' என்றும் வர்ணிப்பர். இக்கருத்துக்கள் தத்துவம் பற்றிய தவறான கருத்துக்கள். அனுபவமற்ற சிறு குழந்தையின் கூற்றுக்கள். தத்துவம் ஒரு விஞ்ஞான பூர்வமான அறிவு. காலதேச வர்த்தமானங்களுக்கேற்ற வளர்ச்சியடைந்து வரும் மெய்நெறி. அது வாழ்க்கைக்கு

வளமூட்டுகின்றது. மனிதனுக்கு நம்பிக்கையை, ஊக்கத்தை அளிக்கின்றது. அறியும் ஆர்வத்தை ஊக்குவிக்கின்றது. சிந்தனை மரத்துப் போகாதிருப்பதற்காக பசுமை ஒளியாகி வழிகாட்டுகின்றது.

## தத்துவ ஒளி

எல்லா அறிவிலும் இவ்வொளிக் கீற்றைக் காணலாம். அறிவு தொடர்பான மெய்யியல் (Theory of knowledge), மன மெய்யியல் (Philosophy of mind , அரசியல் மெய்யியல் (Philosophy of Political Science), ஒழுக்க மெய்யியல் (Philosophy of Ethics), மத மெய்யியல் (Philosophy of Religion), அழகியல் மெய்யியல் (Philosopy of Aesthetics) அறிவியல் மெய்யியல் (Philosophy of Science) உளவியல் மெய்யியல் (Philosophy of Psychology), கணித மெய்யியல் (Philosophy of Mathematics), தொழில்நுட்ப அறிவுசார் மெய்யியல் (Philosophy of Technology). முகாமைத்துவ மெய்யியல் (Philosophy of Management) என மெய்யியல் எங்கும் தன் ஒளியால் செழுமைப்படுத்துகின்றது. வளர்ந்து வரும் நவீன அறிவியல்துறைகளுக்கு முகம் கொடுத்து, அவற்றின் ஏற்புடைமையை எடுத்துக்காட்டி வழிப்படுத்தும் உயர்நெறி விஞ்ஞானமாகத் தத்துவம் அமைகிறது. குறைவிருத்திப் பொருளாதார நாடுகளில் தொழிற் தேவையை முன்வைத்து, கற்கை நெறிகளை மாணவர்கள் தெரிவு செய்வதால் எமது நாட்டில் இக்கற்கை நெறியின் முக்கியத்துவம், அவசியம் உணரப்படவில்லை. உயர்கல்வி என்பது சமூக உயர் அந்தஸ்தைப் பொருளாதார ரீதியில் பெற்றுத் தருதலே' என்ற மனப்பாங்கு சமூக உணர்வாகக் காணப்படுவதால் எமது பல்கலைக்கழகங்களில் இப்பாட நெறியைத் தெரிந்தெடுப்போர் எண்ணிக்கை மிக மிகக் குறைவே. அதனால் தான் தத்துவம் பற்றிய அறிமுகம் அவசியமாகின்றது.

- ☐ படித்துப் பல பட்டங்கள் பெற்றவன் கல்விமானல்ல! மனித பண்போடு நடப்பவனே கல்விமான்.
- ☐ மற்றவருக்குத் தேவைப்படுவதை கேட்குமட்டும் காத்திருந்து கொடுப்பவனிலும், அவர்கள் தேவையை உணர்ந்து கொடுப்பவனே மனிதாபிமானி.
- ☐ அற்ப ஜீவன்களுக்கும் அனுதாபம் காட்டுபவனே உயர்ந்த ஜீவனாகிய மனிதனுக்கு இன்னும் அனுதாபம் காட்டுவான்.

# PHILOSOPHY AS A GREEN LIGHT FOR ALL HUMAN BEINGS

**V. Ugabalasingam**, M. A. (Phil.), Dip. in Ed.

At the outset, the definition of Philosophy and its essence are briefly examined.

The chief aim of this article is to present the close affinity between human nature and Philosophy — Man is a philosophical animal. He is always in search of truth.

Many of the problems of philosophy are related to human concerns which are complex in their ramification in one form or another and perennially present to man.

Philosophy is not new to man It is interwoven with the history of human existence. It leads man to probe towards true knowledge and spreads its tentacles into all branches of learning.

Philosophy has always been helping to buid up veritable human knowledge. Though the ultimate aim of philosophy is identical for every thinker, yet the approaches and views vary in view of each one's individuality.

In this changing world, with the advancement of science and technology leading man into greater confusion and aimlessness, the guidance provided by philosophy is the only way to correct thinking, true advancement and efficiency and to remedy the feeling of desperation gripping man today.

When we realize that philosophy makes everything understood by the natural light of reason, it becomes clear that Philosohy is a Green Light for all Human beings.

---

Philosophy should be taught in such a way that students will be led to acquire a solid and coherent understanding of man, of the world, and of God. Basing themselves on a philosophic heritage which is perennially valid, students should also be conversant with contemporary philosophical investigations, especially those exercising special influence in their own country, and with recent scientific progress. In this way, thanks to a correct understanding of the character of modern times, students will be properly prepared for dialogue with the men of their own day.

The history of philosophy should be so taught that by coming to grasp the basic principles of the various systems, students will hold what is shown to be true among them, and be able to detect the roots of errors and disprove them.

The very manner of teaching should inspire in students a love for seeking. honoring and defending the truth vigorously, along with an honest recognition of the limitations of human understanding. The link between philosphy and the true problems of life should be carefully pointed out, as well as the relationship of philosophy to the questions which stir the students' minds.

Vat. II - Optatum Totius - 15

# படைப்பா? கூர்ப்பா?
# மனிதனின் தோற்றம் - ஓர் அறிமுகம்

● A. ஆனந்தக்குமார்

## முதலில்

நான் யார்? நான் எங்கிருந்து வருகிறேன்? எங்கே போகிறேன்? இவை உலகில் பிறந்த சிந்திக்கின்ற ஒவ்வொரு உயிரங்கியினதும் அடிப்படைக் கேள்விகள். மனிதன் பலவற்றில் அசுரத்தனமான முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இக்கேள்விகளுக்கான விடைகள் இன்னமும் முழுமைபெறாமலேயே உள்ளன. இக்கேள்விகளுக்கு விடையாகப் பலர் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். உலகில் உயிரினங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி இரு முக்கிய கொள்கைகள் இரு வெவ்வேறு பகுதியினரால் வெளியிடப்பட்டுள்ளன. முதலாவது, உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் இப்போதுள்ளதுபோலவே படைக்கப்பட்டன; இரண்டாவது, உயிர்கள் ஆரம்பத்தில் சிக்கலற்ற எளிய நிலையிலிருந்து இன்றைய நிலைக்குக் கூர்ப்படைந்து வந்துள்ளன. எனவே முழு உயிரங்கிகளின் குடும்பமும் ஒரு தனிக் குடும்பத்திலிருந்து உருவாகின. உயிர்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி இவ்விரு கருத்துக்களையும் ஆராய்ந்த 'தெயார்ட் டீ சாடேய்ன்' என்பவர் இவ்விரண்டையும் இணைத்து புதிய ஒரு கொள்கையை வெயியிட்டார்.

## படைப்பு (*Creation*)

உலகில் உயிரங்கிகளின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. சில விஞ்ஞான பூர்வமானவை, சில தத்துவார்த்தமானவை, இன்னும் சில சமய சார்பானவை. விஞ்ஞான ரீதியானவை காலத்திற்குட்பட்ட இப்போது பிரசன்னமாயுள்ள (Finite and Present realities) வற்றின் வளர்ச்சிப் படிமுறைகள், அவற்றின் தோற்றக் காரணிகள் பற்றி ஆராய்கின்றன. தத்துவார்த்தமானவை (Phiosophical) மேலும் சிறிது ஆழமாகி உயிர்களின் இருப்புக்கான உண்மைக் காரணியை ஆராய விழைகின்றன. இவற்றில் எதாலும் உயிர்எவ்வாறு தோன்றிற்று என்று தெளிவுபடுத்த முடியவில்லை.

உலகில் அனைத்தும் படைப்பால் தோன்றின என்பது சமயத்தின் வாதம். அகிலத்தில் எதுவும் ஏதோ ஒன்றிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். அந்த ஏதோ ஒன்று, ஒன்றுமில்லாமையிலிருந்து, அனைத்தையும் கடந்த ஒரு சக்தியால் படைக்கப்பட்டது என்பார் சிலர். அந்த 'ஒன்று' தான் அனைத்தையும் படைத்த சக்தி என்பார் வேறு சிலர். சமய சார்பான விடைகளில் நிரம்ப விளக்கமற்ற 'மறை பொருட்கள்' (Mysteries) உண்டு. இவை பெரும்பாலும் விசுவாசம், நம்பிக்கையின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளத்தக்கன. எனினும் இவை சிந்திக்கின்ற மனிதனை மேலும் சிந்திக்கத் தூண்டுகின்றன; நான் யார்...? எங்கிருந்து வந்தேன்...? எங்கே போகிறேன்...? சமய ரீதியான விளக்கம் சுருக்கமாக வருமாறு அமைகிறது.

1. காலங்கள், எல்லைகளைக் கடந்த இறைவனின் பரிசுத்ததனத்திலிருந்து, வல்லமையிலிருந்து உலகம் உருவானது.

2. இந்த இறைவனின் படைப்பாற்றலிலிருந்து நாம் உருவானோம். ஆதலால் எமது அடிப்படை அவனால் தீர்மானிக்கப்படுகிறது. எனவே எமது வாழ்வின் இலக்கு எல்லைகளைக் கடந்தது.

3. எனவே எனது வாழ்வும் எனது உடைமை அல்ல. அதனை என் எண்ணப்படி செயற் படுத்தவோ, அழிக்கவோ முடியாது.

இவை படைப்பால் உலகில் உயிர்கள் தோன்றின என்போரின் கருத்து. தோன்றிய உயிர்கள் எவ்வாறு இன்றைய நிலையை அடைந்தன? இன்றைக்கு இருக்கும் நிலையிலேயே படைக்கப்பட்டன என்பார் சமயத்தார். ஆனால் அவை கூர்ப்பால் இவ்வாறாயின என்பார் அறிவியலாளர்.

## கூர்ப்பு (*Evolution*)

பழையதிலிருந்து புதியது தோன்றலே கூர்ப்பு என விளக்கப்படுகிறது. இக்கூர்ப்பு எத்துறையிலும் நிகழலாம். ஆனால் எமது பிரச்சினை அண்டங்களில் உயிர்களின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கூர்ப்புக் கொள்கைகள் என்ன கூறுகின்றன என்பது பற்றியே.

கூர்ப்புக் கொள்கைகளே பல்வேறு விதமாகக் கூர்ப்படைந்து வந்துள்ளன. தொடக்கத்தில் உயிரற்ற சடப்பொருட்களில் இருந்து உயிரங்கிகள் தோன்றின என்பது தொடக்ககாலக் கருத்து. (உ-ம் கந்தலிலிருந்து எலிகள்) ஆனால் இதில் உள்ள தவறு விஞ்ஞானபூர்வமாய் நிருபிக்கப்பட்டது.

அடுத்து விலங்கியலாளர் லாமாக் (Lamark 1744 — 1829) தமது கொள்கையை வருமாறு கூறினார்; ஓர் உயிர் தனது எந்த உறுப்பை அல்லது இயல்பை அதிகம் பயன்படுத்துகிறதோ, அது விருத்தியடைந்து சந்ததிக்கும் கடத்தப்படுகிறது. பயன்படுத்தப்படாதது அல்லது பயன்படாதது தேய்ந்து பதாங்க நிலையடைந்து அற்றுப் போகின்றது. இவ்வாறு உயிர்கள் கூர்ப்படைகின்றன.

கூர்ப்புக் கொள்கையாளரில் முக்கியமானவர் இயற்கையியலாளர் சாள்ஸ் டார்வின் (1809 — 1882) இவர் இயற்கைத் தேர்வு எனும் கொள்கையின் அடிப்படையில் தமது கொள்கையை வரலாறு சுட்டினார்.

ஒவ்வொரு உயிரும் தன்னால் இயன்றளவு இனப்பெருக்கம் செய்கின்றது. (Cover Production) ஆனால் உலகில் உயிரங்கிகளின் எண்ணிக்கை வீதம் பெரும்பாலும் மாறாமலேயே இருக்கிறது, ஏனெனில் உயிரங்கிகளின் எண்ணிக்கை உயர்வைத் தடுக்கும் காரணிகள் பல உள்ளன. இவற்றில் முக்கியமானது 'இருப்பிற்கான போராட்டம்' (Struggle for existance) இப்போராட்டத்தில் இருத்தலுக்கு ஏற்ற இயல்புகள் கொண்டவை பிழைக்கின்றன. அதாவது தக்கன பிழைக்கின்றன. (Natural selection) இவ்வாறான ஏற்ற இயல்புகள் அவ் உயிரிலிருந்து சந்ததிக்குக் கடத்தப்படுகின்றன. இவ்வாறாக உயிரங்கிகள் கூர்ப்படைகின்றன என்கிறார் டார்வின்.

ஆனால் டீவிரிசின் (De Vries) கருத்துப்படி ஏற்ற இயல்புள்ள அங்கிகள் திடீரெனத் தோன்றி, பின் இயற்கைத் தேர்வு விதிக்காளாகி கூர்ப்படைகின்றன. இவ்வாறு கூர்ப்படைய முடியாதவை அழிந்து விடுகின்றன.

இவை சில கூர்ப்புக் கொள்கைகள், இவற்றின் குறை நிறைகள் அவற்றை

ஆராயும்போதே தெளிவுபடுகின்றன. எது, எப்படி என்னும் இக்கூர்ப்புக்கொள்கைகள் உயிர்களின், அதிலும் மனிதனின் இன்றைய நிலைக்கு நல்விளக்கம் தர முடியவில்லை. அத்தோடு இன்று ஏன் இக்கூர்ப்பு நிகழ்வதில்லை என்பதையும் கூறவில்லை.

### படைப்பு - கூர்ப்பு பற்றி தெயார்ட் (Teilhard de Chardin)

படைப்புப் பற்றியதும், கூர்ப்புப் பற்றியதும் கொள்கைகள் தம்முள் நிறைவற்றவை. ஆதலால் தெயார்ட் இவை இரண்டையும் இணைத்துத் தமது கொள்கைகளை வெளியிட்டார். அவரது கருத்துப்படி ஏதேனும் ஒரு விடயம் விஞ்ஞானத்தின் எல்லைகளுள் வரும் போதே அது உணரப்பட, ஆராயப் படக் கூடியதாய் உள்ளது. ஆனால் ஏதாவது ஒன்றை அறியமுடியவில்லை என்பதற்காக அதனை 'இல்லை' என மறுப்பது மடைமையானது. அவர் மேலும் கூறுவது, அண்டத்திலுள்ளவை அனைத்தும் ஓர் 'அகத்தைக்' (Within Consciousess) கொண்டிருக்கின்றன. இவ் 'அகம்' படைப்பின் உச்சியிலுள்ள மனிதனில் தெளிவாகத் தெரிகிறது; ஏனையவற்றில் குறைவாயுள்ளது.

இவரின் கூற்றுப்படி எதுவும் திடீரெனத் தோன்றுவதில்லை. மனிதன் உட்பட அனைத்தும் ஏதோ ஒரு நிலையில் அல்லது உருவில் காலங்களின் தொடக்கத்திலேயே இருந்தன. இந் நிலையை இவர் 'ஆதி அண்டக் கரு நிலை' அல்லது 'தொடக்கப் பிரபஞ்சக் கருநிலை' (Cosmic embryogenesis) எனக் கூறுகிறார். இக்கருவிலிருந்த அகம் (within) இதனை மேலும் சிக்கலான, தன்னோக்கிய நிலைக்குக் கூர்ப்படையச் செய்கின்றது. இக்கூர்ப்பு ஒரு முழுமையை இலட்சியத்தை – நோக்கிய தொடர்பயணம். நாம் அனைவரும் இப் பயண நிலையிலேயே இன்னமும் இருக்கிறோம். இக்கரு எவ்வாறு உண்டானது? தெயாடின் கருத்துப்படி உயிர்கள் அனைத்தும் ஒரு ஊற்றிலிருந்து வரவில்லை. ஆனால் அவை எவ்வாறு உயிரற்றதொன்றிலிருந்து தோன்றின; இரசாயன சேர்வைகளில் இருந்து எவ்வாறு அங்கிகள் தோன்றின என்பது ஒரு குழப்பமே. எமது விஞ்ஞானகூடங்களில் இது ஆய்ந்தறியப்படும்வரை இந் நொடியை அவிழ்ப்பது கடினமே.

டாவினின் இயற்கைத் தேர்வும், இருப்பிற்கான போராட்டமும்; டீ விரிசிரின் திடீர்த்தோன்றலும் சாத்திய மானதே. எனினும் உயிரினங்கள், அதிலும் மனிதன் இன்று அடைந்திருக்கும் உயர் நிலையை இவை விளக்கத் தவறுகின்றன. இவரது கருத்துப்படி ஒன்றின் மையத்திலுள்ள 'அகம்' தான் உயிர்களின் இன்றைய சிக்கலான முன்னேற்ற நிலையை அடையத் தூண்டுகிறது. எனவே கூர்ப்பு என்பது உடல் அல்லது சடத்துவ ரீதியானது என்பதைவிட 'அகநிலையானது' (Spiritual) என்பதை இவர் வலியுறுத்துகிறார்.

கூர்ப்பின் உயர்நிலையில் நிறபவன் மனிதன். மனிதனுக்கும், கூர்ப்பில் அவனுக்கு அடுத்தடுத்த படிகளிலிருக்கும் விலங்குகளுக்கும் பாரிய உடல் வேறுபாடுகள் குறைவு. ஆனால் மிக ஆழமான வேறுபாடு அவனது மூளையே. இதனால் மனிதன் அனுபவம் நிறைந்தவனாவது மட்டுமல்ல தனது அனுபவத்தையே மீளச் சிந்திக்க, தியானிக்கக் கூடியவனாகிறான், அஃதாவது அவன் தன்னுணர்வு உள்ளவனாகிறான். இது ஓர் உன்னத நிலையாகும். தன்னுணர்வும் சுய சிந்தனையும் உடையவன் உலகின் சட்டத்திற்கு அடிமைப்பட்டவனல்ல. மாறாக அவனே உலகை நடத்துகிறான் அதன் விதிகளைத் தீர்மானிக்கிறான்.

இவ்வாறு நீண்ட பிரபஞ்ச வரலாற்றுச் சட்டத்தின் பாதையில் மனி

தனும் வருகிறான். இதனூடு மனிதன் தன் கடைசி இலட்சியமான முழுமையை நோக்கி பயணமாகிறான். இவ்வரலாற்று ஓட்டத்தில் மேற்கூறியவாறு மனிதன் இரு முக்கிய கட்டங்களை கடந்துள்ளான். முதலாவது உயிரற்ற நிலையிலிருந்து உயிர் உருவாதலும்; இரண்டாவது மேலும் சிக்கலாக உளரீதியாக மனிதன் மேலும் கூர்ப்படைதலும் இக்கூர்ப்பு ஓட்டம் மேலும் மேலும் நடைபெறுகிறது. மனிதன் தனது அக நிறைவை, அதிலும் சமூகத்தின் மற்றைய மனிதனுடனான உறவுநிலையில் உச்ச நிலையை அடையும் வரை இது நடைபெறும். எனவே கூர்ப்பு என்பது தனியனுக்கு உரியது என்பதைவிட சமூக ரீதியானது என்பதே பொருந்தும். தனியன் (Individual) என்பது எவ்வாறு தன் சுய முயற்சியால் மாத்திரம் இலட்சியத்தை அடைய முடியாதோ, அவ்வாறே தன்னிலை மறந்த தனியன்களின் கூட்டமும் நிறைவை அடைய முடியாது. சுய மாண்பை உணர்ந்த, அதனை இழந்துவிடாத, தனியன்கள் ஒன்று சேர்ந்து குழுமமாக இணைந்து கூர்ப்படையும் போதே தமது இலட்சிய நிலையை (Omega Point) அடைய முடியும்.

தெயாடின் கருத்துக்கள் பாரம்பரிய சமயக்கொள்கைகளையும், மெய்யியலையும் நவீன விஞ்ஞானத்தையும் ஓரளவு சமரசஞ் செய்ய முயன்றுள்ளது. கூர்ப்பின் முடிவாக அவர் கூறும் இலட்சிய நிலைக்கு ஏற்ற ஆதாரங்கள் இல்லாவிடினும் தர்க்க ரீதியில் அவரது வாதம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகவே உள்ளது. எனவே அவரது கருத்துக்கள் பல ஆண்டுகளுக்கு இறையியல், மெய்யியலாளரின் சிந்தனைக்கு ஊக்கம்தரும்.

விஞ்ஞான ஆய்வுகளின் வளர்ச்சியால் கூர்ப்புக் கோட்பாடு மென்மேலும் அழுத்தம் பெறுவதாகத் தோன்றுகிறது. காலக்கிரமத்தில் அதனால் இறுதிக் காரணி (கடவுள்) என்ற சிந்தனையுமே ஓரங்கட்டப்பட்டு, இறுதியில் கைவிடப்படும் என்றும், படைப்பு என்ற கோட்பாடு உடைந்துவிடும் என்றும் கூற முனையலாம். ஆனால் அது உண்மையல்லவென தெயாட் நிரூபித்துள்ளார்.

## முடிவாக

உண்மையா, அது என்ன? இது அன்று பிலாத்து கேட்ட கேள்வி மட்டுமல்ல. நாம் ஒவ்வொருவரும் இறுதிவரை கேட்க வேண்டிய கேள்வி. இருப்பைப் பற்றி படைப்புக் கொள்கையாளரின் கூற்றையும், கூர்ப்புக்கொள்கையாளரின் கூற்றையும், அவற்றை இணைத்து தெயாட் வழங்கிய கருத்துக்களையும் ஆராய்ந்தோம். முழு அண்டமுமே இன்னமும் கூர்ப்படைந்து புதியதாகி, தன் இலட்சியத்தை நோக்கிப் பயணமாகிறதெனின், மேற்கண்ட கருத்துக்களும் கூர்ப்புப் பயணத்தில் பின் சென்றுவிட்ட இயல்புகள். இவற்றில் இருந்து புதிய சந்ததிக்குப் பெறப்பட்ட பயனுள்ள கருத்துக்களிலிருந்து புதியதைக் கண்டறிதல் இன்று வாழும் எமது பொறுப்பு. அப்போதுதான் புதியவை, புதிய சந்ததிக்குக் கடத்தப்பட பயணம் தொடர்ந்து நடந்து எமது இலட்சியத்தை நாம் அடைவோம். எனவே அனைவரும் பழையதோடு திருப்தியடைந்துவிடாது புதியதை நோக்கி முன்னேறுவோமாக.

✲ ✲ ✲

# CREATION OR EVOLUTION

A. Ananthakumar

It is a natural tendency of a rational being to seek the origin of all things. The explanation for this may conveniently be divided into two: Creation, or the origin of the universe, and Evolution the origin of material things, and in particular, life and man. According to the first, the different species of animals and plants which exist today are the descendents of animals and plants which were created at the beginning of the world, in the form which they have now; this hypothesis is known as the theory of special creation. The second hypothesis, known as the theory of Evolution or of descent, views the existing species of animals and plants as the descendents of relatively simpler and more generalized carlier types of life, which have reached their present form by a gradual process of increasing complexity; i. e. by a process of change or evolution from simpler forms. It will be seen that the theory of evolution suggests a genetic continuity of animals. The whole animal kingdom is viewed as one family, the different groups being related to one another and the relationship expressible in the form of a genealogical tree.

As science advances, the theory of evolution seems to become more emphatic. There may be an inclination to think that the phenomenon of evolution may sidetrack the idea of God and eventually ignore it completely and the theory of creation may collapse. But that is not the fact The contrary has been proved by Teilhard de Chardin. He outlines a vast scheme of evolution, beginning with the formation of mountains and seas and concluding with a foreward vision of man's next step from mutual conflict to mutual co-operation. He examines the current theories of transformism and the arguments of their leading opponents and details his own hypothesis of Christian evolutionism which will be familiar to readers of his book 'The Phenomenon of man.'

*The Evolutionists seem to know everything about the missing link, except the fact that it is missing.*

G. K. Chesterton

# வாழ்வின் அர்த்தம் தேடும் மனிதன்

● இதயதாஸ்

இன்றைய விஞ்ஞான யுகத்திலே ஒவ்வொரு மனிதனையும் அர்த்தமற்ற வாழ்வுநிலை அச்சுறுத்திக் கொண்டு இருக்கின்றது. மனிதன் தன் வாழ்வின் பொருளைக் கண்டுவிடத் துடிக்கின்றான் உள்ளத்திலே ஒரு தாகமும், ஏக்கமும், உடையவர்களாக, தமது வாழ்வின் அர்த்தம் என்ன என்ற கேள்வியுடன் பலர் இன்று உளவியல் மருத்துவர்களை நாடிச் செல்வதை காணக்கூடியதாக இருக்கின்றது. பணம், பொருள், அதிகாரம், சமுதாய அந்தஸ்து என்பவற்றை வாழ்வின் நிறைவிற்கான வழிகளாகக் கருதுகின்றனர். ஆனால் இவை நிறைவாக அடையப்பெற்றும் பலர், பொருளற்ற வாழ்க்கை நடத்துவதை நாம் காண்கின்றோம். வாழ்க்கைக்குரிய அர்த்தத்தைக் கண்டடையும் ஆவல் இன்று எல்லோரிடத்திலும் முதன்மை பெற்று விளங்குகின்றது.

வாழ்விற்கு அர்த்தம் காணும் செயற்பாடானது, மனிதனை ஏனைய படைப்புக்களிலிருந்து பிரித்து அவனுக்கு மாண்பையும், மகத்துவத்தையும் கொடுத்து அவனை மேன்மை அடையச் செய்கின்றது. மனிதன் தன் ஆற்றல்களையும், சக்திகளையும் வாழ்வுக்குக் கருத்துத் தேடப் பயன்படுத்துகின்றான். 'எனது வாழ்வின் பொருள் என்ன?' என்ற வினாவுடன் இளைஞர் ஒவ்வொருவம் தன் இருத்தலுக்கான அர்த்தத்தை முனைப்பாகத் தேடிக்கொண்டிக்கின்றனர்.

மனிதன் தனித்துவமானவன், ஒவ்வொருவரினதும் அழைப்பும் பணியும் வித்தியாசமானது. அவர் தம் சிந்தனையும், செயல்களும் வேறுபட்டவை. எனவே மானிட வாழ்வின் பொருள் இது தான் என்று பொதுவாக வரையறை செய்துவிட முடியாது. ஒவ்வொருவரின் அழைப்பிற்கும், காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப மனித வாழ்வு வேறுபடுவதால், மனிதனுக்கு மனிதன் வாழ்வின் அர்த்தம் மாறி அமைகிறது. மனித வாழ்க்கை வெறுமையானதல்ல. அது ஒரு மறைபொருள். விலைமதிக்க இயலாத செல்வத்தைத் தன்னகத்தே கொண்டது. எனவே வாழ்க்கைக்குப் பொருள் காணும் நிகழ்வும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஒன்று. அதாவது இதை ஒவ்வொரு மனிதனும் தன் சொந்த முயற்சியால் கண்டுபிடிக்க வேண்டியவனாக இருக்கிறான். வாழ்வின் பொருள் தனித்துவமானதாக இருப்பதால், அது எப்போதும் மாறுபட்டும் செல்கின்றது, வளர்கின்றது, துலக்கமடைகின்றது. ஆனால் ஒரு போதும் வாழ்க்கை பொருளற்றதாக மாறுவதில்லை. வாழ்வின் எந்த நிலையிலும், எத்தகைய இழப்புக்கள் மத்தியிலும், உலக செல்வங்கள் யாவும் மறைந்துமடிந்தாலும் வாழ்விற்கு மனிதன் மெய்ப்பொருளைக் கண்டடைய முடியும் கண்டடைய வேண்டும்.

வாழ்க்கைக்குப் பொருள் தேடும் ஒவ்வொரு மனிதனும், வாழ்க்கை அவனிடம் எதை எதிர்பார்க்கிறது என ஆழமாகச் சிந்திக்கவேண்டும். இது இன்றியமையா

தது. பிரபல மெய்யியல் வல்லுநர் நீச்சே சொல்லுவது போன்று, ஏன் நான் வாழ வேண்டும்?' என உணர்பவன், சிந்திப்பவன் தன் வாழ்வில் வரும் எத்துன்பத்தையும், சுமையையும், சவால்களையும் தாக்கிக் கொள்வான். வாழ்விற்குப் பொருள் தேடும் ஒவ்வொரு மனிதனும் தனது மனிதத்துவத்தையும், மனித மாண்பையும் உறுதிப்படுத்துகின்றான். முழு மனிதனாய் வாழ ஆசைகொள்ளும் ஒவ்வொருவனும் தனது வாழ்வின் பொருள் பற்றி அக்கறையும், ஆசையும் உடையவனாய், தனது நாளாந்த வாழ்க்கைச் சம்பவங்களிலும். அனுபவங்களிலும் அதைக் கண்டுகொள்ள முயற்சிகள் எடுக்கவேண்டும்

## வாழ்வு பொருளற்றதாகத் தோன்றுவதற்கான காரணங்கள்

இருத்தலின் வெறுமையும் இருத்தலில் வெறுப்புணர்வும் பெரும்பான்மையான மனிதரை இன்று வாட்டி, அவர்கள் வாழ்விலே சோர்வடைந்து, விரக்தியுடன் வாழ்க்கைச் சமர் புரிவதின் முதற் காரணமாகும். இருத்தலின் வெறுமை என்பது வாழ்வில் களைப்படைந்த நிலையைப் பிரதிபலிப்பதாகும்.

மற்றவர்களைப் பின்பற்ற, கண்டு பாவிக்க முற்படுவதும் இருத்தலின் வெறுமைக்குக் காரணமாகும். எமது வாழ்வு கூட்டத்தோடு சேர்ந்து 'கோவிந்தா' போடும் வாழ்வாகவும், மிருகக் குழு வாழ்வுக்குச் சமமானதாகவும் மாறுகின்றது. எந்த ஒரு செயலையும் நோக்கம், விருப்பம், காரணம் ஏதுமின்றி மற்றவர்களுக்காகச் செய்தால், அதன் மூலம் உள்ளார்ந்த அர்த்தத்தையோ திருப்தியையோ காணமுடியாது. எனவே படிப்படியாக வாழ்வில் சோர்வுகளைச் சந்திக்கநேரும். அத்தகைய வாழ்க்கை முறையையே இருத்தலின் வெறுமை என்கின்றோம்.

வாழ்வின் அர்த்தமின்மையை உணர மறு காரணம், ஆன்மீக வெறுமை அல்லது உள்ளார்ந்த வெறுமை ஆகும். வாழ்க்கையில் அர்த்தமின்மையை உணர்பவர்கள் உடல், உள ரீதியில் ஆரோக்கியம் உடையவர்களாக இருக்கலாம். ஆனால் ஆன்மீக ரீதியில் நோயாளிகள். விவிலிய நூலில் வரும் சமாரியப் பெண்ணின் கதை, இருத்தலின் ஆன்மீக வெறுமையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. உள்ளத்திலும், ஆன்மீகத்திலும் வெறுமையுடன். வாழ்விலே போராட்டம் நடத்தும் ஒவ்வொருவரும் அந்தச் சமாரியப் பெண்ணைப் போன்றவரே.

வாழ்வின் அர்த்தமில்லாத் தன்மைக்கு மறு காரணம் வேலை இன்மையாகும். இன்று மனிதன் செய்யும் மிகப் பெரிய தவறு, தனது வாழ்வை ஒரு சாதாரண இருப்புப் பொருளாகவோ அல்லது படைப்புப் பொருளாகவோ நினைத்து வாழ்க்கை நடத்துவதாகும். இதன் விளைவாக வாழ்வின் உண்மைப் பொருளையும், பயனையும் காணத் தவறி விடுகின்றான். இருத்தலில் ஏற்படும் விரக்தியால், தன் வாழ்வின் பொருளைக் காணமுனைந்தும் அது அவனுக்குக் கைகூடாமல் போய்விடுகிறது. வாழ்வின் பாதை வேறு, வாழ்வின் அர்த்தம் வேறு. ஆனால் இன்று பலர் இவ்விரண்டையும் வேறுபடுத்த முடியாமல் தவிக்கின்றனர். இதன் பயனாக வாழ்க்கைப்பாதையை இறுகப் பிடித்துக்கொண்டு அதுதான் எல்லாம் என இருந்துவிடுகின்றனர்.

துன்பங்களும், துயரங்களும், கஷ்டங்களும், சவால்களும் எம் வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும்போது, கடந்த கால வாழ்க்கைதான் நிறைவானதென எண்ணுகின்றோம். அன்றேல் எதிர் காலத்தைப் பற்றிக் கவலை கொள்கின்றோம். நிகழ்காலம் பற்றிச் சிந்திக்கத் தவறிவிடுகிறோம். தனது வாழ்வைக்

குறித்துக் கேள்வி கேட்கத் தவறும் மனிதன் தன் வாழ்வில் அர்த்தத்தைக் காண முடியாததுடன் அதை நிரந்தரமாகவே இழந்தும் விடுவான.

## அர்த்தமற்ற வாழ்வின் விளைவுகள்:

இன்று நடக்கும் எல்லாவிதமான அழிவுகளுக்கும், குடும்பங்களிடையேயும், நாடுகளிடையேயும் நடைபெறும் சகல விதமான போர்கள், பிரிவினைகள், போட்டிகள், கொலைகள் அனைத்திற்கும் அடிப்படைக் காரணம் அர்த்தமில்லாத வாழ்க்கையை மனிதன் வாழ்வதாகும். அதன் விளைவு! அமைதி, மகிழ்ச்சி, நிறைவு இல்லா நிலை. பணம், பதவி, பட்டம் இவற்றால் வாழ்வுக்கு மகிழ்ச்சியை, அர்த்தத்தைக் கொடுத்துவிட முடியும் என்றும், இழந்துபோன வாழ்வின் அர்த்தத்தை இவற்றின் மூலமாக மீளக் கண்டுபிடிக்கலாம் என்றும் மனிதன் நினைத்துவிடுகிறான். ஆனால் இது சாத்தியமாகாது.

அர்த்தமற்ற வாழ்வின் விளைவாக வாழ்க்கையின் இரண்டாம் தரப் பொருட்களான பணம், பதவி, பட்டம்... முதலிடம்பெற, வாழ்வின் உண்மைப் பொருள் செறிவிழந்து காணப்படுகிறது. அளவிற்கு அதிகமாக பாலியலில் ஈடுபடுவதும், மதுபோதைப் பொருட்கள் பாவிப்பதும் அர்த்தமற்ற வாழ்வின் வெளிப்பாடுகள் எனலாம். இதன் மூலம் அமைதியையும், வாழ்வில் இன்பத்தையும் காணப் பலர் முயற்சிப்பதை முன்பு ஒருபோதும் இல்லாத அளவிற்கு இன்று நம் சமூகத்தில் பரவலாகப் பார்க்கின்றோம். உலகமெங்கும் இளைஞர் யுவதிகள் இவ்வழிகளில் வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கண்டுவிடலாம் என நினைக்கிறார்கள். ஆனால் இந்த வாழ்வுமுறை, அர்த்தத்தை அல்ல, வாழ்வுக்கு மேலும் அழிவையே கொண்டுவரும் என்பது திண்ணம்.

அர்த்தமற்ற வாழ்வு நடத்தும் மனிதனுக்கு வாழ்வில் நிம்மதியோ, மகிழ்வோ, நிறைவோ இருக்க முடியாது. உலகிலே பல செல்வந்தர்கள் இருக்கிறார்களே. அவர்கள் தங்களிடம் உள்ளவற்றோடு நிறைவடைகிறார்களா? தொடர்ந்து பொருள் தேடி அலைகிறார்கள். இது அவர்களின் உள்ளத்தின் நிறைவற்ற தன்மையையும், வாழ்வின் அர்த்தமற்ற நிலையையும் அல்லவா சுட்டுகின்றது!

எல்லாம் இருந்தும் வாழ்வின் அர்த்தம் காணாததன் பயனாகப் பலர் தமது வாழ்க்கைச் சக்கரத்தை இடையில் நிறுத்திவிட முனைகின்றனர். தற்கொலை, அர்த்தமற்ற வாழ்வின் மிகப் பயங்கர விளைவாகும்.

## வாழ்வுக்கு அர்த்தம் காண்பது எப்படி?

வாழ்வது ''எதற்காக?'' என்பதை உணர்ந்துள்ள மனிதனால், ''எப்படி'' என்பதை எச்சூழ்நிலையிலும் தாங்க முடியும் என்று இருப்பியல் வாதச் சிந்தனையாளர் நீட்சே கூறுகிறார். விக்ரர் பிராங்கிள் (Viktor Frankl) என்னும் உளவியலாளர் ''அர்த்தத்தின் ஊடே குணப்படுத்தல்'' என்ற அணுகுமுறை மூலம் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்விற்காக அர்த்தத்தைக் காண உதவலாம் என கூறுகிறார். இந்த அணுகுமுறையில் நோயாளி அமைதியாக இருந்து மருத்துவர் கூறும் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் உன்னிப்பாகக் கேட்கவேண்டும். இதன் அடிப்படை நோக்கம், மனிதன் எந்நிலையில் வாழ்ந்தாலும் அவனுடைய வாழ்வுக்கு அர்த்தம் உண்டு என்பதைத் தெளிவாகப் புரிய வைத்தல். அடுத்தது, அதன் விளைவாக அவன் மகிழ்வாக வாழ வழி காண உதவுதலாகும்.

மனிதனுடைய துன்பங்களை நீக்குவதோ அல்றேல் இன்பத்தை அவனுக்குக் கொடுப்பதோ இந்த அணுகுமுறையின் நோக்கம் அல்ல. மாறாக வாழ்வின் பொருளை அவனுக்கு உணர்த்துவதே. அர்த்தமற்ற வாழ்வு நடத்தும் அவனின் சிந்தனையையும், கண்ணோட்டத்தையும், செயற்பாடுகளையும் விரிவுபடுத்தி அதன் மூலம் வாழ்க்கையின் இன்ப துன்ப வேளைகளில், மறைந்துள்ள வாழ்வின் பொருளை அவனுக்குக் காண்பிப்பதே ''அர்த்தத்தின் ஊடே குணப்படுத்தல்'' செயல்முறையின் அடிப்படை நோக்கமாகும். மனிதன் தனது அடிமனதில் உண்மையாகவே எதை ஆசிக்கிறான் என்பதை இது அவனுக்கு உணர்த்துகிறது, அவன் தன் வாழ்வின் பொறுப்பையும், பொருளையும் அறிய உதவுகிறது. தனது வாழ்வுக்கு அர்த்தம், பெறுமதி உண்டு என மனிதன் உணர்ந்தாலன்றி, வேறு எதுவும் அவனை அழிவுகளிலிருந்து காப்பாற்றிவிட முடியாது.

முடிவுரை :

ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன். அவன் அழைப்பு, பணி, இலட்சியம் யாவும் வேறுபட்டது. அதற்கமைய ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் அர்த்தமும் மாறுபட்டுச் செல்கின்றது. ஆனால் எந்த நிலையிலுப் மனித வாழ்வு பொருள் இழப்பதில்லை. இன்பத்திலும், துன்பத்திலும், வாழ்விலும் சாவிலும், உயர்விலும், தாழ்விலும், வெற்றியிலும், தோல்வியிலும் வாழ்க்கைக்குப் பெறுமதி, அர்த்தம் உண்டு என்பதை நாம் ஆணித்தரமாகப் புரிந்துகொள்ள வேண்டும். எம் மண்ணில் நடக்கும் நிகழ்வுகள் எம் வாழ்வை சோர்வடையச் செய்யவிடாது, இந்த வாழ்வு முறையிலும் வாழ்வுக்குப் அர்த்தம் உண்மையாகவே உண்டு என்பதை உணர்ந்து, அதை நிறைவாகக் கண்டடைய அயராது ஆர்வமுடன் உழைப்போம். வாழ்க்கைக்கான அர்த்தத்தை இரண்டாம் தரப் பொருட்களில் பொதிக்காது, எமது சொந்த முயற்சியுடன், அனுபவம் பெற்றவர்களின் உதவியையும் இணைத்து, எம் வாழ்வின் பொருள் அறிந்து இன்பமாக வாழ்க்கைப் பயணம் தொடர்வோம்.

மனிதனின் தேடலின் விரைவு குறையவில்லை. ஆனால் எதைத் தேடுகின்றான் என்பதே கேள்விக் குறி.

# Man's Search for Meaning of Life

✲ Ithayathas

The existential question about meaning of life, is haunting people to-day more than any other problem. Many people have the means to live but see no meaning of life. Man's search for meaning is a world-wide phenomenon experienced also by our younger generation. People approach a psychiatrist with the question: "What is the meaning of my life?" The search for meaning is the distinctive characteristic of being human.

Man is unique and he has his own specific vocation or mission and environment in life. Hence the meaning of life differs from man to man. The meaning of life being unique and a matter for personal discovery, must be sought and found by oneself. Such discovery of the unique meaning of one's life, as we now understand is possible even if all that one values disappear totally.

Feeling of meaninglessness of life is the most crucial problem in the twentieth century. There are many causes for this: blindly following others without thinking and functioning independently, existential and spiritual vacuum or inner emptiness in life, unemployment, the hopelessness of the prevailing situation etc.

There are many consequences of this meaninglessness of life - namely, existential frustration, unhappiness, depression, addiction to alcohol and drugs, suicide, war and confliet etc.

What is really needed to find meaning in life is a fundamental change in our attitude towards life.

In NIETZCHE'S words : He who has a 'WHY' to live for, can bear with almost any 'HOW'. Meaning of life of each individual is unique and ever unfolding but it is never missng. VIKTOR E. Frankl invented Logo-therapy as a way to help rediscover meaning in life. Logotherapy means "Healing through meaning". In Logo-therapy, the patient is actually confronted with and reoriented towards the meaning of his life by broadening his field of vision so that he becomes conscious of the whole spectrum of potentials and sees a meaning clearly. It helps him become aware of what he actually longs for in the depth of his being. There is nothing to protect man from all distresses; yet, inspite of them, he realizes that there is meaning in his life. Logotherapy provides strong support to man to discover this meaning.

# பிளேற்றோவினதும் மறுமலர்ச்சிக் காலத்தினதும் அரசியல் மெய்யியல் தத்துவங்கள்

## — ஒரு ஒப்பீட்டு நோக்கு —

✲ P. F. இராஜசிங்கம்

### முன்னுரை

கிரேக்க தத்துவத்தின் முக்கிய முன்னோடிகளின் ஒருரான பிளேற்றோ (Plato) கி.மு. 428 இல் பிறந்தார். இவர் புராதன காலத்து மெய்யியலாளர்களில் சிறந்த ஒருவர். பிளேற்றோவின் அரசியல், மெய்யியல் தத்துவங்கள் மிகச் சிறந்தவையாகும். அதுமட்டுமல்லாமல் அவரே முதன் முதலில் அரசியல் மெய்யியல் தத்துவங்களைப்பற்றிப் பேசியவராவார். பிளேற்றோவின் தத்துவங்கள் புராதன (Ancient), மத்திய (Medieval) காலப்பகுதிகளில் மட்டுமல்லாது மறுமலர்ச்சி (Renaissance)காலப் பகுதியிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றதைக் காணலாம்.

மறுமலர்ச்சிக் காலத்தில் பிளோற்றோவின் அரசியல் மெய்யியல் தத்துவங்களின் தாக்கம் என்று கூறும்போது, கல்விமான்களின் தெரிவு, மக்களின் வாக்குரிமை, மற்றும் இதர உரிமைகளைக் கூறலாம். இவ்வுரிமைகள் அனைத்தும் பிளேற்றோவின் அரசியல், மெய்யியல் தத்துவங்களை அடிப்படையாக வைத்தே வளர்ச்சியடைந்துள்ளன.

### பிளேற்றோவின் ஆட்சி முறைகள்

பிளேற்றோவின் 'குடியரசு' (Republic) என்ற நூலில் ஐந்து வகையான அரசியல் முறைகளை முன்வைத்தார்: பிரபுக்களின் ஆட்சி (Aristocracy), செல்வந்தர்களின் ஆட்சி (Timocracy), குழு ஆட்சி (Oligarchy), மக்களாட்சி (Democracy), கொடுங்கோலாட்சி (Tyrnny).

#### பிரபுக்கள் ஆட்சிமுறை

பிளேற்றோ பலதரப்பட்ட அரசாட்சி முறைகளை சமுதாயத்திற்கு முன்வைத்த போதும் அவரின் அடிப்படை விருப்பு பிரபுக்கள் ஆட்சி முறையாகும். அதாவது சமுதாயத்திலுள்ள பல கலைகளிலும் சிறந்து விளங்கியவர்களும், மக்கள் அபிமானத்தைப் பெற்றவர்களும் மட்டுமே ஒரு ஒழுங்கான, நீதியான ஆட்சி முறையை அமைப்பதற்கு பொருத்தமானவர்கள் என்றும், உண்மையில் அப்படிப்பட்ட ஒரு ஆட்சி முறை அமைப்பு சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் நிம்மதியான வாழ்க்கையை கொடுக்கக்கூடியது என்ற மெய்யியல் கண்ணோட்டத்திலும் பிளேற்றோ சிந்திக்கலானார். அதை அமைப்பதற்காக அவர் அரசியலில் ஈடுபட்டதை, குறிப்பாக தன்னுடைய கிரேக்க நாட்டு சாம்

ராச்சியத்தில் இருந்த அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் அண்மையிலுள்ள இத்தாலி நாட்டிற்கும், கிரேக்கத்திற்கும் பிரயாணம் செய்ததிலும், அரசியல் விடயங்களில் ஈடுபட்டதிலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவ்வாட்சிமுறை மாறாத (Rigid) சட்ட வழக்குகளைக் கொண்டது. இதை ஒரு இலட்சிய ஆட்சி (Ideal state) முறையாகக் கண்டார்.

## பிளேற்றோவின் அரசியல் மெய்யியல் தத்துவங்களின் வளர்ச்சி

அரசியல் விஞ்ஞானிகள் அரசியலின் ஆரம்பத்திலும் அதன் வளர்ச்சியிலும், அதன் தன்மை, அமைப்பு, நோக்கம், செயற்பாடு, அரசியற் கொள்கைகள், ஆகியவற்றில் கருத்தாய் இருந்தார்கள். பிளேற்றோவின் அரசியல் மெய்யியல் வளர்ச்சிக்கு ஒரு வரலாற்று நிகழ்ச்சி அடிப்படையாய் அமைந்து, அத்தத்துவங்கள் ஒரு அரசியல் நிறுவனமாக (Government) கட்டி எழுப்பப்பட்டது.

அவர் காலத்தில் கிரேக்க நாடு பல பட்டணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளுக்கிடையே அடிக்கடி யுத்தங்கள் ஏற்பட்டன இந்நிலையில் அவர் இவ்வகைக் குறைபாடுகளில் இருந்து அவற்றை விடுவிக்கவும் அதனால் மக்கள் சமாதானமாக வாழவும், முழுமையான ஒரு வளர்ச்சியை எவ்வாறு அடையலாம் என்று எடுத்துக்காட்டினார். ஸ்பாட்டாவின் (Sparta) அரசியல் விதிமுறைகளையும், அரசியல் நிறுவன அமைப்புக்களையும் பிளேற்றோ கற்று, ஒழுக்கவியலை உதவியாகக் கொண்டு, சிரிய ஆட்சி முறை வளர்ச்சியடையச் செய்வதற்கு வழிவகுத்தார்.

தனது 'குடியரசு' என்னும் நூலில் சீரிய ஆட்சி முறையைப் பற்றி விபரிக்கின்றார். மேலும் 'யூட்டோப்பியா' (Utopia) என்றும் நூலில் ஆட்சியாளர் (Ruling class), படையினர் (Auxiliary class) உழைப்பாளிகள் (Labour class) என மூன்று பிரிவினரை முன்வைக்கின்றார். இருந்தும் ஆட்சியாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் கல்விமான்களாகவும் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும் உருவாக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். ஏனென்றால் இப்படியானவர்களையே மக்கள் தங்கள் தலைவர்களாகத் தெரிவுசெய்ய விரும்புகின்றனர். அதே நேரத்தில் ஆட்சியாளர்களும் ஒவ்வொரு தனி மனிதனையும் கருத்திற்கொள்ளவேண்டும் என்பதும் அவரின் கருத்து.

வரலாற்று நிகழ்ச்சிகளின் ஆதாரங்களைக் கொண்டு முதலில் சக்கரவர்த்தி ஆட்சியே (Monarchy) தோன்றியதெனக் கருதக்கூடியதாக இருக்கின்றது. பின் அது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு பிரபுக்கள் ஆட்சி அறிமுகம் செய்யப்பட்டது. இது மக்களாட்சியாக மாறிய பொழுது மக்களின் தொடர்ச்சியான பங்களிப்புக் காணப்படுகிறது. இவ்வாட்சி முறையில், சுதந்திரமான விவாதங்களும், ஒருவரொருவரை மரியாதை செய்து மற்றவர்களுடைய நியாயங்களுக்கு மதிப்புக்கொடுக்கும் பண்புகளும் காணப்படுகின்றது. இதிலிருந்து பிளேற்றோவின் அரசியல், மெய்யியல் தத்துவம் ஒவ்வொரு மனிதனின் அடிப்படை ஆவலில் வெளிப்படும் நீதி நெறியான, அமைதியான ஆட்சிக்கு வழிவகுக்கும் எனத் தோன்றுகிறது.

அவர் முன்வைத்த பிரபுக்கள் ஆட்சி (சீரிய ஆட்சி) முறை ஒரு இலட்சியமே ஒழிய, யதார்த்த உலகில் நிறை அனுபவமாக இருக்கமுடியாது. எனவே பெரும்பாலும் அது கோட்பாட்டளவிலேயே இருக்குமென்றும், நடைமுறையில் காண்பது கடினமென்றும் புலப்படுகின்றது.

## மறுமலர்ச்சிக் காலம்

மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் மெய்யியல் தத்துவங்கள் புத்துயிர்பெற முன்னோடிகளாக இருந்தவர்கள் மாக்கியவல்லி (N. Machiavelli 1469—1527) கொம்பனெல்லா (J. Campanella, 1569 — 1645) போடின் (J. Bodin 1530 1599) அல்த்துஸ் (J. Althuis (1557 — 1636) குறோசியுஸ் (H. Crotius, 1583—1645 ஆகியோராவர்.

மறுமலர்ச்சிக்காலத்தில் புராதன கால, கிரேக்க, உரோம மெய்யியல் தத்துவ ஞானிகளின் சிந்தனைகள் புத்துயிர் பெற்றன. மறுமலர்ச்சி என்பதன் அர்த்தம் கிரேக்க உரோமைச் சிந்தனைகளின் புதுப்பிறப்பும் அறிவின் எழுச்சியும் ஆகும். புராதன தத்துவங்களைப் படித்த மறுமலர்ச்சிக்கால அரசியல் மெய்யியலாளர்கள் திருச்சபையின் (Church) ஆதிக்கத்திக் இருந்து நாட்டையும் அரசியலையும்பிரித்தெடுத்து அவைகளின் வெவ்வேறான நிலைப்பாட்டையும் முன்வைத்தார்கள். அத்தோடு நாட்டின் அரசியல் எதையும் சாரா ஒரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தினார்கள். ஆகவே பிளேற்றோவின் அரசியல், மெய்யியல் தத்துவங்கள் மறுமலர்ச்சிக்கால அரசியல் தத்துவங்களில் தாக்கம் ஏற்படுத்தின என்பது உறுதி.

## ஒற்றுமை வேற்றுமைகள்

பிளேற்றோவினுடைய அரசியல் மெய்யியல் தத்துவங்களையும் மறுமலர்ச்சிக்கால தத்துவங்களையும் கோட்பாடாகவும் நடைமுறையிலும் ஒப்பிட்டு நோக்குமிடத்து, சில ஒற்றுமைகளையும் சில வேற்றுமைகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்கியவல்லி எல்லாவற்றிற்குள்ளும், பிளேற்றோவின் பிரபுக்கள் ஆட்சிமுறையையே அதி சிறந்ததாகக் கணித்தார். அது அரசியல் அறிஞர்களும் நாட்டை ஆளக்கூடிய பாதுகாவலர்களும் இணைந்த ஒரு இறுக்கமான, நன்கு பயிற்றப்பட்ட அமைப்பாக இருந்ததால் இலட்சிய ஆட்சிமுறைக்கு இட்டுச்செல்லும் என சிந்தித்தார்.

சமூகத்தின் பொது நலனைக் கருத்திற்கொண்டு, அரசியல் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக பிளேற்றோ முன்வைத்த மாறாத பிரபுக்கள் ஆட்சி முறையானது சர்வாதிகாரப் போக்குடையதல்ல என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆனால் காலப் போக்கில் அதில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களையும் அதிகார துர்ப்பிரயோகங்களையும் நிவர்த்தி செய்வதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் முயற்சித்த மக்கியவல்லி, அது ஒரு சர்வாதிகார ஆட்சிமுறையாக உருப்பெற வழிவகுத்தார்.

பிளேற்றோவின் அரசியல் தத்துவமும் அதன் நடைமுறைகளும் மறுமலர்ச்சிக் காலத்திலும் தொடர்ந்து நிலைப்பதை, குறிப்பாகப் பல நாடுகளில் பிரபுக்கள் ஆட்சி இருந்ததின்மூலம் காணலாம் ஆனால் எவ்வளவிற்கு அவரின் தத்துவத்திற்கேற்ப சீரிய ஆட்சிமுறை நடைபெற்றது என்பது கேள்விக்குறியே! மேலும் போடின், குறோசியுஸ் ஆகியோர், மக்கள் தமக்கு ஏற்ற தலைவர்களை தெரிவுசெய்ய உரிமையுடையவர்கள் என்று கூறுவதில், பிளேற்றோவின் அடிப்படை அரசியல் தத்துவம் வெளிப்படுவதைக் காணலாம். மேலும் அவரைப் போன்று இவர்களும் ஆட்சியாள

ருக்கு அதிஉன்னத அரசியல் ஞானம் (Wisdom) தேவையென வற்புறுத்தியதோடு ஆட்சியாளர்கள் கடவுளின் பிரதிநிதிகள் என்ற கொள்கையையும் முன்வைத்தனர். ஆனால் தலைவனின் ஆட்சி நாட்டு மக்களுக்கு நன்மை விளைவிக்காதபோது, நாட்டு மக்கள் தலைவனுக்கு எதிராக எதிர்த்து வாதிட உரிமை உண்டு என்ற தமது கொள்கையையும் முன்வைத்தனர். போடின், அல்த்தூயிஸ், கிறோசியஸ் ஆகியோர் மக்கள் தமது விருப்பப்படியே வேறு ஒரு தலைவனை தெரிவு செய்யலாம் என்ற கொள்கையை முன்வைத்தனர். இக் கருத்துக்கள் பிளேற்றோவின் தத்துவங்களுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. கிறோசியஸ் தலைவன் மக்களால் தெரிவுசெய்யப்படும் முறையை ஆதரித்தாலும், தலைவன் கடவுளின் பிரதிநிதி என்றும் அதனால் அவரைப் பதவியில் இருந்து விலக்கமுடியாது என்ற தத்துவத்தையும் முன்வைத்தார்.

மாக்கியவல்லிக்கு அடுத்தபடியாக வாழ்ந்த மறுமலர்ச்சிக்கால மெய்யியலாளர்கள் அவரது கோட்பாட்டுக்குச் சாதகமாகவும், பாதகமாகவும் அபிப்பிராயம் தெரிவித்தனர். சர்வதிகார ஆட்சியில் மனித நற்பண்புகள் முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆனால் பிளேற்றோவின் குடியரசு என்னும் நூல் சுதந்திரமான நாட்டைப் பற்றியும் சிறந்த ஆட்சியைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றது நீதி எது, அநீதி எது என்று எடுத்துக்காட்டும் தகுதி பிரபுக்கள் ஆட்சி முறைக்கு மட்டும்தான் உண்டு. மறுமலர்ச்சிக்கால மெய்யியலாளரான கொம்பனல்லா பிளேற்றோவின் தத்துவங்களுக்கு மாறான சக்கரவர்த்தி ஆட்சி முறையை (Monarchical rule) விரும்பினார்.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகளில் இருந்து பிளேற்றோவின் அரசியல் மெய்யில் தத்துவங்களிலும், மறுமலர்ச்சிக்கான அரசியல் மெய்யியல் தத்துவங்களிலும் சில ஒற்றுமைகள் வேற்றுமைகளை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது எவ்வாறாயினும் இருபாலாரின் தத்துவங்களிலும் மக்களின் உரிமைக்கும், சமத்துவத்திற்கும், அரசியல் நீதிக்கும், ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்,

## மறுமலர்ச்சிக்கால அரசியல் எழுச்சியில் பிளேற்றோவின் அரசியல் மெய்யியல் சித்தாந்தத்தின் தாக்கம்

மறுமலர்ச்சிக்கால அரசியல் மெய்யியலாளர்கள் ஐரோப்பிய சூழ்நிலையில் இருந்த ஆட்சித் துர்ப்பிரயோகங்களை ஒழிக்கவேண்டுமென்ற அவாக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் கிறிஸ்தவ ஆதிக்கம் அரசியலில் அதிகமாக ஊடுருவியிருந்தது என்பது யதார்த்தமான அனுபவம். இதன் மட்டில் மறுமலர்ச்சியின் மூன் எடுப்பாளர்கள், அரசியலை திருச்சபையின் ஆதிக்கத்திலிருந்து தெளிவாகப் பிரிக்க வேண்டும் என்றும், ஆட்சி முறைகள் சுதந்திரமாக செயற்பட வேண்டுமென்றும் விரும்பி உறுதி பூண்டனர் இவர்கள் அரசியலில் அடிப்படை மாற்றம் ஒன்றை உருவாக்க புராதன தத்துவ ஞானிகளின் சிந்தனைகளை அலசி ஆராய்ந்து, அவைகளின் சிறப்பியல்புகளைக்கொண்டு, ஐரோப்பிய மறுமலர்ச்சி அரசியல் விஞ்ஞானத்தை உருவாக்க முயன்றனர். இதற்குப் பிளேற்றோவின் அரசியல் சித்தாந்தம் பெரும் உதவி செய்தது என்பது தெளிவாக உள்ளது.

## தற்கால அரசியல் விஞ்ஞானத்திலும் அதன் செயற்பாடுகளிலும் பிளேற்றோவின் சிந்தனைத் தாக்கம்

சமகால அரசியல் விஞ்ஞானமும், அரசாட்சியும் அரசியல் தத்துவ ஞானிகளின் இலட்சியக் கருத்து முறையின்படி செயற்படுகின்றனவா என்பது ஒரு கேள்விக்குறியே என்பது இன்று நடைபெறுகின்ற உலகளாவிய அரசியல் நோக்கில் தெளிவாக உள்ளது. பொதுவாக அரசியல் சித்தாங்களை அல்லது இலட்சியக் கருத்துக்களை அரசியலில் ஈடுபடும் நபர்களும், ஆட்சி செய்யும் தலைவர்களும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக, அழகாகவும் கவர்ச்சியாகவும் பேசுகின்றனர். மக்கள் அவர்களுடைய பேச்சுக்களால் ஈர்க்கப்படுகின்றனர். சில வேளைகளில் சுயலாபத்திற்காக அவர்களின் சொற்களில் நம்பிக்கைகொண்டு மக்கள் தங்கள் கையிலேயுள்ள சக்தியை தவறான முறையில் பயன்படுத்துகின்றார்கள். இதனால் நல்ல தலைவர்கள் சிறந்த ஒரு அரசாட்சியை அமைப்பது உலக நாடுகளில் அரிதாகப் போய்விட்டது. இவ்வனுபவங்களுக்கு மக்கள் அதிகமாகப் பழக்கப்பட்டுவிட்டதால், பிளேற்றோவின் சிந்தனைப்படி மக்களின் அபிமானத்தைப் பெறும் தலைவர்கள் சமுதாயத்தில் ஆட்சி அமைப்பது என்பது கடினமானதொரு காரியம். ஆனாலும் உள்ளத்தின் ஆழத்தில் மக்கள் பிளேற்றோவினுடைய அரசியல், மெய்யியல் தத்துவங்களை விரும்புகின்றனர் என்பதை உலகில் சமீப காலத்தில் நடந்த அரசியல் புரட்சிகளைக் கொண்டு அவதானிக்கலாம். எடுத்துக்காட்டாக பிலிப்பைன்ஸ் நாட்டில் ஜனாதிபதி மார்க்கோஸின் சர்வதிகாரம் கவிழ்க்கப்பட்டதும், றூமேனிய நாட்டுத் தலைவராக இருந்த நிக்கலேஸ் சொசெஸ்க்கு என்பவர் ஆட்சி கவிழ்க்கப்பட்டதும் சிறப்பான, தெளிவான ஆதாரங்களாகும். அதாவது இன்றும் அரசியல் விஞ்ஞானத்தின் ஊற்றுக்கள் பிளேற்றோவின் அரசியல் மெய்யியல் தத்துவங்களாகும்.

நன்மை செய்பவனுக்குரிய புகழை, மதிப்பை உலகம் தடுத்தாலும் அவன் உள்ளத்திலே ஏற்படும் மனத்திருப்தியை யாரும் தடுக்க முடியாது.

○ ○ ○

உண்மை, நீதி, இரக்கம், கரிசனை, அன்பு என்பவற்றை வேதங்களும் வேதர்களும் இடித்து இடித்துக் கூறினாலும் வாழ்வு இவற்றுக்கு எதிர்மாறாயின், சமயங்கள் மானுடத்துக்கு ஒரு கேள்விக்குறி.

# A Comparison of Plato's Republic with the Political Philosophy of Renaissance

(*Summary*) ✲ P. F. Rajasingam

Plato is a famous philosopher of the 4th century B. C. Owing to the influence of his philosophy there arose statesmen and rulers for the betterment of the individual life and the state. He identified five forms of government. They are: Aristocracy, Timocracy, Democracy, Oligarchy and Tyranny.

He preferred Aristocracy to all others thinking it to be a good form of goverment "composed of a body of political intellects and "Guardians" qualified to rule through a rigid system of training which should lead up to the creation of "ideal state".[1] In his rigid aristocracy, superhuman wisdom is the criterion necessary to judge as just or unjust. His political philosophy influenced the political thinkers of the Renaissance: N. Machiavelly, T. Campanella, J. Bodin, J. Althuis, and H. Grotius, who led the formation of its political philosophy. Renaissance means "Rebirth of the Greek and Roman spirit and a revival of learning."[2]

The political thinkers of that period would therefore have studied the political philosophy of Plato. Plato's "rigid rule" in Aristocracy was interpreted as dictatorship by Machiavelli. He thought of freeing the State from the domination by the Church. By introducting dictatorship, he felt that the Church would not interfere with the affairs of the State and both would be distinct in their functions.

While J. Bodin, Athuis and Crotius did not contradict Plato's philosophy, they agreed that the people have the right to elect their ruler and also to question and rebel against the ruler when he does not serve the good of the State. Crotius however said that the ruler elected by the people is the Divine representative, who cannot be removed from his office once elected Among the Renaissance philosophers, Campanalla was different. He did not agree with Plato and with the other philosophers of his time. He introduced monarchal rule with certain religious influence.

There are some agreements and also disagreements between Plato and Renaissance philosophers; yet both assert the rights of the people and give due recognition to morality in politics and in life.

1. C. F. Strong, **Modern Political Constitutions,** Sidgwick and Jackson Ltd.. London, 1952. p. 15.
2. William I. Reese, ' Renaissance" in **Dictionery of Philosophy and Religion,** p. 489.

## Reference


I. *Appardorai* — The substance of Politics, *The Diocesan Press Madras, 1942.*

II. *Bhagat* — Political Thought: Plato to Burke, *8th ed., New Academic Publishing Company, Jalandhar*

III. *Edwards, Paul* — (*Ed-in-chief*)., The Encyclopaedia of Philosophy, *Macmillan Publishing Co., Inc. and the Free Press, New York, 1967.*

IV. *Elliott, Florence* — A Dictionary of Politics, *Penguin Books Ltd., England, 1969.*

V. *Frost, S. E.* — Basic Teachings of the Great Philosophers; A survey of their Basic Ideas, *Dolphin Books, Doubleday and Co., Inc., Garden City New York, 1962.*

VI. *Shorcss, Louis* — (*Ed - in - chief*) '*Renaissance Political Development*' *in* Colliers Encyclopaedia, *Crowell-Collier Publishing Co., 1963. Vol. 7-8.*


Where the law ends, tyranny begins.

— **William Pitt**

Laws are silent in the midst of arms.

— **Cicero**

# சமயம் பற்றிய இருத்தலியலாளரின் அணுகுமுறை

## முக்கிய (மூன்று) இருத்தலியலாளரின் சமயம் பற்றிய கருத்துக்கள் கண்ணோட்டம்

செ. செபநேசரத்தினம்

### முன்னுரை

மேற்குலக தத்துவப்பார்வையில் நாத்திகவாதம் புதிதான, புதிரான புரட்சிகரமான கருத்தோட்டம் அல்ல, கடவுட் கோட்பாட்டை மறுதலித்து, மனிதக் கோட்பாட்டைப் புகுத்த முனைந்தவர்கள் பலர். கிரேக்க உலோகாயுத வாதத்திலிருந்து போயர்பார்க், கார்ல்மார்க்ஸ் வரை நீண்ட வரிசையில் பல சிந்தனையாளர்கள் தங்கள் பெயர்களைப் பதித்து. காலத்துக்குக் காலம் புதிய அணுகு முறைகளைப் பாவித்தும், புதிய சிந்தனைகளை உருவாக்கியும் கடவுட் கோட்பாட்டை தகர்த்துவிட முனைந்தனர் அவர்களில் மிக முக்கியமானவர்களின் வரிசையில் நீச்சே, சார்த்தர், மெர்லியு பொன்ரியும் அடங்குகின்றார்கள்.

நீச்சே' 'கடவுளின் மரணத்துடன் மனித இருப்பு அர்த்தம் இழக்கிறது. மனித வாழ்வு சூனியமாகிறது. மனித நம்பிக்கைத் தூண்கள் இடிந்து போகின்றன. இருப்பின் மறுபக்கமான இல்லாமை தலைநிமிர்கின்றது. இருப்பின் இல்லாமை பேருண்மையாக விஸ்வரூபப் பரிமாணம் கொள்கிறது', என்று கூறித் தனது கடவுள் கோட்பாட்டு எதிர்ப்புவாதத்தை ஆரம்பிப்பதையும், சார்த்தர் 'மனிதன் ஒன்றுமில்லாமையில் இருந்து உருப்பெறுகிறான். அவன் சுதந்திரமானவன், அவன் சுதந்திரமாகச் செயற்பட எதுவும் தடையாக அமையக்கூடாது' என்பதற்காக கடவுளை எதிர்ப்பதையும். மெர்லியு பொன்ரி 'உலகத்தில் இருக்கிறவர்களை, இருப்பவைகளைக் கொண்டு எமது புலன்களால் உண்மையை அறியமுடிவதன் காரணத்தால் நாம் அவற்றிற்கு பெயரிடுகிறோம். ஆகவே அதுபோன்று ஏனையவற்றிற்கும் பெயரிடமுடியும், உண்மைத் தன்மையை, பொருளை அறிய முடியும். ஆனால் கடவுள் என்றொருவரைச் சிந்தித்துப் பார்க்க முடியாது. ஆகவே அவரைப்பற்றிய தேவையும், இல்லை' என்கிறார்.

எனவே இந்த 'இருத்தலியல்' என்பது மானிடத்திற்கு முழுமையையும், உரிமையையும் வழங்கி, அவனே தலைவன், அவனைவிட சக்தி மிக்கது, பலம் வாய்ந்தது அனைத்தையும் நிராகரிக்கின்றது. இப்படியான கருத்துக்களே பின்தொடரும் நீச்சே' சார்த்தர், பொன்ரி ஆகியோரின் சிந்தனையிலிருந்து பெறப்படுகின்றன.

# நீச்சே (Nietzsche)

இருத்தலியல்வாதம் (Existentialism) காலம் காலமாக மனிதன் வளர்த்து வந்த பண்பாட்டுக் கோலங்களை, கட்டி - எழுப்பிய நம்பிக்கைகளை, அற நெறிகளை, மனித விழுமியங்களாகப் பாதுகாத்து அனுபவித்து வந்த உன்னத கோட்பாடுகளை நியாயமின்றி, கடவுள் எதிர்ப்புவாதம் என்ற போர்வையில் புதைகுழியில் தள்ளிவிட்டு, பதிலாக புதுமையானது, முதன்மையானது, புனிதமானது என்று தான் கருதியதை உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒரு பூமி அதிர்ச்சி போன்ற முறையில் முன்வைத்தது இவ்வாறு பலரது உணர்வுகளை அதிரவைக்கும் இருத்தலியலை முன்வைத்த ஒருவர்தான் ஜேர்மனிய தத்துவப் பேராசிரியர் ஃபிரிட்றிக் நீச்சே. (Fredrich Nietzsche, 1844 - 1900)

மனிதன், நம்பிக்கை என்ற மாயைகளை முட்டை கட்டி, சுமந்துகொள்ள முடியாத சுமைகளாக்கித் தனது சக்தி வரம்பிற்கு அப்பாற்பட்ட சுமையாகச் சுமந்து சென்றுகொண்டு சதா பொய்களைப் புசித்து போலி வாழ்க்கையை அமைந்துக் கொள்கின்றான். இல்லாத தொன்றைத் தேடி நாளும் பொழுதும் அலைகின்றான். அர்த்தம் இழந்திருக்கும் வாழ்வில் அர்த்தம் இருப்பதாக எண்ணி சஞ்சலமடைகின்றான். அவன் சதா தேடுவதும், அவன் எதிர்பார்த்துக் கிடப்பதும் அவனது வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்கும்அந்த மாயைப் பொருள், அவனைப் படைத்து, காத்து வருவதாக அவன் கற்பிதம் பண்ணும் அந்தக் கடவுள் எப்போதோ இறந்துவிட்டார் என்ற அதிர்ச்சியூட்டும் செய்தியை மனித வர்க்கத்திற்கு பறையறைந்து சொல்ல விழைகிறார் நீச்சே.

''கடவுள் இறந்து விட்டார், அவர் இறந்த நிலையிலேயே இருக்கின்றார். அவரது கொலைக்குப் பொறுப்பானவர்கள் நாங்கள் தான். இதனால் எமது கரங்களில் இரத்தம் உறைந்திருக்கிறது. எனவே வாருங்கள் இறந்த கடவுளைப் புதைப்போம். அவரது இந் நிகழ்வால் ஏற்பட்ட வெற்றிடத்தை யார் நிரப்ப முடியும்? எமது கரங்களில் படிந்திருக்கும் இரத்தக் கறையை யார் துடைக்க முடியும்? முன்பு கடவுளுக்கு எதிரான பாவமே பெரிய பாவமாகக் கருதப்பட்டது ஆனால் இப்போது பூமிக்கு எதிரான பாவமே மிகவும் பயங்கரமானது'' என்று கூறும் நீச்சே, எம்மை மண்ணின்மீது நம்பிக்கை வைக்கும்படியாக அழைப்பும் விடுக்கின்றார் மறு உலகத்தின் தன்மைகள், அமைப்புகள் பற்றி சிந்திப்போர்மீது நம்பிக்கை வைக்கக்கூடாது என்று எச்சரிப்பும் விடுக்கின்றார். ஏனென்றால் கடவுள் இறந்துவிட்டார்.

முன்னர், மனிதன் தன் வலுவையும் உள்ளுணர்வையும், புலனுணர்வையும் சார்ந்திருந்தான். அதன் காரணத்தினாலேயே அவன் தனக்கு வலிமையையும் சம்பாதித்துக் கொண்டான். இந்த வலிமை, துணிவை, திடத்தை மானிடத்திற்குக் கொடுத்தது இதன்வழியாக இயற்கையை வெற்றி கொண்டான். ஆனால் கிறிஸ்தவம் அவனது விரிவான உணர்வை, துணிவை மழுங்கடித்து விட்டது. கிறிஸ்தவம் தொட்டதனைத்தையும் மாசுபடுத்திவிட்டதுமட்டுமல்லாமல் உருவெடுத்த மறுமலர்ச்சியையும் மெதுவாக, ஆனால் திடகாத்திரமான முறையில், அழிவுக்கு இட்டுச் சென்றது. கிறிஸ்தவம் மனிதனை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவனை அடிமைப்படுத்திவிட்டது. எனவே மனிதன் ஒரு அடிமை மிருகமாக மாறினான். கிறிஸ்தவம் சொல்கிறது; ''தூயமனத்தோர் பேறுபெற்

றோர்''. ஆனால் நீச்சே வேறுவிதமாக, முரணானதாக ''பலம்மிக்கவர்கள் பாக்கியவான்கள், பராக்கிரமசாலிகள் இரட்சிக்கப்படுவார்கள், இரட்சிக்கப்படுபவர்கள் பராக்கிரமசாலிகள். எதிர்காலம் வல்லவனுக்குரியது. கடவுளைப் புதைப்போம வாரீர்'' என்று பலமாகச் சத்தமிடுகிறார்.

'மனிதன்' ஒரு பெரும் புதிர்; மாபெரும் பிரச்சனை; இயற்கையில் விலங்கியலைச் சேர்ந்ததன் காரணத்தால் அவனைப் புரிந்து கொள்வது இலகுவானதொன்றல்ல. ஏனெனில் அவன் இயற்கையிலிருந்து முற்றிலும் விடுபட்டுத் தனது இருப்பின் பொருளைத்தேட, அடுத்தவர்களின் பொருளைத்தேட, உண்மைத்தன்மையை அறிய முற்பட்டுள்ளான், அவன் வாழ்க்கையை, உலகை, பிறரைப் பார்த்து ஆய்ந்து அனுபவித்துப் புரிந்துகொள்கிறவன் என றார். கடவுளின் கைகளில் இதுவரை காலமும் மனிதன் ஒரு குழந்தையாக இருந்தான். ஆனால் இப்போது கடவுளின் இறப்பின் காரணமாக அவரது கைகளில் இருந்து விடுபட்டு, குழந்தைப் பருவத்தைத் தாண்டி வாழ்விற்குப் புதிய பரிமாணம் கொடுக்கப் புறப்பட்டதன் விளைவாகக் கடவுளின் இறப்பினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்ப முடியும். அவனால் தனித்து நிற்கவும் முடியும். சமயத்தினால் கொடுக்கப்பட்ட ஆதாரங்கள், சமாதானங்கள் இன்றி வாழப் பழகிக் கொள்ளவேண்டும் என்றும் அறைகூவல்விடுக்கின்றார்.

கடவுளை எம்மால் படைக்க முடியுமா? இல்லை. எனவே எல்லாக் கடவுள்பாலும் அமைதியாக இருப்போம். கடவுளின் இறப்பு ஏற்படுத்திய வெற்றிடத்தை, வெற்றிடமாகவிட முடியாது. அது நிரப்பப்பட வேண்டும், நிரப்பப்பட முடியும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் சாரதுஷ்டிரரின் வழியாக அதீத மனிதன் (Super man) பற்றி நீச்சே பேசுகிறார். மனிதனிடம் ஆதிக்க முனைப்பு (Will to Power) இருப்பதன் காரணத்தால் அவனை மேற்கொள்ளத் தேவையான ஒருவனாகவும், பூமியின் அர்த்தமாகவும் இந்த அதீத மனிதனை விபரிக்கின்றார். இந்த அதீத மனிதனே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு மாற்றீடாக சாரதுஷ்டிரரில் வலியுறுத்துகிறார். அந்த மனிதன கடவுளாக மீண்டும் வர முடியாது. காரணம் அதீத மனிதன், மிருகத்தனமானதெனக் கொள்ளப்படும் கீழ்மட்டத்திற்கு எதிராக மேல்மட்டத்தைக் கிளப்பியுள்ளான். மனிதனைப்பற்றிய வியாக்கியானத்தில் நாம் காண்பது யாதெனில், அசாதாரண மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையில் அவன் கயிறுபோலக் காணப்படுகின்றான்.

மனிதனால் கடவுளைப்போல வர முடியாது. ஆனால் அவருக்குச் சமமாக வரலாம் இதற்கு மேலாகவும் வளர வேண்டும். இதற்கு நீச்சே பயன்படுத்தும் ஒரு கூரிய கருவிதான் ''ஆதிக்க முனைப்பு''. இதனூடாக கடவுளுக்கு சமமாக வரலாம்.

ஆதிக்க முனைப்பு என்பது நீச்சேயின் மிகப் புகழ் பெற்ற கருத்தோவியம். இக்கருத்து கடவுள் நம்பிக்கைக்குப் பதிலாகத் தரப்படுகின்றது. இவரது சிந்தனைப் போக்கானது வல்லமை, வலிமை ஒன்றையே ஆயுதமாகக் கருதுகிறது. மனிதனின் மிக அடிப்படையான சாரம் ''சக்திசாதனைதான்'' என்ற முடிவுக்கு வரும் நீச்சே 'கடவுள் இறந்த பின்பு மனிதன் விடுவிக்கப்பட்டுள்ளான். அவன் சுதந்திரமானவன். ஆகவே அவன் ஏனைய அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டும். நவீன யுகத்தில் வாழும் மனிதன் முற்காலத்து மனிதன் போன்று வாழக்கூடாது ஏனென்றால் வார்த்தையிலும், பௌதீக மனிதனுக்கு வெளிப்

படாத சக்தி ஆதிக்கத்திலும், மனித படைப்பான புனித கவுள் ஆதிக்கத்தின் காலத்து மனிதன இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் வாழ்வு உண்டு என்ற ஆறுதலின் கீழ் இருந்துள்ளான். இப்போது அவன் விடுதலை பெற்றுவிட்ட அதீத மனிதன் மனிதனை சக்திபடைத்தவன் ஆக்குகிறான் ஆகவே கடவுளின் இடப்போடு யாவும் அஸ்தமமாகிவிட்டது இப்போது மிதியாக இருப்பது சுதந்திர மனிதனே என்கிறார்.

## ஜான்-போல் சார்த்தர் (Jean - Paul Sartre)

இருபதாம் நூற்றாண்டு மேனாட்டுச் சிந்தனையாளரில் சார்த்தர் ஒருவர்; (1905 – 1980) ; சர்ச்சைக்குள்ளானவர், புதிய, ஆனால் புரட்சிகரமான அணுகுமுறையைப் பயன்படுத்தி, தான் ஒரு நாஸ்திகன் என்று உலகறியப் பறைசாற்றினார். பிரான்சிய நாட்டு வியத்தகு நாடக ஆசிரியரும், தத்துவ சாஸ்திரியும். நாவல் எழுத்தாளருமாவார். ஜான் போல் சார்த்தர், சமயம், கடவுள் பற்றிய எதிர்ப்புணர்வை மூன்று பரிமாணங்களில் தருகின்றார். அவை யாவன பௌதிக அதீத இருப்பங்கள் தர்க்க சாஸ்திரம், நீதிநெறி.

முதலில் சார்த்தர் கூறுகிறார்: நாம் படைப்பாளியாகக் கடவுளைச் சிந்திக்கும்போது அவரை மிக உயர்ந்த வல்லமையுள்ளவராக. அதிக நேரம் சிந்திக்கிறோம். 18 ஆம் நூற்றாண்டின் சமகால தத்துவார்த்த நாஸ்திகக் கொள்கையானது எண்ணத்துக்கு உயர்ந்த ஒளியூட்டுகிறது அல்லது கடவுள் பற்றிய சிந்தனையை நசுக்கிவிட்டது ஏனென்றால் இருத்தல் சாராம்சத்திற்கு முதன்மையானது (Existence is prior to Essence) கடவுள் இருந்திராவிட்டால், சாராம்சத்திற்கு முன் ஒருவரின் இருத்தல் இருந்திருக்கும். முன் இருத்தலை (Existencc before essencc) எவ்வாறும், எந்த நிலையிலும் விளக்கலாம், என்றால் அதுதான் இருப்பிற்குரிய மனிதன். (That being is Man). ஆனால் உண்மையாகவே இருத்தல் சாராம்சத்திற்கு முதன்மையானதாக இருந்தால் மனிதனே எல்லாவற்றிற்கும் பொறுப்பு. ஏனெனில் அண்டம் அதன் இருப்பு நிலை பற்றியோ அல்லது சாரார்சம் பற்றியோ விளக்கம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. இருத்தலியல்வாதத்தின் முதன்மையான நோக்கு என்னவெனில் மனிதன் யார் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதன் ஊடாக அவனுடைய இருத்தலுக்கு முழுப்பொறுப்பையும் ஏற்படுத்துவது ஆகும். மனிதன் தனக்குப் பொறுப்பு என்று சொல்லும் போது அது தனியே அவனை மட்டும் சார்ந்த பொறுப்பு அல்ல, மாறாக முழு மானிடத்துக்குமான பொறுப்பாகும்.

இருத்தலியலாளரின் பார்வையில் மனிதனை வரையறுக்க முடியாது. ஏனென்றால் அவன் ஒன்றுமில்லாமையே. என்று சார்த்தர் குறிப்பிடுகிறார்.

"(ஒரு மனிதனுடைய நிலையில்) 'அவனது இருத்தல் சாராம்சத்துக்கு முன் செல்கிறது, என்று கூறுவதன் பொருள் என்ன? அதன் கருத்தாவது, முதலில் மனிதன் இருக்கிறான், உற்பத்தி செய்கிறான், அந்த இடத்தில் காட்சி தருகிறான்' இவற்றின் பின் தன்னை நிர்ணயிக்கிறான் ஒரு மனிதன் வரையறுக்க முடியாதவனாயின். அது ஏனெனில் முதலில் அவனில் ஒன்றுமில்லை. இதன் பின்பு ஏதோ ஒன்றாகத் தன்னை அவன் ஆக்கிக் கொள்வான்".

முதன் முதலில் எதிர்காலம் நோக்கி அவனிடம் ஒரு திட்டம் இருந்தது. ஒரு

புலம் பாசியிலும், குப்பையிலும், பூவிலும் பார்க்க, அவன் தன்னில் சவன மாக இருந்தான். மனிதனின் இத்திட் டத்திலும் பார்க்க எதுவும் மோட்சத் திலும் இருக்கவில்லை. மனிதன் எவ்வாறு ஆகவேண்டும் என்று திட்டி னானோ அவ்வாறுதான் இருந்தான். தான் விரும்பியவாறு அல்ல சித்தம் (Will) என்ற நிலையில் தன் நினைவுத் தீர்ப்பின்படி பின்தொடுத்தலுக்கு ஏற்ற வாறு அமைந்துவிட்டது எனலாம்.

'தானாக' என்ற வார்த்தைக்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று (வஸ்து) தன்னிலேயே இருத்தல் (Being in itself), மற்றது தனக்காக இருத்தல், (Being for itself) (வஸ்து) தன்னிலேயே இருத்தல் என்பது ஒரு பிரமாண்டமான, ஒரு நித்தியமான முழுமையான ஒன்று. ஆனால் இது முழுமையாக இருந்தாலும் முழுமையடைய வேண்டும் என்ற நிலை யிலும் இருக்கின்றது செயலாக இருந் தாலும் செயற்படாத நிலையில் இருக் கின்றது மேலும் எங்கிருந்து வந்தது. எப்படி இருக்கிறது என்பதோ தெரியாத ஒன்று.

'வஸ்து தனக்காக இருத்தல்' என்ற (being for itself) நிலைப்பாட்டில் மனிதன் ஏற்கனவே வஸ்து தன்னில் (being in itself) என்ற பிரமாண்ட மான வஸ்துவின் சூழலில் தோன்று கிறான் ஆனால் அவன் எங்கிருந்து வந் தான், ஏன் வந்தான் என்பது அவனுக் குத் தெரியாது. அவன் இயல்பில் சுதந் திர மனிதனாகவும் அவ்விதம் இருப்ப தற்கு நிர்ப்பந்திக்கப் பட்டுமுள்ளான். அவன் அதிலிருந்து விடுபட முடியாது. ஆனால் அவன் அச்சுதந்திரத்தின் ஊடாக அடிப்படைத் திட்டமான (Fundamental project) தனது முழுமை யாகும் நிலையை பெற விரும்புகிறான். அதாவது 'வஸ்து தன்னிலே' என்றதைப் போன்று முழுமை அல்லது நிறைவைக் காண முயற்சிக்கிறான். அதுவும் தனக் குள்ள சுதந்திரத்தை இழக்காமலே அடைய விரும்புகிறான். அதை அடைய முடியாமல் தத்தளிக்கிறான். இதனால் அவன் அங்கலாய்ப்பும் கவலையும் அடைகிறான். தனது அடிப்படைத் திட் டத்தை அடையமுடியா திருப்பதே துன்பம். நிறைவு காண முடி யாத சூழ்நிலையில் இயற்கையின் சூழலைச் சாய்ந்து அவைகளில் தங்கி நிற்பவனாகவும், நிற்கவேண்டியவனா கவும், அதாவது அதன் வெளிப்பாட்டில் தோன்றும் பல உருவங்களில் நம்பி கடவுள் என்ற கருத்தைக் கொண்டு செயற்படுவான். இதன் உண்மை என்ன வெனில் 'மனிதன் கடவுளே' என்ற தத்துவ அனுபவத்தை முன்வைக்கிறான். இவ்விதமான முயற்சியின் பிரயாணத் திலே அவனது வாழ்க்கை முறிவடை கிறது. ஆனால் அடிப்படைத் திட்டம் கைகூடாத நிலையில் முடிவடைகிறது.

இருத்தல் (Existence) தன்மையே மனிதனின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை இருக்கின்றது. மனிதனுக்கு கடந்தகாலம் இல்லை. அத்துடன் எதிர்காலமும் இல்லை. ஆனால் சார்த்தரின் கூற்றுப்படி மனிதன் உலகில் இருப்பைக் கொண்டவன் மாத் திரமல்ல, தானாகவே சுயமாகச் சிந் திக்கும் ஆற்றல் படைத்தவன் என் கிறார். ''என் இருத்தலுக்குச் சுயாதீனம் மிகவும் சரியான மூலப்பொருளாகும்,'' உண்மையான சுயாதீனம் என்பது வெளியார் எவராலும் மட்டுப்படுத்தப் பட முடியாததொன்றாகும் என்கி றார். எனவே மனிதன் தனது சொந்த எண்ணப்படி, தான் விரும்பியதைத் தெரிவு செய்யலாம்.

சுயாதீனம் என்பது கடவுளிட மிருந்தோ 'இருத்தல் தன்னிலே' என்ற திலிருந்தோ வந்தது அல்ல. தனது சுயா தீனச் சிந்தனைக்கு அப்பாற்பட்ட

நிலையில் அவனின் சுயாதீனத்துக்கு விளக்கம் இல்லை. சார்த்தர் சுயாதீனம் பற்றி பின்வருமாறு விளக்குகிறார். மனித உண்மை இருத்தலுக்கு கருத்துள்ள முடிவை பெற முடியாது. இயற்கையின் உள்ளிருந்தோ, வெளியிருந்தோ அம்முடிவைப் பெற முடியாது. ஆகவே என் இருத்தல் (இருப்பு) பற்றிய இறுதி முடிவை, எனது சுயாதீனம் கொண்ட இருத்தலின் திடீர் முடிவை (மறைவை) அடையாளம் காண முடியாது இது இருத்தலின் ஊடுருவல் (தன்மை) ஆகும். மனிதன் இயற்கையை பல உருவங்களில் கடவுள் என்று எண்ணி அதில் சார்ந்து நிற்கிறான். கடவுள்மீது நம்பிக்கை வைப்பது தன் இருப்பு நிலை தற்கொலை சூழலுக்கு தள்ளப்படுவதற்கு ஒப்பாகும். அந்நிலையில் மனிதன் இவ்வுலகில் எதுவுமே செய்ய முடியாதவனாவான். கடவுளின் இருப்பு நிலை இவ்வுலகில் வெளிப்படையாக, பூரணமாக, பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாக இருக்கின்றது இதற்காகத் தான் சார்த்தர் கடவுளைத் தட்டிக் கழிக்கிறார்.

சார்த்தர் மனிதனுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கிறார். அத்துடன் மனித விடுதலைக்குக் கடவுளை மறுக்கிறார். "மனிதன் சுயமாக இருப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறான். ஏனெனில் நிர்ப்பந்தம் என்பதற்கு அவன் தன்னைத்தானே படைக்கவில்லை இருந்தும் ஏனைய விடயங்களில் அவன் செய்யும் அனைத்துக்கும் பொறுப்பாளி ஆகிறான்.

மனிதனுக்கு மேற்பட்ட அனைத்துப் பொருட்களையும், கடவுளையும் மனிதனுக்கு இடம்கொடுப்பதற்காகச் சார்த்தர் நிராகரிக்கிறார்.

## மெர்லியூ பொன்ரி (Merleau Ponty)

நாஸ்திக சிந்தனையைப் பற்றிப் பேசுவோரின் நிரலில் இடம் பிடித்துக் கொண்டவர்களில் மெர்லியு பொன்ரியும் ஒருவர். இவர் பிரான்ஸ் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது அணுகுமுறை சற்று வித்தியாசமான ஆனால், ஆணித்தரமானதொன்றாகும். இவர் தன்னை நாத்தீகனாக காட்டிக் கொள்ளவிரும்பவில்லை. இவர் மற்றவர்களைப் போன்று கரடுமுரடான சிந்தனைப் போக்கை உடையவர் அல்லர். கொடூரமான முறையில் கடவுள் கோட்பாட்டையோ, கடவுளையோ, சமயத்தையோ சாடுபவருமல்லர். ஆனால் அமைதியான முறையில் கடவுள் கோட்பாட்டை, சமயத்தை வெறுக்கிறார்.

அவர் தனது சிந்தனைப் போக்கை இவ்வாறு ஆரம்பிக்கிறார். ஒரு தத்துவ ஞானி என்பவர் யாரெனில், உண்மை நிலையின் அடிப்படையைக் கண்டறிபவரே. ஆனால் அந்த தத்துவ ஞானி எதிர்காலத்தில் இருந்து உண்மை நிலையின் அடிப்படை உண்மையைக் கண்டறிய முயலவேண்டும். எதிர்காலத்துடன் தொடர்புடைய நிகழ்காலத்தை அளவுகோலாகப் பாவிக்கக்கூடாது. தற்போதைய எதார்த்த நிலையில்தான், நாம் உண்மையையோ, மதிப்பீடுகளையோ காண்கிறோம். அவற்றில் எனக்கும் மற்றவர்களுக்கும் தொடர்புண்டு எதார்த்த நிலையை உணர்வதன் (அறிவதன்) காரணத்தால் அவர் கடவுளை மறுக்கிறார். (By finding meaning for this reality, he calmly denies God) மனிதனின் இருப்பு நிலையானது தெளிவில்லாததொன்று. ஏனெனில் மனிதனின் அகத்தன்மைக்கும், புறத்தன்மைக்கும் அர்த்தம் காணப்பட வேண்டும். அதனைக் கண்டறிவதற்கு எனக்கு மற்றவர் உதவி செய்ய வேண்டும்.

பொன்ரீயின் வாதம் இதுதான். ஏனைய உண்மைநிலைகளுடன் மனித உண்மைநிலைகளை ஒப்பிடும்போது, மனித நிலை உயர்வானதாகும். எமது உணர்வுகளைக் கொண்டே, பொருள்களை உணர்கிறோம். எமது புலன்களைக் கொண்டு உணர்ந்தவைகளுக்கு நாம் பெயரிடுகிறோம். நாம் பெயரிடுதல் மாத்திரம் செய்யவில்லை அவற்றின் கருத்துக்கும், மதிப்பீட்டுக்கும் பெயரிடுகிறோம். அதேபோன்று எமக்கு நாம் பெயரிடலாம். ஆகவே நாம் கடவுளிலோ, பூரணமான ஒருவரிடமோ, தங்கியிருக்கத் தேவையில்லை. ஏனென்றால் எம்மால் பொருள்கூற முடியுமாயின், இருத்தலுக்குப் பெயரும் பொருளும் கூற இயலுமாயின், எமக்கு நாம் ஏன் பொருள் கூறமுடியாது? மனித அறிவுக்கு அப்பாற்பட்ட எதனையும் எம்மால் கற்பனைபண்ணிக்கூடப் பார்க்க முடியாது நம்மறிவுக் குட்பட்ட எதனையும் எம்மால் பெயரிட முடியுமென்றால் இருத்தல் தன்மைகளில் மாறி கொண்டிருக்கும் ஒவ்வொன்றுக்கும் பொருள், பெயர் கூறமுடியும். ஆகவே முடிவாகக் கூறுமிடத்து ''மனிதன் எனப்பட்டவன் உள்ளிருத்தலின் பொருளாகவும், மையமாகவும், வீரனாகவும் மாத்திரம் விளங்குகிறான்''.

பொன்ரி மேலும் குறிப்பிடுகையில், இவ்வையக தோற்றப்பாட்டு அநுபவங்களுக்கு அப்பால் தீர்க்கதரிசனம் பேசுபவர் பரிதாபகரமான தீர்க்கதரிசிகள். இந்த ஆவிகளுக்கெதிராகப் போராட வேண்டும். இது ஒவ்வொரு நாளும் மிகப் பரந்த அளவில் பரவி எமது தற்காலிகமான குருட்டுத் தீர்மானங்களையும், பொறுப்புகளையும் கோருகிறது. மேலும் அவர் கூறுகையில் நல்ல கருத்துக்கள் அனைத்தையும் தியாகம் செய்வது உண்மையானது என்றும், எமக்கு எது தேவையோ அதற்காக நாம் போராடவேண்டும் என்றும் கூறுகிறார். நாம் அனைத்தையும் நம்பமுடியாது. சிறப்பாக, தத்துவஞானிகளின் கோட்பாட்டு உண்மைகளின் திட்டங்களையும் ஏனைய சமய நிறுவனங்களின் கூற்றுக்களின் உண்மையையும் புலன்களுடாக உணர வேண்டும் என்கிறார் அதற்காக நாம் தொடர்புகளை உலகோடும், மனிதனோடும் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் தொடர்பை ஏற்படுத்தினால் மாத்திரம் உண்மைநிலையினை உணர முடியும். உண்மையின் தன்மை அனுபவிப்பதன் மூலம் ஒரு சில பரப்பனவில் 'இருத்தலின்' உண்மையை அடைய முடியும்.

சர்வ வல்லமையுள்ளவர் முன்னிலையில் மனிதனது சுதந்திரம் அழுக விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு அழிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் மனிதனின் செயல்களுக்கு கடவுள் என்ற அளவுகோல் இருக்கும்பொழுது மனிதனின் செயல்கள் கட்டுபடுத்தப்படுகின்றன. எனவே அவன் சுதந்திரப் பிறவியாகச் செயற்பட வழி இல்லை. மனிதனது முயற்சியின் பயனாக அறிந்த நீதிநெறிகள் கடவுள் தான் உண்மை என்று சொல்லுவதன் காரணத்தால், அர்த்தம் இழந்த அவன் ஓர் அடிமையாகவும், வேலையற்றவனாகவும் காணப்படுகின்றான். கடவுளின் எண்ணமானது மனிதனை இரு வழிகளில் சிந்திக்க வழி செய்ய வேண்டும். ஒன்று இவ்வுலக வாழ்க்கையின் மதிப்பீடுகளும், மறு உலகின் தெய்வீக மதிப்பீடுகளுமாகும். ஆகவே முரண்பட்ட இந்த ஈர்ப்புகள் பற்றி தெளிவு பெற வேண்டும். அவன் அந்த மதிப்பீடுகளை அடைய முடியாதிருப்பதின் காரணம் மனிதனின் அலட்சியப் போக்கு என்கிறார் பொன்ரி. மனிதன் தெய்வீகத் தன்மையை அடைய முடியாது என்று எண்ணினால், அவன் கடவுள் என்ற எண்ணத்தைப் புறக்கணித்துத் தள்ளுவதன் மூலம்தான் விடுதலையையும், நிறைவையும் காணமுடியும்.

இப்பொழுது நான் விடுதலை அடைந்துவிட்டேன் என்றால், மற்றவர்களும விடுதலை பெற்றுவிட்டார்கள் என்பது உண்மையானது ஆகவே பொன்ரி கூறுகிறார்: நான் என்னைப் பற்றி உணரும், அறியும் அதே நேரம் என்னுள் உள்ள தன்மைகள் போன்று மற்றவர்களிலும் உள்ளது என்பதன் மூலம் மற்றவர்களைப் பற்றியும் அறிகிறேன். எனது தனித்துவத்தைப் பற்றியும் அறிகிறேன். எனது தனித்துவத்தைப் பொறுத்து அதை ஆய்ந்து அளந்து நான் என்னைப் பிரதிபலிக்க வேண்டும். தத்துவம் கடவுளின் சிந்தனையோடு வளர்க்கப்பட முடியாது. மனிதன் கடவுளை நினைப்பது இயற்கையானதொன்று. இதனால் கடவுள் இருக்கிறாரென்று கருதக்கூடாது. உண்மையான தத்துவத்தின் அதிசயங்களை, புதுமைகளை, கடவுளின் இருத்தல் அழித்துவிட்டது. அழுக்கிவிட்டது இதன் காரணத்தால் கடவுளின் சிந்தனை மனிதனைத் தூண்டிக்கொண்டே இருக்கும்.

மனிதன் உண்மையான விடயங்களிலும்போலியான விடயங்களிலும் மற்றவர்களில் தங்கியிருக்கத் தேவையில்லை. கடவுளோடோ அல்லது வேறெந்த உயர்ந்த இயக்கங்களிலோ எதுவித தொடர்புமின்றி வாழவேண்டும். ஆனால் உலகோடும், மற்றவர்களோடும் அவன் தொடர்பு வைத்திருக்கலாம். உண்மையான தத்துவஞானியாயின், எவ்விதம் மனிதர்களுடைய இருத்தல் உறவுகளில் தொடர்புள்ளவையாய் இருக்கின்றன என்பதைச் சிந்திப்பான். உண்மையான தத்துவம் மனிதவர்க்க, சமூகவர்க்க சாஸ்திரங்களை மறைக்கிறது. ஏனென்றால், கடவுள் பற்றிய தோற்றப்பாடு அதிகரித்தும், என்னைப்பற்றிய, சமூகத்தைப் பற்றிய சிந்தனை குறைந்தும் காணப்படுவதே காரணம்.

புரட்சிக்கு முன்னர் சுரண்டல் தன்மைகள் இருந்தது. மார்க்சிய கொள்கைகள் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தி முதலாளித்துவத்திற்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கின இந்த எண்ணமானது பொன்ரியை மேலும் சிந்திக்க வைத்தது சுதந்திரத்தின் அடிப்படைத் தேவைபற்றிச் சிந்திக்க வைத்தது.

> ''ஏழைக்கு உணவளிக்கும்போது
> என்னைப் புனிதன் என்றார்கள்;
> ஏன் ஏழைக்கு உணவில்லை
> என்று கேள்வி எழுப்பும்போது
> என்னை கம்யூனிசவாதி என்றார்கள்''
>
> — டொம் ஹெல்டர் கமரா

# Atheistic Existentialism

S. Sebanesaratnam

(Synopsis)

Atheism is one of the serious problems of our times. There are many forms of atheism; namely Psycological, Anthropological and Marxistic. The latest is existentialism. In it, questions are raised about the existence of God. It has two parts; namely atheistic and theistic.

Many contemporary philosophers have spoken about atheistic existentialism, but only three important existential philosophers - Nietzche, Sartre and Merleau Ponty - are taken here.

Nietzche says that man can become God-like, since man is having 'will - to - power'. This will - to - power makes a man attain something. Without 'will' one will not make any affort to achieve something. This will - to - power makes a man become a super man. Then he himself becomes the response to his inner need for the super being, he named 'god'. To him the projected god is dead.

Sartre says "Existentialism is nothing other than an attempt to draw all the consequences of the coherent atheistic position". This system says that man is an end to himself and sole maker of, with supreme control over, his own history. Sartre has stressed the individuality and immensity of man's freedom in his writings. This thought has widely influenced his country as well as the outside world Individuals have begun to realize that they should assert their individuality by exercising their freedom.

M. Ponty emphasizes that man can attain meaning and value on earth itself. He calmly denies God by using the phenomenological approach.

He says that through our senses we identify things and name them. Therefore we can name our 'being'. So we need not think of a supernatural being; it can't be imagined or perceived through our senses. Yet it can be thought of by our intellect or mind and thereby we find truth in the world.

This system is very much a practical one. It is concerned with real things, with actual life and not with mere words as in many other philosophies. However one would not agree with all the implications of Atheistic Existentialism and its conclusive statement that man is the source of himself and his destiny. Though existentialistic doctrine on human freedom is attractive, it should not make outright, clearcut conclusion on man and his destiny, precisely because none can for certain predict the future course of history of the universe and particularly of man.

# முழு மனித விடுதலை —

## தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றின் விசேட குறிப்புகளுடன்

● அ. அகஸ்ரின்

### முன்னுரை

பாரெங்கும் பரந்துவாழும் மக்கள் அனைவரினதும் இன்றைய ஏக்கம், விருப்பம் அனைத்தும் விடுதலையே. அந்த விடுதலையை அடைவதற்காகப் பல அமைப்புக்கள் புறப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் விடுதலையை நாடியுள்ளனர். விடுதலை வேண்டும் என்று இன்றைய மனிதன் பிறரிடம் கையேந்தி நிற்கிறான். ஆனால் அவன் அவனுக்குள்ளேயே இருந்து அடக்கும் சக்திகளில் இருந்து விடுதலை பெறவேண்டும் என்பதை மறநது விடுகிறான். விடுதலை, சுதந்திரம் வேறு ஒருவரிடம் பெறும் பண்டமல்ல மாறாக அவனுக்குள்ளே அடிமைப்படுத்தி வைத்திருக்கும் காரணிகளே பெரும்பாலும் அவனை அரசியல் ரீதியாகவோ அன்றேல் பொருளாதார, சமூக, ஆன்மீக ரீதியாகவோ அடக்கியாளும் சக்தியாக விளங்குகின்றன. இங்கு, முதல் பகுதியில் விடுதலையின் நான்கு முகங்களை அதாவது அரசியல், பொருளாதார, சமூக, ஆன்மீக பரிமாணங்களின் கோட்பாடுகள் பற்றியும்; இரண்டாம் பகுதியில் விடுதலை அமைப்புக்கள் சிலவற்றின் பொதுவான தோற்றம், கொள்கை, செயற்பாடுகள், வளர்ச்சி பற்றியும்; மூன்றாம் பகுதியில் இன்று எவ்வாறு இலங்கையில் விசேடமாகத் தமிழர் வாழும் பகுதிகளில் அரசியல், பொருளாதார, சமூக, ஆன்மீக தலைப்புக்களில் செயற்பாடுகள் நடைபெறுகின்றன என்றும் ஆராய்வோம்.

### விடுதலையும் முழுமனித விடுதலை பற்றிய புரிந்துணர்வும்

விடுதலை அல்லது தளை நீக்கம் என்பது ஒருவனைக் கட்டுப்படுத்தும் அக, புறக் காரணிகளில் இருந்து விடுவிக்கப்படுவதைக் குறிக்கும். இதை தனிமனித தளை நீக்கம் அல்லது சமூக / தேசிய மட்டத்திலான தளைநீக்கமென வகைப்படுத்தலாம். முதலாவது ஒரு மனிதன் தான் விரும்புவதை சொல், செயல் வடிவில் ஏனையோர் பாதிப்புறா வண்ணம் புறக் காரணிகளின் தூண்டுதலின்றி சுயமாக வெளிப்படுத்தலைக் குறித்து நிற்கின்றது. அதிலும் மேலாக ஒருவன் தனக்குத் தானே இட்டுள்ள தளைகளிலிருந்தும் விடுதலைபெற வேண்டும். அவ்வாறு முதலில் அவன் அகத்தளை நீக்கம் செய்ய முடியவில்லையெனில் புறக்காரணிகளிடம் இருந்து தளைநீக்கத்தை எதிர்பார்க்கமுடியாது.

ஒவ்வொரு மனிதனும் பல்வேறுபட்ட புற அடிமைத்தனங்களில் இருந்தும் தளை நீக்கம் பெறவேண்டும். உ-ம் அரசியல், பொருளாதார, சமூக, ஆன்மீக அடிமைத்தனங்கள். எனவே முழு மனித விடுதலை எல்லா அடக்குமுறைச் சக்திகளின் அக, புறக் காரணங்களிலிருந்து தளைநீக்கம் செய்யப்படுதலையே குறிக்கின்றது.

## அரசியல் தளைநீக்கம்

அரசியல் தளை நீக்கம், அரசியல் ரீதியிலான அடக்குமுறைகளில் இருந்து விடுபடுவதைக் குறிக்கும். ஒரு நாட்டின் பிரஜைகள் தமது செயற்பாடுகளை எவ்வாறு தாமாகச் செய்ய உரிமை உண்டோ, அதாவது முடிந்த எல்லா வழிகளிலும் பொது நன்மைக்காகவும் தமது செயற்பாட்டை ஆரம்பிக்க உரிமையுண்டோ, அப்போதுதான் அவர்கள் அரசியல் தளை நீக்கத்தை அனுபவிப்பர். ஒரு நாட்டிலே ஒவ்வொரு தனி மனிதனுடைய சகல உரிமைகளும் மதிக்கப்பட்டு, அளிக்கப்பட்டு ஏனையோரைப் பாதிக்கா வகையில், அவன் தனது உரிமையைப் பயன்படுத்தவும் சந்தர்ப்பம் உண்டானால் அங்கே அரசியல் தளை நீக்கம் உண்டு.

## பொருளாதாரத் தளை நீக்கம்

பொருளியல் எனும்போது ஒரு சூழ்நிலையில் சொத்து உற்பத்தியாக்கப்படுவதையும் அதை மக்களுக்கிடையில் பங்கீட்டுப் பயன்படுத்துவதையும் குறிக்கின்றது. இங்கே சொத்து என்பது பொருளாதாரப் பண்டத்தைக் குறித்து நிற்கின்றது. இப்பொருளாதார முறையானது நான்கு வெவ்வேறு முறைகளை உள்ளடக்குகின்றது, அவை உற்பத்தி, பண்டமாற்று, விநியோகம் அல்லது பகிரல் உபயோகம் என்பனவாகும். இவை சம்பந்தமாக ஒரு நாடு இன்னொரு நாட்டின் அல்லது ஒரு சாரார் மற்றொரு சாராரில் தலையிடும்போது அங்கே பொருளாதாரத் தளை ஏற்படும். இப்படியான அடக்குமுறையில் இருந்து விடுபடுவது பொருளாதாரத் தளை நீக்கம் எனப்படும்.

## சமுதாயத் தளைநீக்கம்

சமுதாயத் தளை நீக்கம் என்பது சமுதாயத்தில் நிலவும் சமூகரீதியான அழுத்தங்களில் இருந்து விடுபடுவதைக் குறிக்கின்றது. சமுதாயத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் நிலவுகின்றன. இன, சாதி பாரபட்சம், பெண் அடிமைத்தனம், சீதனப் பிரச்சினைகள், சமய, மொழி, கல்விப் பிரச்சினைகள் போன்ற பல உள. இவற்றிற்கு அடிப்படையாகக் கணிக்கப்படுவது பிறப்பு, தொழில், நிறம், அறிவு, ஊதியம் என்பனவாகும். இப்படிப்பட்ட அடக்குமுறைகளில் இருந்து விடுபடுதல் சமுதாயத் தளை நீக்கமாகும்.

## ஆன்மீகத் தளை நீக்கம்

ஆன்மீகத் தளை நீக்கம் எனும்போது தீமையின் ஆதிக்கத்திலும் அதன் விளைவுகளிலும் இருந்து, அதாவது பாவத்தில் இருந்து, விடுதலை பெற்று மனிதனின் இறுதி நோக்கத்தை, அதாவது படைத்தவனுடன் மகிழ்வாக இணைந்து கொள்தலையே குறித்து நிற்கின்றது. இதையே எல்லா மதங்களும் பலவகையில் கூறிநிற்கின்றன. ஆன்மாவானது தான் பிரம்மாவுக்குள் இணைந்திருக்கும் நிலையை உணரும் நிமிடமே மறுபிறப்பிலிருந்து விடுதலை பெற்று முத்தி நிலை அடைகிறதென இந்து மக்களும்; மனதைத் தூய்மைப்படுத்தி, நல்லதைச் செய்து, தீவினையில் இருந்து விடுதலைபெறும்போது பரிநிர்வாண நிலையை அடையமுடியும் என பௌத்தர்களும், பாவத்தில் இருந்து விடுதலை பெறும்போது முடிவில்லா வாழ்வை

அடைய முடியும் என்று கிறிஸ்தவர்களும் கூறுகின்றனர். ஆன்மீக விடுதலை தனியாக இச்சமயங்கள் கூறுவதுபோல் ஒரு தனிநபர் சமுதாயத்தின் மட்டில் செய்யும் முறைகேடான தவறுகளில் இருந்து (பாவங்கள்) விடுபடுவதுடன் நின்றுவிடாது. அத்தோடு அவனுக்குள்ளே அடக்கும் அகக் காரணிகளிலிருந்து விடுபடுவதையும் உள்ளடக்கும்.

# விடுதலை இயக்கங்களின் வரலாறு

## பாலஸ்தீன விடுதலை இயக்கம் (P. L O.)

இஸ்ராயேல் யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடு. ஆனால் உரோமையர்களும் துருக்கியர்களும் முறையே இஸ்ராயேலை கைப்பற்றியபோது யூதர்களில் ஒரு பகுதியினர் அழிக்கப்பட்டார்கள். ஏனையோர் நாடு கடத்தப்பட்டனர். அகதிகளாகச் சென்றவர்களில் கிரேடர் என்பவரும் ஒருவராவர். அவர் அகதியாக இருந்த காலத்தில் எழுதிய நூலில் தாம மீண்டும் இஸ்ராயேல் திரும்பி வருவோம் என்று குறிப்பிடுகின்றார். அகதியாக இருந்த காலத்திலேயே தமது போராட்டத்திற்கு பணம் வேண்டுமென்று வங்கி ஒன்றை ஆரம்பித்து நிதி சேகரிக்கும் வேலையை ஆரம்பித்தார். ஆனால் 1930களில் மீண்டும் சர்வாதிகாரி ஹிட்லரின் தலைமையில் ஆறு மில்லியன் யூதர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால தாயகம் மீட்கும் முயற்சிகள் தொடர்ந்தன. 1947 இல் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தீர்மானத்தின்படி பாலஸ்தீனம், இஸ்ராயேல் என இரு இராச்சியங்கள் (States) அமைக்கப்பட்டன. ஆனால் பாலஸ்தீனர்கள் இந்த அமைப்பை எதிர்த்தார்கள். யூதர்கள் பாலஸ்தீனர்களுடன் சண்டை செய்து 1·1 மில்லியன் பாலஸ்தீனர்களை கொன்றொழித்தார்கள். ஏனையோர் அரபு நாடுகளுக்குட் தஞ்சம் புகுந்தபோது யூதர்கள் பாலஸ்தீனர்களின் பகுதியைக் கைப்பற்றினர். அகதிகளாகச் சென்ற பாலஸ்தீனர்கள் யசீர் அரபாத் தலைமையில் விடுதலை இயக்கம் ஒன்றை அமைத்தனர் இதற்கு எகிப்திய அதிபர், நாசார் உதவி அளித்தார். நாசார் ஐக்கிய அரபுக் குடியரசு' எனும் அமைப்பை 1967 இல் உருவாக்கி யூதர்களுக்கு எதிராகப் போர் தொடுத்தார். அது தோல்வியைத் தழுவியபோது. யசீர் அரபாத் 1969 இல் 'பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை' அமைத்தார். அவரது இடைவிடாப் போராட்டத்தின் பயனாக இன்று எழுவாய் பேச்சுவார்த்தைமூலம் பாலஸ்தீனம் ஓரளவு சுதந்திரம் பெற்றுள்ளது ஆனால் இன்னும் சுதந்திரம் அடையவேண்டிய சில பகுதிகள் உள்ளன. அவற்றில் இருந்தும் விடுதலை பெறும்போது அவர்கள் பெருமளவில் அரசியல் விடுதலை அடைய முடியும்.

## மகாத்மா காந்தியின் விடுதலை இயக்கம்

திரு கியூமினால் ஆரம்பிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் முழு அரசியல் விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்கவில்லை மாறாக பிரித்தானிய அரசிடம் இருந்து, ஆட்சியில் சில ஒழுங்கு மாற்றங்களை மட்டுமே கேட்டு நின்றது. ஆனால் காந்தி இந்திய மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் முழு மனித விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்தார் அது ஓர் ஆயுதப்போராட்டமல்ல மாறாக சாத்வீகப் போராட்டம். இத்தனைக்கும் அவர் இந்திய காங்கிரசில் ஓர் அங்கத்தவர்கூட இல்லை.

சுபாஸ் சந்திரபோஸ் இந்திய தேசிய காங்கிரசிலிருந்து விலகி ஓர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார். மலேசியாவை இராணுவ கேந்திர நிலையமாக்கி பிரித்தானியருக்கு எதிராகப் போரிட இந்திய தேசிய இராணுவத்தை ஆரம்பித்தார். ஆனால் பிரித்தானியா அவரது இராணுவத்தை அழித்தது 2 ஆம் உலக மகாயுத்தத்தின்போது போஸ் தலைமறைவாக, அவரது அமைப்பும் சுக்குநூறாகியது.

ஆனால் காந்தியின் அமைப்பு இந்தியாவிலேயே மக்கள் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டதால், நிலைத்து நின்றது. அவர்கள் தம்மை அடிமைப்படுத்திய பிரித்தானிய அரசை, சாத்வீகப்போராட்டத்தின்மூலம் எதிர்த்தார்கள். அதாவது உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், அரசின் ஒழுங்குவிதிகளை, சட்டங்களை மீறுதல், வெளிநாட்டு ஆடை வகைகளை அணியாமை, ஆர்ப்பாட்ட ஊர்வலம் போன்றவற்றின்மூலம் எதிர்த்தார்கள். காந்தியின் எளிய உடை, எளிய வாழ்க்கை முறை ஆகிய போராட்ட உத்திகளும் இந்திய மக்களின் வாழ்க்கை முறையுடன், சமய கலாச்சாரங்களுடன் ஒன்றுபட்டு இருந்தமையால், மக்கள் அவரை ஆதரித்தனர். அவரும் மக்கள் ஆதரவை நன்கு பெறக்கூடியதாக இருந்தது. பல்வேறு கலை கலாச்சாரங்களைக் கொண்ட இந்திய மக்களை ஒன்று திரட்டிய பெருமை காந்திக்கே உரியது. அதன் பயனாக 2 ஆம் உலகப்போரின் பின் இந்தியா சுதந்திரம் பெற்றது.

## ஈழத்தமிழர் பிரச்சனையின் வரலாறு

காலனித்துவ ஆட்சியாளர்களின் கீழும் சிங்கள ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தின்கீழும் :

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியரின் வருகைக்கு முன் இலங்கை கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் என்னும் மூன்று இராச்சியங்களாக இருந்தது. இலங்கை மக்கள் மலைநாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என அழைக்கப்பட்டனர். பிரித்தானியர் 1815 இல் இருந்து இலங்கை முழுவதையும் ஒரு குடையின்கீழ் ஆட்சி செய்தனர். டொனமூர் திட்டத்தின்கீழ், தேசிய மன்றம் (State Council) ஆக இருந்து சோல்பெரித் திட்டத்தின்கீழ் பாராளுமன்ற நிர்வாகமாக (Parliament Administration) மாறியது. 1919 இல் சேர் பொன் அருணாசலம் ஆரம்பித்த இலங்கைத் தேசிய காங்கிரஸ் கட்சி 1920இல் முறிவடைந்தது. 1930 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ் இளைஞர் காங்கிரஸ் 1931இல் நடந்த தேர்தலை பகிஷ்கரித்தது. டி. எஸ். சேனநாயக்காவினால் முன்வைக்கப்பட்ட உவர்வலய குடியேற்றத்திட்டத்தின்மூலம் தமிழர் தாயகக் காணிகள் சுவீகரிக்கப்பட்டன. 1944இல் ஜி ஜி பொன்னம்பலம் 50 : 50 என்ற கோரிக்கையை முன்வைத்தார். ஆனால் அவர் சுயநன்மைக்காக அதிலிருந்து விலகிக் கொண்டார். இலங்கை சுதந்திரம் பெற்றபோது பெரும்பான்மைச் சிங்களவரைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிக்குட்பட்டது. 1949 இல் செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். இக்காலத்தில் ஆங்கிலம் அரச மொழியாக இருந்தது. ஆனால் 1956 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிங்களம் மட்டும் சட்டம் 'Sinhala only Act' மூலம் பண்டாரநாயக்கா சிங்களத்தை அரசகரும மொழியாக்கினார். இவை அனைத்தும் இனப்பிரச்சினை ஏற்பட சில முக்கிய காரணங்களாக அமைந்தன. அதனால் தமிழர்கள் பல வழிகளிலும் அடக்குமுறைக்கு உள்ளாகினர்.

இவற்றிற்கு தீர்வு காணும் நோக்கில் பல்வேறு காலப்பகுதிகளில் பலருக்கிடையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. பின் அவை அனைத்தும் பலனின்றி முறிவடைந்தன. 1972இல் இலங்கை குடியரசு ஆக்கப்பட்டதுடன் பௌத்த மதம் அரச மதமாகியது. 1973 இல் கல்வியில் தரப்படுத்தல் தமிழ் மாணவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டது 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி சுதந்திர நாட்டைத் தமிழினம் வேண்டிநின்றது. 1977 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடகிழக்கில் வெற்றியீட்டியது அத்தோடு இரு இனத்தவருக்கும் இடையிலான உறவு நிலை மோசமடைந்தது.

1956, 1958, 1977, 1979, 1981, 1983 களில் சிங்கள அரசு தமிழ் மக்கள் மீது இனக்கலவரத்தைத் தூண்டி பலாத்காரத்தை கட்டவிழ்த்துவிட்டது. இவற்றில் 83 கலவரம் மிகவும் மோசமானது. இவையெல்லாம் சேர்ந்து தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்த வழிவகுத்தது. பல இயக்கங்கள் உருப்பெற்று வெளிநாடுகளில் பயிற்சி பெற்று, தமிழர் சுதந்திரத்துக்காகப் போராடின. இவற்றில் 7 அமைப்புக்கள் உறுதியாக இருந்தன. இவற்றிற்கு முகம்கொடுக்க முடியாத கட்டத்தில் 1985 இல் திம்பு பேச்சுவார்த்தை இடம்பெற்று, தோல்வியில் முடிவுற்றது, தமிழ் மக்களின் விடுதலை என்ற ஆர்வத்தில் எழுந்த தமிழ் இயக்கங்களுக்கிடையில் வளர்ந்த புரிந்துணர்வின்மை, கொள்கைக் கோட்பாட்டு விரிசல்கள் ஆகியவற்றால் காலகதியில் பல ஓரங்கட்டப்பட்டுவிட்டன.

தமிழ்ப் பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த முன்வந்த இந்திய அரசும் இராணுவமும், தமிழ் மக்களின், போராளிகளின் நிலைப்பாட்டை விளங்காமல், உணராமல் செயற்பட்டு போராளிகளுடன் சமர்புரிய வேண்டிய நிலைக்குட்பட்டு தமிழ் மக்களின் உயிர் உடைமைகளுக்கு அழிவையும் ஏற்படுத்தினர். தமிழ் மக்களின் அதிருப்தியையும் தேடிக்கொண்டனர் இக்காலத்தில் இந்திய அரசின் துணையுடன் இலங்கை அரசு மாகாணசபைத் தேர்தலை நடத்தியது. ஆயினும் அதன்மூலம் அது எதிர்பார்த்த குறிக்கோளை அடைய முடியவில்லை.

இலங்கை அரசின் அழைப்பின்பேரில் த. வி. பு. பேச்சுவார்த்தையில் இறங்கிய பின் இலங்கை அரசின் வேண்டுகோளின்படி இந்திய அமைதிப்படை இந்நாட்டிலிருந்து திரும்பியது. மீண்டும் பேச்சுவார்த்தை முறிவடைந்து 11-6-90 முதல் மீண்டும் யுத்தம் தொடங்கியது சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் தமிழ் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக இப்போர் சொல்லிலடங்காத துன்பங்கள் துயரங்கள், உயிர், பொருள் இழப்புக்கள், தியாகங்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

## ஈழத்தமிழ் சமூகத்தின் முழு மனித விடுதலை நோக்கி....

### அரசியல் தளை நீக்கம்

இலங்கை அந்நிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்றுவரை தமிழர்கள் நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டு, சிங்கள அரசின் ஆட்சி வெறிக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். தமிழ் இனம் தான் எடுக்கவேண்டிய தீர்மானங்களை, பெரும்பான்மையினம் எடுப்பதால் அடக்குமுறையும், அந்நியப்படுத்தலும் தொடர்கின்றன, அரசியல் சுதந்திரம் என்பது கட்சிமாற்றத்தால் வருவதொன்

றல்ல, மாறாக ஒரு இனம் தனது செயற்பாடுகளைத் தாமாகச் செய்ய உரிமை பெறுகிற பொழுது அரசியல் தளைநீக்கம் கிடைக்கும் இலங்கையில் தமிழன் என்றொரு இனம் உண்டு. அவன் ஆண்டாண்டு காலம் வாழ்ந்து ஆண்டு வந்த நிலமுண்டு. அவனுக்கென்றொரு மொழி, பண்பாடு, கலை, கலாச்சாரம், வாழ்க்கைமுறை, சூழல் ஆகியவை உண்டு. எனவே ஒரு இனம் தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுவதற்கு வேண்டிய அனைத்து விதிமுறையையும பூர்த்தி செய்யும் தமிழ் இனம் சுய நிர்ணய உரிமையுடையது. தாங்களே தமது நிலைபற்றித் தீர்மானிக்க உரிமையுடையவர்கள் அவர்களுக்காக பெரும்பான்மையினம் தீர்மானம் எடுப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததொன்று. ஏனெனில் பெரும்பான்மையினத்தின் தீர்மானம் எப்போதும் தங்கள் பக்கம் சார்ந்ததாகவே இருக்கும். எனவே தேசிய ரீதியில் தமிழினம் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் அனைத்து அடக்குமுறைகளிலிருந்தும் விடுபட்டு, சுதந்திரமாக வாழ உரிமையுடையவர்கள். அந்த உரிமை மறுக்கப்படமுடியாது. மாறாக அளிக்கப்படவேண்டும்.

தனித்துவம் கொண்டு, சுயநிர்ணய நிலையைத் தீர்மானிக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும் தமிழினம் தன்னுள்ளே பல அரசியல் கொள்கைகள், அணுகுமுறைகளைக் கொண்டிருக்கின்றது. இருந்தபொழுதும் களத்தில் செயற்படும் போராளிகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் தமிழ்த் தேசிய பற்றுக் கொண்டு செயற்படக்கூடிய மனப்பான்மை உருவாக்கப்பட்டு, நல்ல நெறிமுறையிலும் அடிப்படையிலும் வளர்க்கப்படவேண்டும். எவ்வித வேறுபாடுகள் எழும்பொழுதும் அவற்றை நல்லுள்ளத்துடன் உரையாடல்மூலம் அணுகி, விட்டுக்கொடுக்கக்கூடியவற்றில் விட்டுக் கொடுத்து சிலவற்றைக் கழித்து. தேசிய மனப்பான்மையுடைய ஒருங்கிணைந்த இனமாகக் கட்டியெழுப்புதலிலேதான் அரசியல் தளை நீக்கம் திருப்திகரமான இலட்சியப் போக்குடையதாக அமையும்.

## பொருளாதாரத் தளை நீக்கம்

தமிழினம் சுயசார்புப் பொருளாதாரக் கொள்கைமூலம் தமது பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கக் கூடிய நிலையிலிருந்தபோதும், சிங்கள அரசில் தங்கிவாழ வேண்டியிருந்தது. அதன் பொருளாதாரத் தடைகளாலும் தமிழர் வாழும் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளை அது ஊக்குவிக்காது மூடியும் அழித்தும் வந்ததாலும் தமிழினம் பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டது அந்நிலையிலிருந்து விடுதலை காண வேண்டுமெனின் சுயசார்புப் பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டு தங்கிவாழும் நிலை நீக்கப்படவேண்டும். அதாவது தமிழ் மண்ணில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி, அங்கு தேவையானவற்றை உற்பத்திசெய்து மேலதிகமானவற்றை வேற்றுநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து பண்டமாற்றுமூலம் தமக்கு தேவையானவற்றை பிறநாடுகளிலிருந்து பெறவேண்டும். தமது பொருளாதார நிலையை தாமே நிர்ணயிக்கும்பொழுது பொருளாதார ரீதியில் நிறைவுகண்டு அதன் மூலம் பொருளாதார தளை நீக்கத்தை ஓரளவு பெறலாம்.

இதிலும் மிக முக்கியமானதென்னவெனில், நம் மண்ணில் உள்ள வளங்களின் மூலம் உயர்வு பெறும் அதே வேளையில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பொருளாதார ரீதியில் உள்ளவன் இல்லாதவன் என்ற ஏற்றத் தாழ்வின்றி திருப்திகரமான பொருண்மிய நிலை உருவாக வழி வகுக்கப்படவேண்டும்.

மேலதிகமான அந்நிய செலாவணியைக் கொண்டு வறுமையிலுள்ள நாடுகளின் பொருளாதார நிலையை

உயர்த்த உதவ முன்வருவது மனித சமுதாயத்திற்கு செய்யும் பெரும் சேவையாகும். அதன்மூலமே பொருளாதாரத் தளை நீக்கத்தின் அர்த்தம் முழுமை பெறும்.

## சமூகத் தளை நீக்கம்

தமிழ்ச் சமூகத்தின் பிறப்பாலும் தொழிலாலும் ஏற்பட்ட சாதிப் பிரச்சினை இன்று வளர்ந்துள்ளது நாமெல்லோரும் தமிழர், ஆண்டவரின் படைப்பால் சகோதரர் என்ற உணர்வில் ஒருவரையொருவர் சமமாக ஏற்று வருமானத்திற்காகவும் வாழ்க்கை வசதிக்காகவுமே ஒவ்வொரு தொழிலைப் பழகினோம் என்பதை உணர்ந்து வாழும் போதுதான் இப்பிரச்சினை தீர்வதற்கு வழிவகுக்கப்படும். ஆலயம் தொழுவதில் வேறுபாடு காட்டாது நாமெல்லோரும் இறை மக்கள், அவரைத் தொழ உரிமையுடையவர்கள், கடமைப் பட்டவர்கள், அதில் சாதிக்கொரு முறையில்லை. சாதிக்கொரு கடவுளில்லை என்பதை உணர்ந்து எல்லோரும் சுதந்திரமாகவும் சமமாகவும் படைத்தவனை வழிபடும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

பிள்ளைகள் வாழவேண்டும் என்பதற்குக் கொடுக்கும் உதவிக்கு மாறாக, பெண் திருமணத்தில் கடையில் விற்கப்படும் பொருளாகவோ ஏலவிற்பனையில் போகும் பொருளாகவோ மாறும் நிலை உருவாவதை தடை செய்தே ஆகவேண்டும். அதற்கான வழிவகைகளைத் தேடவேண்டும். அந்நிலை உருவாக அவசியம் வழிதேடினால்தான் குடும்பத்தில் பெண்குழந்தைகள் சுமை என்ற எண்ணம் நீங்கும். குழந்தைகள் செல்வம் என்று போற்றப்படுவர். குடும்ப வாழ்க்கையை நாடும் பெண்களின் நலன் பேணப்படும். குழந்தைப் பருவத்திலிருந்தே மனித வாழ்க்கையின் அடிப்படையான சமயம், அரசியல், ஆண் பெண்பால், தொழில் வேறுபாடுகள் ஏற்றத் தாழ்வுக்கோ பிரிவினை பாராட்டுவதற்கோ அல்ல. சமூகம் முழுமை பெறுவதற்கு அவசியமானவை என்பதை புகட்டி மனதில் ஆழப் பதிக்க வேண்டும். மேலும் கடவுள் எல்லோருக்கும் தந்தை. நாம் அவர் பிள்ளைகள் – எமக்குள் நாம் சகோதரங்கள் என்ற மனப்பான்மை எச் சூழ்நிலையிலும் உள்ளங்களில் ஊறவேண்டும். அம்பொழுதுதான் சமூகத்திலும் சமயத்திலும் ஒருமைப்பாடு உதயமாகும்.

மேலும் கல்வியில் தொழில் மையப் படுத்தி கற்கும் முறை எல்லாத்துறையிலும் இருக்கின்றது. எனினும் விஞ்ஞானம், கலை என்ற முறையில் ஏற்றத் தாழ்வுடன் கணிக்கும் மனப்பாங்கு நீங்கி, கல்வியின் உயர்வு மதிக்கப் பட்டு அதற்கும் மேலாக பண்பாளனாக வருபவரே கல்விமான் என்ற மேன்மையான நோக்கம் தமிழ் மக்கள் மத்தியில் ஓங்கவேண்டும் அந்நிலை உருவாகும்பொழுதுதான் மக்களுள் நிலவும் ஏற்றத்தாழ்வு நிலை மாறி கல்வியில் குறைந்தவனையும் கல்வி இல்லாதவனையும் மனித மாண்போடு நோக்கும் மனப்பக்குவம் எம்மில் வரும்.

## ஆத்மீகத் தளை நீக்கம்

மனிதனுக்குரிய தன்மைகளுடன் வாழ எம்மண்ணில் தடையாய் இருக்கும் அனைத்து வெளித் தளைகளில் இருந்தும் விடுபட முழு முனைப்புடன் முயன்று கொண்டிருக்கும் வேளையில் எமது அகத் தளைகளிலிருந்து விடுபடுவதும் மிக முக்கியமாகும். என் குடும்பம், என் நண்பர், என் ஆதரவாளர் என்ற உறவுகள் இருந்தபொழுதும் அதற்கப்பால் எம்மக்கள், அவர்களது ஒற்றுமை, ஐக்கியம், அவர்களுக்கு நீதி என்பவற்றை முன்வைத்தால் மிதமிஞ்சிய சுயநலம் ஒழிந்து நான் என்பதற்கு பதி

லாய் நாம் என்ற பரந்த இதயம் தோன்றும். நான் என்ற அகந்தை தேய்ந்து ஒழிந்துவிடும். அங்கு தீமையின் நிழல் எத்தோற்றத்திலும் உருவாக வாய்ப்புகள் அரிதாகும். எதிரி எமமில், எம்மண்ணில் எவரையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, எம்மக்களின் ஒற்றுமையைப் பிளவுபடுத்துவது மிகக் கடினமாகும்.

இதனால்தான் ஆத்மீக விடுதலை முழு மனித விடுதலையின் மையமாகி இருக்கின்றது. இதனால்ததான் அக நிலையின் முக்கியத்துவத்தை ஆண்டவர் கிறீஸ்து பின்வருமாறு கூறுகிறார்; புறத்தேயிருந்து மனிதனுக்குள்ளே சென்று மாசுபடுத்துவது ஒன்றுமில்லை, மனிதனுக்குள்ளேயிருந்து வெளியே றுவதே அவனை மாசுபடுத்தும் (மாற்கு 7/15)

இவ்விடயம் பற்றி பகவத்கீதை மிகவும் அழகாக சொல்லுகின்றது. 'நான்' என்ற தன்மையிலிருந்து விடுபட வேண்வேண்டும். இககருத்தின் உச்சமாக கிறிஸ்தவ வேதாகமம் பின்வருமாறு கூறுகின்றது; ஆண்டவர் ஆவி எங்கே இருக்கின்றாரோ அங்கே விடுதலை உண்டு. (2 கொரி 3/17)

நாம் மனித மாண்போடு வாழ வேண்டுமென்று உளமார ஆசிப்பது இறை விருப்பமே அதற்காக அனைத்து தளைகளையும் அறுக்க முற்படுமபொழுது, மனித சமுதாயத்தின் மேல் கொண்ட உண்மையான அன்பினல் (குறிப்பாக தமிழினத்தின் விடிவிற்காய்) செயற்படும்பொழுது தளைகள் அகத்திலும் புறத்திலும அழிந்துபோகும். எனவே அகத்தின் தளைகளிலிருந்து எவன் விடுபடுகிறானோ அவனே உண்மையான சுதந்திர மனிதன்.

## முடிவுரை

விடுதலை எனும்போது, அது அடிமைத் தளைகளில் இருந்து நீக்கப்படுவதைக் குறித்து நிறகிறது. முழு மனித விடுதலை அடைய எல்லா அம்சங்களிலும் மனிதன் தளை நீக்கம் பெறவேண்டும். ஒன்றில் அதிகமாகவும் இன்னொன்றில் குறைவாகவும் என்றில்லாமல் நான்கு அம்சங்களிலும் சீராகப் பெறவேண்டும். ஏனெனில் ஒன்றில் குறை இருக்கும் போது அது முழுமனித விடுதலைக்கு குந்தகமாக அமையும்.

> ஒருவன் விடுதலையுடனிருந்தும் பெரியவனாகாதிருக்கலாம்;
> ஆனால் எவனும் விடுதலையின்றி
> பெரியவனாக மலர முடியாது.
>
> — கலீல் கிப்ரான்

# Integral Human Liberation with Particular Reference to the Tamils' Freedom Struggle in Sri Lanka.

A Augustine

**(Summary)**

The thirst and cry for freedom is a common phenomenon all over the world. Everyone is striving for internal and external freedom. Integral Human liberation includes Political, Economical, Social and Spiritual liberation. The struggle for freedom gains ground wherever oppression and suppression exist. Such situations have been the nursary for liberation movements springing up. The P. L. O., the Ghandhian movement in India and the Tamil movements are good examples.

During the period of Colonialism the people of Ceylon were suppressed by the Colonial Masters. Continual struggle against them brought about one phase of liberation. However the Tamils passed into the domination by the Sinhala Rulers. So they had to continue fighting for their freedom. Thus some liberation movements came into being. Due to power struggle, corruption and quarelling, most of them got eliminated.

The I. P. K. F. came to Sri Lanka in 1987 as a peace keeping force. They, lacking sincerity of purpose, failed to bring about a just peace. The situation deteriorated to such an extent that the L.T.T.E. were forced to confront them at war. After their departure, the talks with the Sri Lankan Government too failed resulting in the outbreak of the current war.

If true integral human liberation is to be realized among the Tamils, the consciousness of our belonging to a Tamil nation has to strike deep roots. Struggle for political liberation needs be balanced with that for economical, social and spiritual liberation We must strive for self sufficiency in economy through self help economic projects, using chiefly local resources.

Special effort should be taken to overcome the internal oppressive forces within the community and to achieve spiritual liberation from the forces deeply embedded within ourselves in order to give momentum and adequate meaning to integral human liberation.

*A man can be free wihout being great*
*but no man can be great without being free.*

— **Khalil Gibran**

" அறிவறி வென்ற அறிவு மனாதி
அறிவுக் கறிவாய் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியின் பிறப்பதுந் தானே "

— **திருமந்திரம்**

அன்னை அச்சகம், குருநகர், யாழ்ப்பாணம்.

# பொருளடக்கம் — Contents


○ அதிபரின் ஆசிச் செய்தி 04
Message of the Rector 04

○ ஆசிரியரின் அறிமுகம் 05
Editor's Introduction 07

○ மெய்யியலும் அதன் நடைமுறைப் பயன்பாடுகளும் 09
S. ஸ்ரீபன்
(Philosophy and its Practical Values) 15

○ 'மனிதன்' என்றும் ஆழம் அறியமுடியாத ஒரு புதிரே 17
D. A. ஜோசப், Ph. D.
(Man is a Mystery) 21

○ தத்துவம் என்றும் மானிடத்திற்கு ஒரு பசுமை ஒளியே 23
V. யுகபாலசிங்கம், M. A. (Phil)
(Philosophy as a Green Light for all Human Beings) 28

○ படைப்பா? கூர்ப்பா? மனிதனின் தோற்றம் - ஓர் அறிமுகம் 29
A. ஆனந்தக்குமார்
(Creation or Evolution) 33

○ வாழ்வின் அர்த்தம் தேடும் மனிதன் 34
இதயதாஸ்
(Man's Search for Meaning of Life) 38

○ பிளேற்றோவினதும் மறுமலர்ச்சிக் காலத்தினதும்
அரசியல் மெய்யியல் தத்துவங்கள் 39
P. F. இராஜசிங்கம்
(A Comparison of Plato's Republic with the Political Philosophy of Renaissance) 44

○ சமயம் பற்றிய இருத்தலியலாளரின் அணுகுமுறை 46
S. செபநேசரத்தினம்
(Atheistic Existentialism) 54

○ முழு மனித விடுதலை 55
அ. அகஸ்ரின்
(Integral Human Liberation with Particular Reference to the Tamils' Freedom Struggle in Sri Lanka.) 63